Jesus' Footsteps (TAMIL)

# இயேசுவின் அடிச்சுவடுகள்

பாக்கிய வசனங்களின்
அடிப்படையில்
கிறிஸ்துவின்
வாழ்க்கையிலிருந்து
படிப்பினைகள்

**R. ஸ்டான்லி**

# இயேசுவின் அடிச்சுவடுகள்

**நான்கு சுவிசேஷங்களிலுமிருந்து
நாம் பின்பற்றவேண்டிய
கிறிஸ்துவின் வாழ்க்கை**

**R. ஸ்டான்லி,** B.E.,M.TECH.,

*திருமறைப் போதகராய் மாறிய
ஒரு கட்டிடப் பொறியியலர்*

2011 ஆகஸ்டு 13-15இல் காரைக்குடியில் நடந்த
இயேசுவின் அடிச்சுவடுகள் முகாமில்
ஆசிரியர் கொடுத்த செய்திகள்

Evangeline Jones
13 Church Colony
Vellore 632 006, India
<*evangeline@stanleyonbible.com*>

**Jesus' Footsteps** (Tamil)

Copyright 2018 R. STANLEY
13 Church Colony
Vellore 632 006

*00 91 98437 07600*
*00 91 98430 11943*

First Edition: January 2018

Available in English also.

திருமறையின் பழைய மற்றும் புதிய மொழியாக்கங்கள்
இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளன.

Typesetting & Pagesetting by
Mr. K. Gunasekaran,
Retired Missionary, Blessing Youth Mission

Price Rs. 60/-

Printed by
New Shenbagam Offset,
Sivakasi

# அர்ப்பணிப்பு

1960களில் எனது மாணவப் பருவத்திலிருந்து
எனது வாழ்வில் பெரும் தாக்கம் ஏற்படுத்திய
*Herald of His Coming*
என்ற உலகப் புகழ்பெற்ற
மாதாந்திர எழுப்புதல் பத்திரிகையின்
நிறுவன ஆசிரியர்களான
**W. C. Moore (1890-1980)**
மற்றும் அவரது துணைவியார்
**Sarah Foulkes Moore (1890-1973)**
ஆகியோரின் நினைவாக!



# உள்ளே


1. இயேசுவின் அடிச்சுவடுகள் ... 5
(Jesus' Footsteps)
2. எளிமையின் அடிச்சுவடுகள் ... 13
(Footsteps of Poorness)
3. வேட்கையின் அடிச்சுவடுகள் ... 31
(Footsteps of Passion)
4. இரக்கத்தின் அடிச்சுவடுகள் ... 55
(Footsteps of Pity)
5. தூய்மையின் அடிச்சுவடுகள் ... 75
(Footsteps of Purity)
6. சமாதானத்தின் அடிச்சுவடுகள் ... 93
(Footsteps of Peace)
7. வேதனையின் அடிச்சுவடுகள் ... 115
(Footsteps of Pain)






# 1
# இயேசுவின் அடிச்சுவடுகள்
## Jesus' Footsteps

கடவுள் என்னை அபிஷேகித்து இந்தியா எங்கிலுமிருந்து கூடி வந்திருந்த 750 விசுவாசிகளுக்கு 2010ஆம் ஆண்டு மூன்று நாட்கள் பிரசங்கிக்க உதவினார். தமிழகத்திலுள்ள காரைக்குடியில் நடந்த இந்த மூன்று நாள் கூடுகை ''பூர்வ பாதைகள் முகாம்'' (Old Paths Retreat) என்றழைக்கப்பட்டது. அதற்கான கருப்பொருள் திருவசனம் எரேமியா 6:16, ''வழிகளில் நின்று, **பூர்வ பாதைகள்** எவை என்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதில் நடந்திடுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு **இளைப்பாறுதல்** கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.'' திருவசனம் எனும் பூர்வ பாதை, ஆவியானவர்மீது சார்பு எனும் பூர்வ பாதை, தனித்திருத்தல் எனும் பூர்வ பாதை, எளிமை எனும் பூர்வ பாதை, தியாகம் எனும் பூர்வ பாதை, ஆத்துமாதாயம் எனும் பூர்வ பாதை ஆகியவற்றிற்குத் திரும்பிவரும்படியான ஆறு அழைப்புகளில் செய்திகள் தரப்பட்டன. திரும்பி வந்து ஆதிநிலை ஏகுதல் என்பதையடுத்த இச்செய்திகள் முகாமில் பங்குபெற்றோரைப் பெரிதும் பக்திவிருத்தியடையச் செய்தன. இச்செய்திகள் *''பூர்வ பாதைகள்''* எனும் தலைப்பில் 132 பக்க நூலாய் வெளியிடப்பட்டன.

இதேவிதமான இன்னொரு முகாமை 2011இல் ஒழுங்கு செய்து அதில் அதிமுக்கியமான கருப்பொருளாகிய **''இயேசுவின் அடிச்சுவடுகள்''** என்பதனைத் தியானிக்க வேண்டுமென்று கர்த்தர் என்னை நடத்தினார். இந்த முகாமை ''இயேசுவின் அடிச்சுவடுகள் முகாம்'' (Jesus' Footsteps Retreat) என்று அழைக்கிறோம். இதில் நாம் தியானிக்கவேண்டிய கருப்பொருள் திருவசனம் மத்தேயு 11:28-30, ''வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள்; நான் உங்களுக்கு **இளைப்பாறுதல்**

தருவேன். நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; என் நுகத்தை உங்கள்மீது ஏற்றுக்கொண்டு, என்னிடம் கற்றுக்கொள் ளுங்கள்; அப்பொழுது, உங்கள் ஆத்துமாக்களுக்கு **இளைப்பாறுதல்** கிடைக்கும். என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக் கிறது'' என்றார் இயேசு.

இந்த இரு முகாம்களின் கருப்பொருள் வசனங்களும் ''இளைப் பாறுதலை'' வாக்களிக்கின்றன என்பதைக் கவனித்தீர்களா? இளைப் பாறுதல் என்பது பூரண சமாதானம், பரம திருப்தி, விடுதலை, வெற்றி என்றெல்லாம் பொருள்படும். ஆனால் ''வருத்தம், பாரம், நுகம்'' என்றெல்லாம் ஆண்டவர் எதனைக் குறிப்பிட்டார்? அன்று இவ்வார்த்தைகளைக் கேட்டோர் இதனை எப்படிப் புரிந்துகொண் டனர்? அவர்கள் பழைய ஏற்பாட்டை அறிந்திருந்தவர்கள் ஆனதால் அதின் சூழமைவிலேயே நாமும் இதனைப் புரிந்துகொள்ளவேண் டும். ''நுகம்'' மற்றும் ''பாரம்'' என்று இயேசு எதனைக் குறிப்பிட் டாரென்று புரிந்துகொள்ளக் கீழ்க்கண்ட திருவசனங்கள் நமக்கு உதவும் —

ஆதியாகமம் 3:17-19, ''பூமி உன் பொருட்டு சபிக்கப்பட்டி ருக்கும்; நீ உயிரோடிருக்கும் காலமெல்லாம் **வருத்தத்துடன்** அதின் விளைவை உண்ணுவாய் ... அது உனக்கு முட்செடிகளையும் முட்புதரையும் முளைப்பிக்கும் ... நெற்றி **வியர்வை** நிலத்தில் விழ நீ உழைத்து உன் உணவை உண்பாய்.'' வாழ்வின் பொதுவான வருத்தத்தை இப்பகுதி குறிப்பிடுகின்றது.

யோபு 5:7; 14:1, **''துன்பத்திற்கென்றே** தோன்றினர் மனிதர் ... மனிதருக்கு வாழ்நாளோ குறைவு; **வருத்தமோ** மிகுதி.''

சங்கீதம் 38:4, ''என் குற்றங்கள் தலைக்குமேல் போய்விட்டன; தாங்க முடியாச் **சுமை** போல அவை என்னை வெகுவாய் அழுத்து கின்றன.''

சங்கீதம் 90:10, ''எங்கள் வாழ்நாள் எழுபது ஆண்டுகளே; வலிமை மிகுந்தோர்க்கு எண்பது; அவற்றில் பெருமைக்கு உரியன **துன்பமும் துயரமுமே**.''

பிரசங்கி 2:22,23, ''உலகில் மனிதர் எடுத்த எல்லா முயற்சிக் காகவும் வகுத்த செயல் திட்டங்களுக்காகவும் அவர்களுக்குக்



கிடைக்கும் பயன் என்ன? வாழ்நாளெல்லாம் அவர்களுக்குத் **துன்பம்**; வேலையில் **தொந்தரவு**; இரவிலும் அவர்களது மனத்திற்கு **அமைதியில்லை**.''

ஏசாயா 61:1,3, ''கர்த்தராகிய தேவனது ஆவியானவர் என்மீது இருக்கிறார் ... **துயருற்று** அழுவோர்க்கு ஆறுதல் அளிக்கவும் ... **சாம்பலுக்குப்** பதிலாக அழகு மாலை அணிவிக்கவும், **புலம்பலுக்குப்** பதிலாக ஆனந்த தைலம் வழங்கவும், **நலிவுற்ற** நெஞ்சத்திற்குப் பதிலாகத் துதியின் உடை கொடுக்கவும் அவர் என்னை அனுப் பினார்.''

மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் குறிப்பிட்டு அப்போஸ் தலன் பேதுரு கேட்டது, ''நமது பிதாக்களாலும், நம்மாலும் சுமக்க முடியாதிருந்த **நுகத்தடியைச்** சீடர் கழுத்தின்மீது சுமத்துவதினால் நீங்கள் தேவனைச் சோதிப்பானேன்?'' (அப் 15:10). கலாத்தியா விசு வாசிகளுக்கு அப்போஸ்தலன் பவுல் அறிவுறுத்தியது: ''நீங்கள் மறு படியும் அடிமைத்தனத்தின் **நுகத்திற்கு** உட்படாது, கிறிஸ்து நமக்கு உண்டாக்கின நிலைமையில் நிலைகொண்டிருங்கள்'' (கலா 5:1).

இயேசு வாக்குப்பண்ணிய ''இளைப்பாறுதல்'' என்பதை மேற்குறிப்பிட்ட வசனங்களின் அடிப்படையிலேயே புரிந்துகொள்ள வேண்டும். அவரது ''சாந்தமும் மனத்தாழ்மையுமே'' நமக்கு இளைப் பாறுதலை உறுதியளிக்கின்றன. இயேசுவிடமிருந்து கற்பது அல்லது பெறுவது எதுவும் அவரது இந்த அடிப்படைக் குணாதிசயத்தினா லேயே. எனவேதான் கொரிந்தியக் கிறிஸ்தவர்க்கு அப்போஸ்தலன் இப்படி எழுதினார்: ''பவுலாகிய நான் கிறிஸ்துவின் **சாந்தத்தையும் தயவையும்** முன்னிட்டு உங்களுக்கு அறிவுறுத்துகிறேன்'' (2 கொரி 10:1). ''உமது **காருண்யம்** என்னைப் பெரியவனாக்கிற்று'' என்று சங்கீதக்காரன் தாவீது தேவனிடம் அறிக்கையிட்டதில் ஆச்சரிய மில்லையே! (சங் 18:35). தாவீதுடன் சேர்ந்து நான் சொல்ல விரும்புவது: ''நான் இருப்பதும், என்னிடம் இருப்பதும் ஆண்டவரது சாந்தம், காருண்யம், மனத்தாழ்மை ஆகியவற்றினாலேயே!''

கிறிஸ்துவைப்பற்றிய பிரசங்கங்கள் இன்று பெரும்பாலும் அவரது வல்லமையையும் அற்புதங்களையுமே மையப்படுத்துகின் றன. அவரது வாழ்க்கையை அடுத்த படிப்பினைகளோ ஓய்வு நாள் சிறுவர் பள்ளியோடு முடிந்துவிடுகின்றன. கிறிஸ்துவைப்பற்றிய

நூல்களும் குறைவு. பிலிப் யான்சி என்பவரது *"Jesus I never knew"* என்ற ஆங்கில நூலும், S. பரமானந்தம் ஐயர் (1873-1960) எழுதிய *''கிறிஸ்துவின் ஜீவியம்''* என்ற நூலும் தலைசிறந்தவை.

கிறிஸ்துவையே பைபிள் மையமாய்க் கொண்டுள்ளது. அவரைக் குறித்துச் சான்று பகருபவை வேத வாக்கியங்களே என்பதை அவற்றை ஆராய்ந்து பார்த்த பெரும்பாலானோர் அவரது காலத்தில் புரிந்துகொள்ளவில்லை (யோ 5:39). உயிர்த்தெழுந்த கர்த்தர் ''வேத வாக்கியங்கள் எல்லாவற்றிலும்'' தம்மைக் குறித்துச் சொல்லியவைகளை எம்மாவூர்ச் சீடருக்கு விவரித்துக் காட்டினார் (லூக் 24:27,44). ''இயேசுவைப்பற்றிய சாட்சியே தீர்க்கதரிசனத்தின் சாரமாய் இருக்கிறது'' என்று வெளிப்படுத்தல் புத்தகத்தில் தேவதூதன் முடிவாய்க் கூறினான் (வெளி 19:10இ). பழைய ஏற்பாட்டிலேயே அப்படியென்றால், புதிய ஏற்பாட்டில் இன்னும் எவ்வளவு அதிகமாய் இயேசு வெளிப்படுவார்! புதிய ஏற்பாட்டின் 27 புத்தகங்களில் நாம் அவரை எப்படிப்பட்டவராய்ச் சந்திக்கிறோம் எனப் பார்ப்போம் —

| | |
|---|---|
| *மத்தேயு* | ... யூதருக்கு அரசர் |
| *மாற்கு* | ... யேகோவாவின் பணியாளர் |
| *லூக்கா* | ... மனுமகன் |
| *யோவான்* | ... இறைமகன் |
| *அப்போஸ்தலர்* | ... பரமேறிய கர்த்தர் |
| *ரோமர்* | ... நமது நீதியானவர் |
| *1 & 2 கொரிந்தியர்* | ... இறந்தோரிலிருந்து முதற்பலனானவர் |
| *கலாத்தியர்* | ... நியாயப்பிரமாணத்தின் முடிவானவர் |
| *எபேசியர்* | ... திருச்சபையின் அடித்தளமானவர் |
| *பிலிப்பியர்* | ... உயர்த்தப்பட்ட அடிமையானவர் |
| *கொலோசெயர்* | ... அனைத்தையும் உண்டாக்கித் தாங்குபவர் |
| *1 தெசலோனிக்கேயர்* | ... திருச்சபைக்காய்த் திரும்ப வருபவர் |
| *2 தெசலோனிக்கேயர்* | ... உலகை நியாயந்தீர்க்க வருபவர் |
| *1 தீமோத்தேயு* | ... தேவனுக்கும் மனிதனுக்கும் ஒரே நடுவர் |
| *2 தீமோத்தேயு* | ... உயிருள்ளோருக்கும் இறந்தோருக்கும் நீதியரசர் |



| | |
|---|---|
| *தீத்து* | ... நமது இரட்சகராகிய தேவன் |
| *பிலேமோன்* | ... நமக்காய்ச் சிபாரிசு செய்பவர் |
| *எபிரெயர்* | ... உண்மையுள்ள பிரதான ஆசாரியர் |
| *யாக்கோபு* | ... மகிமையின் கர்த்தர் |
| *1 பேதுரு* | ... நமது ஆத்துமாக்களின் மேய்ப்பர் |
| *2 பேதுரு* | ... கனமும் மகிமையும் பெற்றவர் |
| *1,2,3 யோவான்* | ... மனுவுடலான வார்த்தையானவர் |
| *யூதா* | ... ஞானமுள்ள ஒரே தேவன் |
| *வெளிப்படுத்தல்* | ... இராஜாதி இராஜா |

புதிய ஏற்பாட்டைப் பொதுவாக இரு பிரிவுகளாய்ப் பிரிக்கலாம்: சுவிசேஷங்கள், நிருபங்கள். கிறிஸ்துவின் வாழ்க்கை எப்படியிருந்தது என்று சுவிசேஷங்களில் பார்க்கிறோம்; கிறிஸ்துவின் வாழ்க்கையை நாம் எப்படி அப்பியாசிக்கவேண்டும் என்று நிருபங்களில் படிக்கிறோம். இன்னொரு முறை நான்கு சுவிசேஷங்களையும் நேரமெடுத்து வாசித்துப் பார்த்து இயேசுவின் அடிச்சுவடுகளைக் கவனியுங்கள்.

கிறிஸ்துவின் வாழ்க்கையை நாம் ஆராயும்போது அவரது இரு தன்மைகளைச் சமநிலைப்படுத்தவேண்டும்: ஒன்று அவரது தெய்வீகம் (divinity), அடுத்தது அவரது மானிடம் (humanity). இயேசுவின் வாழ்க்கையில் தெய்வீகமும் மானிடமும் இரண்டறக் கலந்திருந்தன. இதோ சில எடுத்துக்காட்டு வசனங்கள்: கொலோ 2:9, ''தெய்வத்துவத்தின் பரிபூரணம் எல்லாம் உடலுருவில் அவருக்குள் குடிகொண்டிருக் கிறது.'' எபி 2:17, ''எல்லா விதத்திலும் அவர் தமது சகோதரருக்கு ஒப்பாகவேண்டியதாயிற்று.'' இவ்விரண்டு வசனங்கள் மற்றும் விவிலியத்தின் பல்வேறு வசனப் பகுதிகளின் அடிப்படையில் நாம் தைரியமாய்ச் சொல்லக்கூடியது என்னவெனில், ''இயேசு வானவர் மண்ணுலகிற்குள் வந்தபோது, மனுவுடல் எடுத்தாலும், அவர் தேவனானவர் என்பது மறைந்துவிடவில்லை.'' அவரது தெய்வீகத்தை உயர்த்தி, அவரது மானிடத்தை இறக்குவதால், நாம் அவரை மகிமைப்படுத்துகிறோம் என்று நினைக்கக்கூடாது. அது தேவனது நித்தியத் திட்டத்திற்கு மாறானது.

கிறிஸ்துவின் மானிடத்தை அப்போஸ்தலர்கள் எப்பொழுதும் குறைக்கவில்லை. அப்போஸ்தலர் நடபடிகளில் கிறிஸ்துவை லூக்கா ஏழு இடங்களில் ''நாசரேத்து இயேசு'' என்று குறிப்பிடுகிறார் (2:22; 3:6; 4:10; 6:14; 10:38; 22:8; 26:9). கலாத்தியர் நிருபத்தையும் பாருங்கள். இங்கு கிறிஸ்துவை அப்போஸ்தலன் பவுல் ''பெண்ணிடம் பிறந்த'' கடவுளின் மகன் என்றழைக்கிறார் (கலா 4:4). யாக்கோபை ''ஆண்டவரின் சகோதரன்'' என்கிறார் (1:19). கிறிஸ்துவின் மானிடத்தை மறுதலிப்பது விசுவாசத் துரோகம் என அப்போஸ்தலன் யோவான் சுட்டிக்காட்டுவதைக் கவனியுங்கள்: 1 யோ 4:2,3, ''மனுவுடலில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணும் எந்த ஆவியும் கடவுளால் உண்டாயிருக்கிறது. மனுவுடலில் வந்த இயேசு கிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் கடவுளால் உண்டானதல்ல ... அதுவே அந்திக்கிறிஸ்துவின் (எதிர்க்கிறிஸ்துவின்) ஆவி.'' தனது இரண்டாம் நிருபத்திலும் யோவான் இதனை அழுத்திக் கூறுகிறார்: 2 யோ 7, ''ஏமாற்றுவோர் பலர் உலகில் தோன்றியுள்ளனர். இயேசு கிறிஸ்து மனிதராக வந்தவர் என்பதை இவர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. இவர்களே ஏமாற்றுக்காரர், எதிர்க் கிறிஸ்துகள்.'' அப்படியானால், ''நாங்கள் கிறிஸ்துவை மாம்சத்தின்படி (மனித முறைப்படி) அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும் அவரை மாம்சத்தின்படி அறியோம்'' என்று அப்போஸ்தலன் பவுல் கூறியதேன்? (2 கொரி 5:16). நியாயப்பிரமாணத்தின் மூலம் ஏற்பட்ட தண்டனைத் தீர்ப்பையும் கிறிஸ்து மூலம் தேவனோடு ஒப்புரவாகுதலையுமே இவ்வசனப் பகுதியில் பவுல் வேறுபடுத்திக் காட்டுகிறார் (வச 18,19). பழைய உடன்படிக்கை அகன்றுபோவதையும் புதிய உடன்படிக்கை அமுலுக்கு வருவதையும் 17ஆம் வசனத்திலேயே அவர் குறிப்பிடுகிறார். கிறிஸ்துவே நியாயப்பிரமாணத்தின் முடிவானவர் (ரோ 10:4). யூத இனப் பெருமைக்கு இங்கு இடமில்லை.

இந்தப் பின்னணியோடு நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைக் கவனிக்கத் தொடங்குவோம். நமது தியானத்திற்கு அடிப்படையாக மலைப்பிரசங்கத்தில் கிறிஸ்து வரிசைப்படுத்திய பாக்கிய வசனங்களை (Beatitudes) எடுத்துக்கொண்டுள்ளேன் (மத் 5:3-10).



ஏனென்றால் இந்த பாக்கிய வசனங்கள் இயேசுவில் அப்படியே உருவெடுத்தன! எட்டு பாக்கிய வசனங்களை ஆறு தலைப்புகளாய்ப் பிரித்துள்ளேன் —

*1) எளிமையின் அடிச்சுவடுகள் (Poorness)*

பாக்கிய வசனங்கள் 1 & 3

''ஆவியில் எளிமையுள்ளோர் பாக்கியவான்கள்.''

''சாந்தகுணமுள்ளோர் பாக்கியவான்கள்.''

*2) வேட்கையின் அடிச்சுவடுகள் (Passion)*

பாக்கிய வசனங்கள் 2 & 4

''துயரப்படுவோர் பாக்கியவான்கள்.''

''பசி, தாகமுள்ளோர் பாக்கியவான்கள்.''

*3) இரக்கத்தின் அடிச்சுவடுகள் (Pity)*

பாக்கிய வசனம் 5

''இரக்கமுள்ளோர் பாக்கியவான்கள்.''

*4) தூய்மையின் அடிச்சுவடுகள் (Purity)*

பாக்கிய வசனம் 6

''இருதயத்தில் சுத்தமுள்ளோர் பாக்கியவான்கள்.''

*5) சமாதானத்தின் அடிச்சுவடுகள் (Peace)*

பாக்கிய வசனம் 7

''சமாதானம் பண்ணுவோர் பாக்கியவான்கள்.''

*6) வேதனையின் அடிச்சுவடுகள் (Pain)*

பாக்கிய வசனம் 8

''நீதிக்காய்த் துன்புறுத்தப்படுவோர் பாக்கியவான்கள்.''

கிறிஸ்துவின் இந்தக் குணாதிசயங்களை மனதிற்கொண்டு மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷங்கள் வழியாகப் பயணிப்போம். அடுத்தடுத்துள்ள சுவிசேஷங்களில் திரும்பத் திரும்ப வருவனவற்றை மறுபடி விளக்கமாட்டோம். இந்த வேத ஆராய்ச்சியானது கால வரிசையில் அல்ல, புத்தகங்கள் வரிசையிலேயே அமையும்.






# ௨
# எளிமையின் அடிச்சுவடுகள்
## Footsteps of Poorness

‘‘ஆவியில் எளிமையுள்ளோர் பாக்கியவான்கள் ... சாந்தகுணமுள்ளோர் பாக்கியவான்கள்’’ (மத் 5:3,5). இவை இயேசுவின் முதலாம் மற்றும் மூன்றாம் பாக்கிய வசனங்கள். அவரிடமிருந்து நாம் பிரதானமாய்க் கற்கவேண்டுமென்று அவர் விடும் அழைப்பு இதுவே: ‘‘என்னிடம் கற்றுக்கொள்ளுங்கள்; நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்’’ (11:29). இந்த எளிமை என்பது பொருளாதார ஏழ்மையையே குறிக்கும் என்று சொல்ல முடியாது. ‘‘ஆவியில்’’ எளிமை என்றே இயேசு குறிப்பிட்டார். தாவீதரசனுக்கு இல்லாத பொன்னா, பொருளா? ஆனாலும் அவர் வேண்டியது: சங் 86:1, ‘‘கர்த்தாவே, உமது செவியைச் சாய்த்து, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்; நான் சிறுமையும் எளிமையுமானவன்.’’ பொதுவாக, பொருளாதாரத்தில் ஏழ்மையாயிருப்போர் தாழ்மையும் சாந்தமும் கொண்ட மனத்தோராய் இருப்பர்; செல்வந்தரோ அகந்தையும் அகம்பாவமும் கொண்டிருப்பர். ஏழ்மையானவனுக்கு ஆவியில் எளிமையாயிருப்பது எளிது. செல்வந்தரோ தாழ்மையையும், எளிமையையும் அணியவேண்டுமானால் கடினமான பல தெரிவுகள் செய்யவேண்டியதிருக்கும். இது எனது கற்பனையோ, யூகமோ அல்ல. தனது நிருபத்தில் அப்போஸ்தலன் யாக்கோபு இதனையே குறிப்பிடுகிறார்: ‘‘என் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, நான் சொல்வதைக் கேளுங்கள்: உலகின் பார்வையில் ஏழைகளாய் இருப்பவர்களை விசுவாசத்தில் செல்வந்தர்களாகவும், தம்மீது அன்பு செலுத்துவோருக்கு வாக்களிக்கப்பட்ட அரசை உரிமைப்பேறாகப் பெறுபவர்களாகவும் கடவுள் தேர்ந்துகொள்ளவில்லையா? நீங்களோ ஏழைகளை அவமதிக்கிறீர்கள். உங்களைக் கொடுமைப்படுத்தி நீதிமன்றத்திற்கு இழுத்துச் செல்வோர் யார்? செல்வர் அல்லவா? கடவுள் உங்களுக்குக் கொடுத்துள்ள

நற்பெயரைப் பழிப்பவர்களும் அவர்கள் அல்லவா?'' (யாக் 2:5-7). ஆவியில் எளிமையுள்ளோருக்கே விண்ணரசு என்றார் இயேசு; ஏழ்மையிலிருப்போரை இறையரசின் உரிமையாளராயிருக்கக் கடவுள் தெரிந்துகொண்டார் என்கிறார் யாக்கோபு. திருமறைப் பகுதிகளை ஒன்றுசேர்க்கும்போதுதான் தேவனது முழு ஆலோசனையையும் அறிந்துகொள்ள முடியும்.

எளிமைக்கு எதிரான குணங்களைக் குறிப்பிட்டால் எளிமை என்பதற்குப் பொருள் இன்னும் தெளிவாகும்: பெருமை, அகம்பாவம், செருக்கு, மனமேட்டிமை, இதயக் கடினம், முரட்டுத்தனம், ஆணவம், மிதமிஞ்சிய தன்னம்பிக்கை, பகட்டு, பந்தா, பிடிவாதம், போன்றவை. இத்தீய குணங்கள் நம்மில் காணப்படாதிருக்க ஆண்டவர் உதவுவாராக!

■ இப்பொழுது நாம் இயேசுவை உற்றுநோக்குவோம். தேவாலயத்திலிருந்த இறைநூல் வல்லுநர் கண்டபடி பன்னிரண்டு வயதில் இயேசுவுக்கு இருந்த ஞானம் அவரது வயதிற்கு மிஞ்சியது (லூக் 2:46,47). ஆனாலும் அவர் ஒருபோதும் தலைக்கனத்திற்கு இடங்கொடுக்கவில்லை. அறிவுப் பெருக்கத்தால் உண்டாகும் இறுமாப்பு அவரிடம் இல்லை (1 கொரி 8:1). அவர் பணிவுடன் தமது பெற்றோருக்குக் கீழ்ப்படிந்திருந்தார் (லூக் 2:51). அறிவும் தகவலும் பெருத்துள்ள இக்காலத்து வாலிபர் நங்கையருக்கு இது முக்கிய படிப்பினை.

■ கலிலேயாவிலுள்ள நாசரேத் எனும் ஊரில் இயேசு வளர்ந்தார் (மத் 2:22,23). பாலஸ்தீன நாட்டிலேயே மிகவும் பின்தங்கிய பகுதியே கலிலேயா. சமுதாயத்தில் பின்தங்கியோர்தான் இங்கு பெருவாரியாக வாழ்ந்தனர். சாதாரண வேலைகளில் ஈடுபட்டிருந்தோரது குடியிருப்புகள் இங்குதானிருந்தன. அவர்களில் பாதிக்கு மேற்பட்டோர் புறவினத்தார். எனவேதான் அது ''புறவினத்தாரின் கலிலேயா'' என்றழைக்கப்பட்டது (மத் 4:15). நாசரேத்து இயேசுவைக் கண்டோம் என்று நாத்தான்வேலிடம் பிலிப்பு சொன்னபோது, நாத்தான்வேல் கேட்டது, ''நாசரேத்திலிருந்து நன்மையா?'' (யோ 1:45,46). இது



அன்றைய வழக்கச் சொற்களாம்! இயேசுவைப் பாராட்டிப் பரிசேயருடன் நிக்கொதேமு விவாதித்தபோது அவர்கள் விட்ட சவால்: ''நீரும் கலிலேயரா என்ன? மறைநூலைத் துருவி ஆய்ந்து பாரும். அப்போது கலிலேயாவிலிருந்து இறைவாக்கினர் (தீர்க்கதரிசி) யாரும் தோன்றுவதில்லை என்பதை அறிந்துகொள்வீர்'' (யோ 7:50-52). இப்பின்னணியை உங்களால் புரிந்துகொள்ள முடிகிறதா? இந்த நூற்றாண்டிலும் நமது நாட்டில் தீண்டப்படாதவர்கள் என்போர் மட்டுமே வாழும் குடிசைப் பகுதிகள் இல்லையா? இவ்விதமானதோர் இடத்தில் குடியிருக்கும்படி இயேசுவைத் தேவன் அனுப்பினாரே! குருத்தோலை ஞாயிறன்று, ''இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு'' என்று மக்கள் ஆர்ப்பரித்தபோது தேவாலயத் தலைவர்கள் கொதித்தெழுந்ததில் ஆச்சரியமில்லையே! (மத் 21:11).

■ இயேசுவானவர் தமது சீடரைத் தெரிந்தெடுத்த விதத்திலும் அவரது எளிமையின் ஆவி வெளிப்பட்டது. அவர்கள் பெரும்பாலும் கலிலேயரே. சீமோன் பேதுரு இயேசுவை மறுதலித்துக்கொண்டிருந்தபோது, ''நீயும் கலிலேயனாகிய இயேசுவோடு இருந்தவன்தான்; உன் பேச்சே உன்னைக் காட்டிக்கொடுக்கிறது'' என்றனர் அங்கிருந்தோர் (மத் 26:69,73). கலிலேயரது பேச்சுப்பாணி அவ்வளவு விரும்பத்தக்கதாயில்லை என்பது இங்கு தெளிவு. இயேசுவானவர் விண்ணேறியபோது, குழம்பிய மனதுடன் அவரது சீடர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்து நின்றனர். விண்ணிலிருந்து வந்த இரு தூதர் அவர்களைக் ''கலிலேய மனிதரே'' என்றழைத்தனர் (அப் 1:11). ஆம், சமுதாயத்தில் உயர்மட்டத்தினராயிருந்த வேதபாரகர் அல்லது பரிசேயர் நடுவிலிருந்து இயேசு தமக்குச் சீடரைத் தெரிந்துகொள்ளவில்லை. சாதா தொழிலாளிகள் மற்றும் வரிக்காரர் நடுவிலிருந்தே தமது சீடரை இயேசு பொறுக்கியெடுத்தார். ரோம அரசிற்கு வரி வசூலித்துத் தந்த ஆயக்காரரை யூதருக்கு அவ்வளவு பிடிக்காது.

■ கலிலேயாவிற்கு இயேசுவின் இதயத்தில் சிறப்பிடம் இருந்தது. ''கலிலேயா எங்கும்'' அவர் சுற்றித் திரிந்தார் என்று வாசிக்கிறோம் (மத் 4:23). அவரது மலைப் பிரசங்கம் பிரசங்கிக்கப்பட்டது கலி

லேயாவிலேயே (5:1). அவரது முதலாம் அற்புதமும் இன்னும் அநேக அற்புதங்களும் கலிலேயாவிலேயே செய்யப்பட்டன (யோ 2:1-11). கலிலேயாவிலேயே நற்செய்திப் பேராணையும் கொடுக்கப்பட்டது (மத் 28:16-20).

■ தமது எளிய குடும்பப் பின்னணி குறித்து இயேசுவானவர் ஒருபோதும் வெட்கப்படவில்லை. ஐந்து சகோதரரும் குறைந்தது இரு சகோதரிகளும் இருந்த குடும்பத்தில் அவர் வளர்ந்தார் (மத் 13:55-57). தச்சனது மகன் என்றும் அவர் அழைக்கப்பட்டார்! (மத் 13:55; மாற் 6:3). தச்சர் இல்லாது கட்டிட வேலை சாத்தியமில்லை. எனினும் தச்சுத் தொழில் உயர்வானதாய்க் கருதப்படவில்லை. நமது பரம்பரை மற்றும் ஜாதி குறித்து எவ்வளவாய்த் தம்பட்டம் அடிக் கிறோம்! இவ்விதப் பெருமையைத் திருமுழுக்கினன் யோவான் வன்மையாய்க் கண்டித்தார். திருச்சபையிலும் சமுதாயத்திலும் காணப்படும் பிரச்னைகள் பலவற்றிற்கு வேராயிருப்பது இன வெறியே. கோடாரியை வைத்து வேரை வெட்டுங்கள் (லூக் 3:8,9). இல்லையேல் திருமறை நமக்குச் சரியாய்ப் புரியாது.

■ திருமுழுக்கு பெறுவதற்காய் இயேசுவே யோவானிடம் வந்ததில் அவரது தாழ்மை எவ்வளவாய் வெளிப்படுகிறது! (மத் 3:13,14). என்னே மனப்பான்மை! அவர் யாரிடமாவது ஒரு வார்த்தை சொல்லியனுப்பியிருந்தால், யோவான் அவரிடம் பறந்து வந்திருப் பார். கலிலேயாவில் போதுமான தண்ணீரா இல்லை?

■ பிசாசின் கொடுமையான சோதனைகளை இயேசு எதிர் கொண்டதை மத்தேயு 4இல் வாசிக்கிறோம். கோபுரத்திலிருந்து குதித்துக் காயப்படாமல் தப்பினால் இயேசுவானவர் தம்மை இறை மகன் என்று நிரூபிக்கலாம் என்று பிசாசு அவருக்கு ஆசைகாட்டி னான். இயேசுவோ இவ்விதம் வித்தை காட்ட விரும்பவில்லை. விண்தந்தையிடமிருந்தே தாம் வந்திருப்பதையும் அவரிடமே தாம் போகவிருப்பதையும் இயேசு அறிந்திருந்தார். தமது முதலாம் அற் புதத்தை நிகழ்த்துமுன்னரே, தமது முதலாம் பிரசங்கத்தைப் பண்ணு முன்னரே, ''என் அன்பார்ந்த மைந்தர் இவரே; இவர் பொருட்டு நான்



பூரிப்படைகிறேன்'' என்ற சான்றை விண்தந்தையிடமிருந்து பெற்றிருந்தார் (மத் 3:17). உலக அரசுகள் அத்தனையையும் காட்டி இயேசுவைக் கவரலாம் என்று அடுத்துப் பிசாசு எண்ணினான். இது சாதாரண கவர்ச்சியா என்ன? இயேசுவோ தம்மைத்தாமே உயர்த்திக் கொள்ளும் எந்த முயற்சிகளுக்கும் மறுப்பு தெரிவித்தார். ஆம், சிம் மாசனத்திற்குக் குறுக்குவழி கிடையாது; சிலுவை ஒன்றே வழி!

■ பிரபலமாகவேண்டுமென்று இயேசுவானவர் எப்பொழுதுமே அலைந்து திரியவில்லை. தொழுநோயாளி ஒருவனைச் சுகப்படுத் தியபோது அவர் அவனிடம், ''இதை ஒருவருக்கும் சொல்லாதே'' என்றார் (மத் 8:4). பார்வையற்ற இருவருக்குப் பார்வையளித்தபோது, ''யாரும் இதை அறியாதபடிப் பார்த்துக்கொள்ளுங்கள்'' என்று மிகக் கண்டிப்பாய்க் கூறினார் (9:30). பன்னிரண்டு வயது சிறுமியை அவர் உயிரோடு எழுப்பியபோது யாருக்கும் இது தெரியக்கூடாது என்று குடும்பத்தினரிடம் திட்டமாய்க் கூறினார் (மாற் 5:43). தாம் மறு ரூபமானதைக் குறித்தும் இயேசு தமது சீடரிடம் கட்டளையாய்ச் சொன்னது, ''மனுமகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும்வரை இக்காட்சியைப்பற்றி எவருக்கும் சொல்லக்கூடாது'' (மத் 17:9). நமது ஆழ்ந்த ஆன்மீக அனுபவங்களைப் பிறருடன் பகிர்ந்துகொள் வதில் தவறேதுமில்லை. ஆனால் நமது உள்நோக்கம் என்ன? பிறர் நம்மைப் பெரிதாய் நினைக்கவேண்டும் என்ற துடிப்பா? இது ஆவி யில் எளிமை அல்லவே. தங்களது திட்டங்களை விளம்பரப்படுத்தக் கிறிஸ்தவ ஊழியங்கள் வியாபாரத் தந்திரங்களைக் கையாளுவது பெருந்துக்கம். தகுதியான விளம்பரம் தவறல்ல; ஆனால் பூனையை ஆனையாய்க் காட்டுவதையெல்லாம் எவ்விதத்திலும் தவிர்க்க வேண்டும். விளம்பரப்படுத்தாமலே யாவருக்கும் தெரியவரும் அற்புதங்கள் நமது சுகமளிப்புக் கூட்டங்களில் இல்லையே! (அப் 3:9,10; 4:14).

■ நாம் ஏற்கனவே பார்த்தபடி, தம்மிடம் வந்து கற்றுக்கொள்ளும் படி மக்களை இயேசு கூவியழைத்தபோது அவர் சொன்னது, ''நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்'' (மத் 11:29). சாந்தம் என்றால் அது பலமின்மையோ, பிடிப்பின்மையோ, கண்டிப்பின்

மையோ அல்ல. மனந்திரும்பாதவர்களை அவர் எவ்வளவாய்க் கடிந்துகொண்டாரென்று முந்திய வசனங்களில் பாருங்கள்: ‘‘கோராசினே, உனக்கு ஐயோ! பெத்சாயிதாவே, உனக்கு ஐயோ! ... வானளாவ உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாளம்வரை தாழ்த்தப்படுவாய்!’’ (வச 20-24). சாந்தம், மனத்தாழ்மை என்று எதைக் குறிப்பிட்டார் என்றால், அவர் பந்தாவுக்கும் பகட்டுக்கும் பின்செல்லாது, மனமுடைந்தோருக்கும் மனத்தொய்வுற்றோருக்கும் அமரிக்கையாய்ப் பணி செய்வார் என்பதையே. தீர்க்கன் ஏசாயா மூலம் தமது மகனைப் பிதாவாகிய தேவன் எவ்விதம் முன்னறிமுகம் செய்திருக்கிறார் பாருங்கள்: ‘‘இதோ என் ஊழியர்; இவர் நான் தேர்ந்து கொண்டவர் ... இவர் சண்டை சச்சரவு செய்யமாட்டார்; போராடமாட்டார்; தம் குரலைத் தெருவில் எழுப்பவும் மாட்டார்; நீதியை வெற்றிபெறச் செய்யும்வரை நெரிந்த நாணலை முறியார்; புகையும் திரியை அணையார். எல்லா மக்களினங்களும் இவர் பெயரில் நம்பிக்கை கொள்வர்’’ (ஏசா 42:1-4; மத் 12:15-21). நமது கிறிஸ்தவப் பத்திரிகைகளில் சுய விளம்பரம் தலைவிரித்தாடுவதேன்? தேவையிலும் வேதனையிலும் வாடும் மக்கள் ஏமாற்றப்படுவதேன்? நமது மாய்மாலத்தை நாம் களைந்து இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுவோம்!

■ இயேசு கிறிஸ்துவின் போதனைகள் மிகவும் எளிமையானவை; முழுக்க முழுக்க நடைமுறையானவை. விண்ணரசை விளக்க அவர் பயன்படுத்திய ஏழு உவமைகளை மத்தேயு 13இல் வாசித்துப்பாருங்கள். சத்தியங்களை விளக்கத் தலைக்கு மேல் செல்லும் புரியாத கதைகளை அவர் சொல்லவில்லை. விவசாயி, கடுகு விதை, புளித்த மாவு, மறைந்திருந்த புதையல், முத்துக்கள், மீன் வலை, இப்படிப்பட்டவற்றையே உவமானங்களாய்ப் பயன்படுத்தினார். நவீன காலத்திலோ சத்தியங்களை விளக்குவதற்காய்ப் பிரசங்கிமார் சொல்லும் கதைகள் சத்தியங்களைவிடக் கடினமாயிருக்கின்றன! இது ஏனென்றால், மக்களுக்கு அறிவை ஊட்டவேண்டும் என்பதைவிட தங்களது அறிவைக் காட்டவேண்டும் என்பதே அவர்களது மனப்பான்மை. கிறிஸ்துவின் போதனை முறையோ முற்றும் நடைமுறைக்கேற்றதாயிருந்தது.



■ யார் பெரியவன் என்ற போட்டாபோட்டி இயேசுவின் சீடரிடையே இருக்கத்தான் செய்தது. ‘‘விண்ணரசில் எவன் பெரியவனாயிருப்பான்’’ என்று ஒரு முறை அவர்கள் அவரிடம் கேட்டனர் (மத் 18:1). அவர்களுக்குச் சற்றும் எதிர்பாரா பதில் கிடைத்தது. ஒரு சிறு பிள்ளையை இயேசு அவர்கள்முன் நிறுத்தி, ‘‘நீங்கள் மனந்திரும்பிச் சிறு பிள்ளைகள்போல் ஆகாவிடில், விண்ணரசில் நுழைய மாட்டீர்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இந்தச் சிறு பிள்ளையைப் போலத் தம்மைத் தாழ்த்திக்கொள்பவரே விண்ணரசில் மிகப் பெரியவர்’’ என்று அவர்களுக்குச் சொன்னார் (வச 2-4). கிறிஸ்தவத்தின் அடையாளமாய்ச் சிலுவை கருதப்படலாம்; விண்ணரசின் அடையாளமோ ஒரு சிறு பிள்ளைதான்! ‘‘ஒருவன் மறுபடி பிறவாவிடில் இறையரசைக் காணமாட்டான்’’ என்று நிக்கொதேமுவுக்கு இயேசு சொன்னதைக் குறித்துப் பேசுகிறோம் (யோ 3:3-5). மத்தேயு 18:3ஐயும் அவ்விதமே வலியுறுத்துவதில்லையே ஏன்? ‘‘மறுபிறப்பு’’ என்பது ஆன்மீக அர்த்தம் கொண்டது; ‘‘சிறு பிள்ளைகள் போல் மாறுவதோ’’ வெளிப்படையாய்க் காணக்கூடியது. நமது சபைகளிலும் ஊழியங்களிலும் இச்சத்தியம் வலியுறுத்தப்படுமானால், நமக்குள் அரசியல் பண்ணிக்கொண்டிருக்கமாட்டோம்! சிறு பிள்ளைகளிடம் ‘‘மனமேட்டிமை’’ இல்லாததால் இங்கு இயேசு சுட்டிக்காட்டுவது ‘‘மனத்தாழ்மை’’ ஆகும் (வச 4). தொடர்ந்து இயேசு கூறியது: ‘‘இத்தகைய சிறு பிள்ளை ஒன்றை என் பெயரால் ஏற்றுக்கொள்பவர் எவரும் என்னையே ஏற்றுக்கொள்கிறார்’’ (வச 5). துர்ப்பாக்கியமாக இந்த மனப்பான்மையைச் சீடர்களால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. அடுத்த அத்தியாயத்திலேயே அவர்கள் எவ்விதம் நடந்துகொள்கின்றனர் பாருங்கள்: ‘‘சிறு பிள்ளைகள் மீது இயேசு கைகளை வைத்து வேண்டுதல் செய்யுமாறு அவர்களைச் சிலர் அவரிடம் கொண்டுவந்தனர்; சீடரோ அவர்களை அதட்டினர்’’ (19:13). ஆவியில் எளிமையுள்ளோருக்கும், சிறு பிள்ளைகள்போல் தங்களைத் தாழ்த்துவோருக்கும் மட்டுமே விண்ணரசு சொந்தமாகும் (வச 14)! முற்றும் எதிரான தத்துவத்திலேயே சுழலும் உலகில் இது எத்தனை புரட்சிகரமான போதனை!

■ ‘‘நல்ல போதகரே’’ என்று இயேசுவை அழைத்து வாலிபன் ஒருவன் அவரிடம் வந்தான் (மத் 19:16). இயேசு அவனிடம்,

''என்னை நல்லவர் என்று அழைப்பானேன்? கடவுள் ஒருவரைத் தவிர நல்லவர் ஒருவருமில்லையே'' என்றார் (வச 17). ஐயோ, மக்களால் புகழப்படவேண்டுமெனப் பிரசங்கிமார் எவ்வளவு துடிக்கிறார்கள்! பொதுக்கூட்டங்களில் தங்களுக்கு வரிசையாய் மாலையிட சில பிரசங்கிமார் முன்னதாகவே ஆயத்தம்பண்ணுகிறார்களாம்! இயேசுவானவர் மண்ணுலகிற்குள் வரும்போது அவர் தேவனானவர் என்பது மறைந்துவிடவில்லை என்று முதல் அத்தியாயத்தில் கவனித்தோம். இந்த வாலிபனோ இயேசுவின் மானிடத்தை மட்டுமே பார்த்ததால், அவர் அவனைத் திருத்தினார். ஒரு பொதுக்கூட்டம் ஒன்றில் என்னைத் ''தேவனது பெரிய ஊழியன்'' என்று அறிமுகம் செய்தனர். பிரசங்கிக்குமுன் நான் கொடுத்த திருத்தம்: ''நான் தேவனது பெரிய ஊழியன் அல்ல; பெரிய தேவனது ஊழியன்!'' இவையிரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடு கொஞ்சமல்ல. ஊழியன் அல்லது வேலைக்காரனிடம் பெரியது எதுவும் கிடையாது; எஜமான்தான் பெரியவர். பெரியவன் என்றெண்ணப்படவேண்டுமென்ற அவா விழுந்த மனிதனின் இரத்தத்திலேயே உண்டு. ஆனால் தொண்டு மனப்பான்மையும் (servicemindedness) பணிவிடைக்காரனின் மனப்பாங்குமே (servanthood) பெரியவை என்று நாம் புரிந்துகொள்ள ஆண்டவர் விரும்புகிறார். தமது சீடரிடம் அவர் சொன்னது: ''பிற இனத்தவரின் தலைவர்கள் மக்களை அடக்கி ஆளுகிறார்கள். உயர்குடி மக்கள் அவர்கள்மீது தங்கள் அதிகாரத்தைக் காட்டுகிறார்கள்; இதை நீங்கள் அறிவீர்கள். உங்களிடையே அப்படி இருக்கக்கூடாது. உங்களுள் பெரியவராயிருக்க விரும்புகிறவர் உங்கள் தொண்டராய் இருக்கட்டும். உங்களுள் முதன்மையானவராய் இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராய் இருக்கட்டும். இவ்வாறே மனுமகனும் சேவை பெற அல்ல, சேவை செய்வதற்கும் பலரது மீட்புக்கு ஈடாகத் தமது உயிரைக் கொடுப்பதற்குமே வந்தார்'' (மத் 20:25-28). நாம் இயேசுவின் இத்திருத்துதல் உபதேசத்தைப் பின்பற்றினால் விந்தை மாற்றம் அடைவோம். எல்லா நற்பண்புகளையும் தம்மகத்தே கொண்டிருந்தார் இயேசு. பின்பற்றுவதற்கு நூறு சதவீதம் தகுந்தவர் அவர் ஒருவரே. பிரசங்கிமார் எந்த அளவிற்குக் கிறிஸ்துவைப் பின்பற்றுகின்றனரோ அந்த அளவிற்குத்தான் மக்கள் அவர்களைப் பின்பற்றுவது பாதுகாப்பு (1 கொரி 11:1).



■ குருத்தோலை ஞாயிறன்று நடந்ததற்கு மத்தேயு மேற்கோள் காட்டிய தீர்க்கதரிசன வசனம், சகரியா 9:9, ''மகள் சீயோனிடம் சொல்லுங்கள்: இதோ, உன் அரசர் உன்னிடம் வருகிறார்; அவர் எளிமையுள்ளவர்; கழுதையின்மேல் ஏறி வருகிறார்; கழுதைக்குட்டியாகிய மறியின்மேல் அமர்ந்து வருகிறார்'' (மத் 21:4,5). அரசன் எவனும் எளிமையாய் (lowliness) அல்ல, எடுப்பாகவே (loftiness) ஊர்வலம் வருவான். கழுதைகள்மேல் அல்ல, குதிரைகள்மீதுதான் அரசர்கள் சவாரி செய்வார்கள். இயேசுவானவர் பெத்லகேமுக்கோ நாசரேத்துக்கோ கழுதைமீது பயணித்திருந்தால் அதைப் புரிந்துகொள்ளலாம். இதுவோ மார்க்கத் தலைநகரான எருசலேமுக்குச் சென்ற வெற்றிப் பவனி! மட்டுமல்ல, அன்று அவரது பணி தேவாலயத்தைத் தவறாய்ப் பயன்படுத்தியவர்களைத் துரத்தி அதனைத் தூய்மைப்படுத்துவதாயிருந்தது. அவர் தேவாலயத்தில் செய்தது துணிச்சல் மிகுந்த செயலாகும். இன்றும்கூட கிறிஸ்தவர்கள் பலருக்குக் கடவுள் பக்தியைவிடக் கோயில் பக்திதான் அதிகம். ஆலயத்திலுள்ள ஒரு மேசையை அல்லது இருக்கையை ஓர் அங்குலம் தள்ளிவைக்க வேண்டுமானாலும் எத்தனை சண்டை! கிறிஸ்துவின் தைரியம் அன்று அசாதாரணமன்றோ? ஆம், சாந்தம் என்றால் பலவீனம் அல்ல; அதுதான் நிசமான ஆன்மீக பலம்.

■ பதவி நாட்டமும் பட்டம் மோகமும் கிறிஸ்துவின் சிந்தைக்கு எதிரானவை. தமது நாட்களிலிருந்த மதத் தலைவர்களின் மனப்பான்மையை அவர் எவ்விதம் கண்டித்தார் பாருங்கள்: மத் 23:1-12, ''மறைநூல் அறிஞரும் பரிசேயரும் மோசேயின் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றனர் ... தங்கள் மறைநூல் வாசகப் பட்டைகளை அகலமாக்குகிறார்கள். விருந்துகளில் முதன்மையான இடங்களையும், தொழுகைக்கூடங்களில் முதன்மையான இருக்கைகளையும் விரும்புகின்றனர்; சந்தைவெளிகளில் மக்கள் தங்களுக்கு வணக்கம் செலுத்துவதையும், ரபீ என அழைப்பதையும் விரும்புகிறார்கள் ... தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்படுவர்; தம்மைத் தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்படுவர்.'' தமது கட்டளைகளை நினைவுபடுத்துவதற்காக, முந்தானை முடிச்சு போல, தங்களது உடைகளின் ஓரங்களில் குஞ்சங்களைத் தொங்கவிட இஸ்ரவேல்

மக்களிடம் சொன்னது தேவன்தான் (எண் 15:38,39). அவர்களோ அவைகளைப் பகட்டுக்காக அகலமாக்கினார்கள்! மனதிலிருந்து எளிமையும் தாழ்மையும் அகலும்போது மார்க்கக் காரியங்களும் அவைகளது அர்த்தத்தை எவ்விதம் இழக்கின்றன, பாருங்கள்! இன்று குருப்பட்டங்களுக்கு இறைப்பணியாளர் அலைந்து திரிவதை மேற்குறிப்பிட்ட கிறிஸ்துவின் வார்த்தைகளின் அடிப்படையில் எவ்விதம் நியாயப்படுத்த முடியும்? இயேசுவானவர் ஆமோதித்தவற்றை மட்டுமே அணைத்துக்கொண்டு, அவர் அருவருத்தவற்றையெல்லாம் அகற்றிவிடும் தைரியம் நமக்கு வரட்டும். இல்லையேல், நாம் அவரைப் பின்பற்றுகிறோம், அவரிடம் கற்கிறோம் என்று எப்படிச் சொல்ல முடியும்?

■ ஒரே குழுவிலுள்ள நபர்களுக்குள் முதன்மையானவராகத் திகழவேண்டுமென்ற துடிப்பு ஏற்படுமானால் அது நிச்சயம் போட்டியில்தான் முடிவடையும். இயேசுவின் பன்னிரு சீடர் நடுவிலேயே இது தோன்றியிருக்குமானால், யார்தான் இதற்குத் தப்ப முடியும்? யாக்கோபும் யோவானும் இயேசுவிடம் இறையரசில் அவரது இரு பக்க இருக்கைகளைக் கேட்டபோது மற்ற பத்துப்பேரும் அவர்கள்மீது கோபங்கொள்ளத் தொடங்கினர் (மாற் 10:41). உலகின் தத்துவத்திற்கும் தாற்பரியத்திற்கும் எதிராகக் கிறிஸ்து தமது சீடருக்கு அழியாப் பாடம் கற்பித்தார்: ‘‘உங்களுள் முதன்மையாளராக இருக்க விரும்புகிறவர் அனைவருக்கும் பணியாளராக (slave, servant) இருக்கட்டும்’’ (வச 44). தலைமைத்துவப் பொறுப்புகளுக்கும் செயற்குழுக் கூடுகைகளுக்கும் அழைக்கப்படும்போது இப்படிப்பினையை மனதில் ஆழமாகப் பதித்துக்கொள்ளவேண்டும். ‘‘ஊழியம்’’ என்றதும் ‘‘மக்களது தலைகள்மீது கை வைத்தல்’’ என்றே நம்மில் பலரும் எண்ணுகிறோம். இல்லை, ‘‘ஊழியம்’’ என்று தமிழாக்கப்பட்டுள்ள “ministry” என்ற ஆங்கிலச் சொல்லானது ‘‘கழித்தல்’’ (minus) எனும் இலத்தீன் பதத்திலிருந்து வருகிறது! ஊழியத்திற்கு அழைக்கப்படும் எவரும் மக்களைப் பெரிதும் ஆசீர்வதிப்பதற்காய்த் தன்னை முடிந்த வகையிலெல்லாம் கழித்துக்கொள்ளவேண்டும், குறைத்துக்கொள்ள வேண்டும். ‘‘ஊழியம்’’ (ministry) என்பதின் பொருள் இதுவே. எவரையாவது ஆசீர்வதிக்க விரும்புவோர் தான் எவர் என்ற பெயரைத்



தனக்கு விரும்பார். (I want to be a nobody to help somebody!) அப்பொழுதுதான் அவர் எவரையும் ஆசீர்வதிக்க முடியும். ‘‘பகட்டான பாத்திரமாக அல்ல; பயனுள்ள பாத்திரமாக இருக்கவே விரும்புகிறேன்’’ என்போம். நமது ஆண்டவரை உயர்த்தவும், அவர் யாருக்காய் உயிர் கொடுத்தாரோ அவர்களுக்கு உதவவும் இது ஒன்றே வழி (வச 45).

■ பிரம்மாண்டமான கட்டிடங்கள் ஒருபோதும் இயேசுவை அசத்தவில்லை. தேவாலய முற்றங்களில் அவரும் அவரது சீடரும் நடந்துகொண்டிருக்கையில், சீடருள் ஒருவர் அவரிடம், ‘‘போதகரே, எத்தகையக் கற்கள்! எத்தகையக் கட்டிடங்கள்! பாரும்’’ என்றார் (மாற் 13:1). இதற்கு அவர் கொடுத்த பதில் சற்றும் எதிர்பாராதது, முற்றும் ஏமாற்றமானது: ‘‘இம்மாபெரும் கட்டிங்களைப் பார்க்கிறீர்கள் அல்லவா? இங்கு கற்கள் ஒன்றின்மேல் ஒன்று இராதபடி எல்லாம் இடிக்கப்படும்’’ (வச 2). தேவாலயத்தை ரோமர்கள் கி.பி. 70இல் இடித்துத் தள்ளியபோது இயேசுவின் இவ்வார்த்தைகள் அப்படியே நிறைவேறின. தீர்க்கன் ஏசாயா உரைத்த நித்திய படிப்பினை இங்கு நினைவுபடுத்தப்படவேண்டும்: ‘‘ஆண்டவர் கூறுவது இதுவே: விண்ணகம் எனது அரியணை; மண்ணகம் எனது கால்மணை; அவ்வாறிருக்க எத்தகைய ஆலயத்தை நீங்கள் எனக்காகக் கட்ட விருக்கிறீர்கள்?’’ (ஏசா 66:1,2). ஆம், பிரியமானவர்களே, பிரம்மாண்டம் என்பது பிரதானம் அல்ல; நொறுங்கியிருத்தலே தேவனது பார்வையில் நேர்த்தியானது! நமது சிந்தனைகள் இங்கு சீர்திருத்தம் பெறட்டும்!

■ இயேசுவானவரின் ஊழியத்தைத் தாங்கிவந்த பலர் முன்னர் பிசாசு பிடித்திருந்தோர் என்பது பரவசமூட்டுகிறது. சுவிசேஷப் புத்தகத்தில் இவ்விதம் வாசிக்கிறோம்: லூக் 8:1,2, ‘‘நகர் நகராய், ஊர் ஊராய் இயேசு சென்று இறையாட்சியைப்பற்றிய நற்செய்தியைப் பறைசாற்றி வந்தார். பன்னிருவரும் அவருடன் இருந்தனர். பொல்லா ஆவிகளினின்றும் நோய்களினின்றும் குணமான பெண்கள் சிலரும், ஏழு பேய்கள் நீங்கப்பெற்ற மகதலேனா மரியாளும் ... அவரோடு இருந்தார்கள்.’’ இவ்விதமான ஒரு நபருக்குத்தான் உயிர்த்தெழுந்த கிறிஸ்து முதலாவது தரிசனமானார் என்பது வியப்பாயிருக்கிறதா?

(மாற் 16:9). இயேசு எதையெல்லாம் செய்தாரோ, அவை எல்லா வற்றிலும் எளிமையின் பாதையையே தெரிந்துகொண்டார். மேசியா வின் பணி பற்றிய அறிக்கையில் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்ட படியே அவர் பிதாவானவரது சித்தத்தைத் தவறவிடாது நிறைவேற் றினார்: ''கர்த்தருடைய ஆவியானவர் என்மீதிருக்கிறார்; தரித்திர ருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம் பண்ணினார் ... சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை முழங்கவும் அவர் என்னை அனுப்பினார்'' (லூக் 4:17-19). எளியோர் மீதுள்ள அவரது தனிக் கவனமே அவரது மேசியாப் பணிக்கு அத்தாட்சி யாயிருந்தது (லூக் 7:22). இயேசுவின் இச்சிந்தனை நம்மிடம் உண்டா, அல்லது செல்வாக்கும் சொல்வாக்கும் நிறைந்தோர் பின்னாலேயே போகும் உலகின் போக்கைப் பிடித்திருக்கிறோமா? இயேசு நிசமாகவே ஒரு புரட்சியாளர்தான்! இவ்விதப் புரட்சிதான் சமுதாயத்தை மாற்றி மேம்படுத்தும். அப்பொழுதுதான் ஊழலற்ற சமுதாயம் தலைதூக்கும். பொருளாதாரச் சிந்தையிலேயே அமிழ்ந்து விட்டதுதான் இன்றையச் சாபம் (லூக் 4:6-8).

■ இயேசுவைப் பின்பற்றத் துவங்கியது முதலே சீடர்கள் அவரது எளிமை எனும் மனப்பான்மையைப் பிடித்துக்கொண்டனர். அவர் பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்தபோது அவர்கள் எல்லாவற்றையும் விட்டுவிட்டு அவருக்குப் பின்சென்றார் கள் (லூக் 5:10,11). மத்தேயு அழைக்கப்பட்டபோதும் அவர் எல்லாவற்றையும் உதறித்தள்ளிவிட்டு இயேசுவுக்குப் பின்சென்றார் (வச 27,28). சமுதாயத்தின் சாதாரண வகுப்பைச் சேர்ந்தவர்கள் மீனவர். மேல்மட்டத்தைச் சேர்ந்தவர்கள் வரித்துறை அதிகாரிகள். எதை விடுகிறீர்கள் என்பதல்ல, எவருக்காய் விடுகிறீர்கள் என்பதே காரியம்! இன்றையப் போக்கு என்னவோ? முழுநேரத் திருப்பணிக்கு நமக்கு வரும் இறையழைப்பை உறுதி செய்ய எத்தனைத் தீர்க்க தரிசிகளைக் கலந்தாலோசிக்கிறோம்! இவ்விதம் செய்யும்போது நம்மில் பலரும் தேவனது பரிபூரண சித்தத்தைத் தவறவிடுகிறோம். உங்கள் பெற்றோரும் பிரசங்கிமாரிடம் இரகசியமாய்ப் பேசி, ''இப் பொழுது வேண்டாம்; பின்னால் பார்க்கலாம்'' என்றெல்லாம் உங்க ளிடம் பேசத் தூண்டலாம், கவனம்! திருப்பணிக்கு வராது நின்று



விட்ட பலரை அறிந்துள்ளதால் நான் இவ்விதம் எழுதுகிறேன். இறை யரசிற்காய்த் தியாகம் செய்த சீடரை இயேசு வெகுவாய்ப் பாராட்டி னார். அவர்களுக்கு அவர் வாக்கருளியவற்றைக் கவனியுங்கள்: லூக் 18:28-30, ''உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன்: இறை யாட்சியின் பொருட்டு வீட்டையோ, மனைவியையோ, சகோதர சகோதரிகளையோ, பெற்றோரையோ, பிள்ளைகளையோ விட்டுவிட் டவர் எவரும் இம்மையில் பன்மடங்கும், மறுமையில் நிலைவாழ்வும் பெறாமல் போகார்.'' ''எல்லாவற்றையும்'' விட்டோமே என்று சீமோன் பேதுரு பொதுவாகத்தான் சொன்னார் (வச 28). அந்த ''எல்லா வற்றையும்'' என்பது எதையெல்லாம் உள்ளடக்கும் என்று இயேசு குறிப்பாய் வரிசைப்படுத்துகிறார், பாருங்கள்! ஆம், அவர் எதையும் மறந்துபோகமாட்டார்! (எபி 6:10).

■ திருமுழுக்கினன் யோவானைக் கிறிஸ்து வெகுவாய் மெச்சிப் பேசினார். அவரது உடையின் எளிமையைச் சுட்டிக்காட்டினார். தாமே வரவிருந்த மேசியா என்பதனை யோவானுக்கு இயேசு ஊர்ஜிதப் படுத்திச் சொல்லியனுப்பிய பின்னர், தம்மைச் சுற்றி நின்றவரிடம் அவர் வினவியது: ''நீங்கள் எதைப் பார்க்கப் பாலை நிலத்திற்குப் போனீர்கள்? பளிச்சிடும் ஆடை அணிந்து செல்வச் செழிப்பில் வாழ்வோர் அரச மாளிகைகளில் அல்லவா இருக்கிறார்கள்! பின்னை யாரைத்தான் பார்க்கப் போனீர்கள்? தீர்க்கதரிசியையா? தீர்க்கதரிசி யிலும் மேலானவரையே என்று நான் உங்களுக்குச் சொல்கிறேன்'' (லூக் 7:24-26). அக்காலத்தில் தடித்த உடைகளையே எளியவர் அணிந்திருந்தனர் என்பது தெளிவு. மெல்லிய ஆடைகள் செல் வந்தருக்கே உரியவையாயிருந்தன (யாக் 2:2). ஒட்டக முடியாலான ஆடையை யோவான் அணிந்திருந்தார்; தோல் கச்சையை இடையில் கட்டியிருந்தார்; வெட்டுக்கிளியும் காட்டுத்தேனும் உண்டுவந்தார் (மத் 3:4). உடை, உணவு, உபதேசம் (dress, diet, doctrine) இப்படி அவரைப்பற்றிய அத்தனையும் வினோதமே! அவரைக் குறித்த இயேசுவின் சாட்சிதான் என்னே! விசுவாச வீரரைக் குறித்து எபிரெயர் 11:37,38இல் நாம் வாசிப்பது: ''செம்மறியின் தோலையும் வெள் ளாட்டுத் தோலையும் போர்த்துக்கொண்டு அலைந்து திரிந்தனர்;

வறுமையுற்று வாடினர்; துன்புறுத்தப்பட்டனர்; கொடுமைக்கு உள்ளாயினர். அவர்களை ஏற்க இவ்வுலகிற்குத் தகுதியில்லாது போயிற்று!''

■ இயேசு பன்னிரு சீடரைத் தெரிந்தெடுத்தபோது சமுதாயத்தில் அவர்களது அந்தஸ்து என்னவென்று கவனிக்கவேயில்லை. எழுபது சீடரைத் தெரிந்தெடுத்தபோதும் அப்படித்தானிருந்திருக்கவேண்டும். அவர் போகவிருந்த பட்டணங்களுக்கு முன்னோடிகளாகவே அவர்களை அனுப்பிவைத்தார் (லூக்10:1). அவர்களை அவர் பணிக்கும்போது பிசாசு விரட்டுவதைக் குறித்து எதுவும் குறிப்பிடவில்லை. குடும்பங்களுக்குச் சமாதானம் கூறவும், நோயுற்றோரைக் குணமாக்கவுமே அவர்களோடு பேசி அனுப்பினார். ஆனால் பிசாசுகளும் தங்களுக்குக் கீழ்ப்படிந்தபோது அந்த எழுபதுபேரும் மட்டிலா மகிழ்ச்சியடைந்தனர் (வச 17). அவர்களது பெயர்கள் பரலோகில் பதிவாகியிருந்ததால் அவர்களுக்கிருந்த அதிகாரமே இதற்குக் காரணம் என்று இயேசு விளக்கினார் (வச 20). உடனே அவர் தூய ஆவியால் பேருவகையடைந்து பிதாவானவரைத் துதித்ததைக் கவனியுங்கள்: ''தந்தையே, விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே, உம்மைப் போற்றுகிறேன். ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து, குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். இதுவே உமது திருவுளம்!'' (வச 21). அவர்களுடைய அறிவும் அனுபவமும் குறைவு என்பதால் இயேசு அவர்களைக் ''குழந்தைகள்'' அல்லது ''பாலகர்'' எனக் குறிப்பிட்டார். அவர்கள் அப்பொழுதுதான் திருப்பணிக்குச் சேர்க்கப்பட்டிருந்தவர்கள். அவர்களது எளிமையையே இயேசு இங்கு பாராட்டுகிறார். கற்றுத் தேர்ந்தவர்களைவிடச் சாதா எளிய மக்கள் தேவனது காரியங்களை விரைவாய்ப் புரிந்துகொள்கின்றனர் என்பதே இயேசுவுக்கு ஆனந்தம். கலப்பையில் கைவைத்திருப்போருக்கு ஆன்மீகச் சத்தியங்கள் எளிதில் விளங்கும்! முன்னோடி மிஷனரிக் களங்களில் இளம் மிஷனரிகளின் ஊழியத்தில் இவ்விதக் காரியங்களை அடிக்கடி காண்கிறோம்!

■ இயேசுவின் காலத்துப் பரிசேயரில் பலர் பொருளாசைக்கு அடிமைகளாயிருந்தனர். அவர் ஆவியில் எளிமை என்பதை வலியுறுத்தி வந்ததால் அவரது போதனைகளை அவர்கள் புறந்தள்ளினர் (லூக் 16:14). அவர்களை இயேசு எவ்விதம் கடிந்துகொண்டார், பாருங்கள்: ''நீங்கள் உங்களை மக்கள்முன் நேர்மையாளராகக் காட்டிக்கொள்கிறீர்கள். கடவுள் உங்கள் உள்ளங்களை அறிவார். நீங்கள் உங்களை மக்கள்முன் உயர்ந்தவர்களாகக் காட்டிக்கொள்வது கடவுள் பார்வையில் அருவருப்பாகும்'' (வச 15). ''வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்; தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்'' என்ற தமது தாயின் பாடலை ஒவ்வொரு கட்டத்திலும் இயேசு நினைவுபடுத்திக்கொண்டார் (லூக் 1:52). துர்ப்பாக்கியமாக, இப்பாழுலகில், செல்வர் செய்வதெல்லாம் நியாயப்படுத்தப்படுகிறது; எளியோரோ பழிக்கப்படுகின்றனர். ஆனால் இறையாட்சியின் பார்வை வேறு: ''ஆவியில் எளிமையுள்ளோர் பாக்கியவான்கள்; விண்ணரசு அவர்களுடையது.''

■ ஆவியில் எளிமை என்றால் அறிவின்மை அல்லது விவேகமின்மை அல்ல. இயேசு செய்த அற்புத அடையாளங்களை மக்கள் கண்டபோது அவர்கள் அவரை விசுவாசித்தார்கள் (யோ 2:23). அடுத்த வசனங்களே என்ன சொல்லுகின்றன பாருங்கள்: ''ஆனால் இயேசு அவர்களை நம்பிவிடவில்லை; ஏனெனில் அவருக்கு அனைவரையும் குறித்துத் தெரியும். மனிதரைப்பற்றி அவருக்கு யாரும் எடுத்துச் சொல்லத் தேவையில்லை. ஏனெனில் மனித உள்ளத்தில் இருப்பதை அவர் அறிந்திருந்தார்'' (வச 24,25). இப்படிச் சொல்வதால் அவர் எவரையும் சந்தேகக் கண்ணோடேயே பார்த்தார் என்று பொருள்படாது. இல்லை, ஞானத்தையும் உணர்வையும் அருளும் ஆவியும், அறிவை அருளும் ஆவியுமாகிய கர்த்தருடைய ஆவியானவர் அவர்மீது தங்கியிருந்ததால் எல்லாவற்றையும் சரியாய் அவரால் நிதானிக்க முடிந்தது (ஏசா 11:1,2). ''ஓசன்னா'' என்று இன்று ஆர்ப்பரிப்பார்கள்; ''ஒழியுங்கள்'' என்று நாளை அலறுவார்கள் என்பதை அவர் அறிந்திருந்தார்! எனவேதான் ''பாம்புகளைப்போல முன்மதி உடையவர்களாயும், புறாக்களைப்போல கபடு அற்றவர்களாயும் இருங்கள்'' என்று சீடருக்கு அவர் போதித்தார் (மத் 10:16). எப்பொழுது பாம்பைப்போல் இருக்கவேண்டும், எப்பொழுது

புறாவைப்போல் இருக்கவேண்டும் என்று உணர்த்துபவர் பரிசுத்த ஆவியானவரே. ஆவியானவரது மெல்லிய குரல் ஆவியில் எளிமை யுள்ளவனுக்கு எளிதாய்க் கேட்கும். இதுவே ஆன்மீகச் சமநிலை (spiritual balance).

■ மனிதரிடமிருந்து இயேசுவானவர் புகழ் நாடவில்லை; தம் மைக் குறித்து அவர் அறிந்திருந்தாலும் பெருமிதம் கொள்ளவில்லை. யோவான் 5ஆம் அத்தியாயத்தில் அவர் மூன்று சாட்சிகள் குறித்துப் பேசுகிறார்: (1) அவரது சொந்த சாட்சி: ‘‘என்னைப்பற்றி நானே சான்று பகர்ந்தால், என் சான்று செல்லாது. என்னைப் பற்றிச் சான்று பகர வேறு ஒருவர் இருக்கிறார். என்னைப்பற்றி அவர் கூறும் சான்று செல்லும் என எனக்குத் தெரியும்’’ (வச 31,32). (2) திருமுழுக்கினன் யோவானின் சாட்சி: ‘‘யோவானிடம் ஆளனுப்பி நீங்கள் கேட்டபோது அவரும் உண்மைக்குச் சான்று பகர்ந்தார். மனிதர் தரும் சான்று எனக்குத் தேவை என்பதற்காக அல்ல ... யோவான் பகர்ந்த சான்றை விட மேலான சான்று எனக்கு உண்டு. நான் செய்து முடிக்குமாறு தந்தை என்னிடம் ஒப்படைத்துள்ள செயல்களே அச்சான்று. நான் செய்துவரும் அச்செயல்களே தந்தை என்னை அனுப்பியுள்ளார் என்பதற்குச் சான்றாகும்’’ (வச 33-36). (3) மக்களது சாட்சி: ‘‘மனிதர் தரும் பெருமை எனக்குத் தேவை அல்ல ... மனிதர் தரும் சான்று எனக்குத் தேவை அல்ல’’ (வச 41,34). இயேசுவின் இவ்வார்த்தை களிலிருந்து நாம் புரிய வேண்டியது யாது? தேவனிடமிருந்து வரும் பாராட்டை மட்டுமே நாம் நாடவேண்டும் (வச 44). இதே சத்தி யத்தை யோவான் 8:54இலும் இயேசு திரும்பச் சொல்லுகிறார்: ‘‘நானே என்னைப் பெருமைப்படுத்தினால், அது எனக்குப் பெருமை இல்லை; என்னைப் பெருமைப்படுத்துபவர் என் தந்தையே.’’ ஆவியில் எளிமையுள்ளவனின் வாழ்க்கையில் தற்பெருமை இருக்கவே இருக்காது.

■ இயேசு தமது சீடர்களது கால்களைக் கழுவிட ஓர் அடிமையான வேலைக்காரன்போல் குனிந்தபோது அவரது ஆவியின் எளிமை மகத்துவமாய் வெளிப்பட்டது. ‘‘ஆண்டவரே, நீரா என் காலடிகளைக் கழுவப்போகிறீர்?’’ என்ற சீமோன் பேதுருவின் அதிர்ச்சிநிறை கேள்வி



புரிந்துகொள்ளக்கூடியதுதான் (யோ 13:6). இயேசு எவ்விதம் தம்மை முற்றிலும் வெறுமையாக்கினார் என்று பிலிப்பியர் 2:6,7இல் பவுலடியார் சித்தரிக்கிறார்: ‘‘அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூப மெடுத்து, மனித சாயலானார். அவர் மனித ரூபமாய்க் காணப்பட்டு, மரணம்வரை, அதாவது சிலுவையின் மரணம்வரை, கீழ்ப்படிந்த வராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.’’ இயேசுவானவர் நாம் பார்த்து ரசிக்கவேண்டிய சிலை அல்ல; நாம் பார்த்துப் பின்பற்றவேண்டிய மாதிரி! எனவேதான், ‘‘கிறிஸ்து இயேசு கொண்டிருந்த மனநிலையே உங்களிலும் இருக்கட்டும்’’ என்ற அழைப்பு நமக்குச் சவாலாய் வரு கிறது (வச 5). எந்த அளவிற்கும் இறங்கிச்சென்று, மற்றவர்களுக்குப் பணியாற்றும் மனப்பான்மை ஆவியில் எளிமையுள்ளோருக்கு இயல்பாயிருக்கும்.

■ இயேசுவானவர் மன்னாதி மன்னர் என்றாலும், அவரிடம் தீவிரவாதம் கிடையாது. அவர் பிலாத்துவிடம் கூறியது: ‘‘எனது ஆட்சி இவ்வுலகத்திற்குரியதல்ல; எனது ஆட்சி இவ்வுலகத்திற்குரிய தானால் நான் யூதரிடம் ஒப்புக்கொடுக்கப்படாதபடி என் ஊழியக்காரர் போராடியிருப்பார்கள்; இப்படியிருக்க என் அரசு இவ்விடத்திற்குரிய தல்ல’’ (யோ 18:36). அவர் ‘‘யூதா கோத்திரத்துச் சிங்கம்’’ என்றா லும், நித்தியமெங்கும் அவரது ஆட்டுக்குட்டியின் குணாதிசயமே வெளிப்படுகிறது. வெளிப்படுத்தல் புத்தகத்தில் இருபத்தேழு முறை அவர் ‘‘ஆட்டுக்குட்டியானவர்’’ என்றழைக்கப்படுகிறார்! ஆட்டுக் குட்டியானவரே ஆடுகளாகிய நம்மை மேய்க்கவும் செய்வார் என்பது என்னே சுவாரஸ்யம்! (வெளி 7:17). அவர் நம்மை ஜீவத் தண் ணீருள்ள ஊற்றுகளருகே நடத்திச்செல்வார். தேவனானவர் நமது கண்ணீர் யாவையும் துடைப்பார். நொறுங்கியிருப்போரே தேவனுக்கு நெருங்கியிருப்பர்!






# 3
# வேட்கையின் அடிச்சுவடுகள்
## Footsteps of Passion

கிறிஸ்துவின் வாழ்க்கையைத் தியானிப்பது நமது வாழ்க்கையை அவருடையதைப்போல் மாற்றிக்கொள்ளவே. கிறிஸ்துவின் மண்ணுலக வாழ்க்கையை விவரிக்க நமக்கு நான்கு சுவிசேஷங்கள் இருப்பதற்காய்த் தேவனைத் துதிப்போம். ஒன்று போதாதா, ஏன் நான்கு? இந்த நான்கு ஆக்கியோன்களும் இயேசுவை வெவ்வேறு கோணங்களில் பார்க்கின்றனர். ஒரு கட்டிடத் தோற்றத்தை முழுமையாய்த் தெரிந்துகொள்ளக் குறைந்தது நான்கு திசைகளிலிருந்து படம் எடுக்கவேண்டும் அல்லவா?

ஒவ்வொரு சுவிசேஷகனும் மற்ற மூவரும் வலியுறுத்தாத ஓர் அம்சத்தை விவரிக்கின்றார். இயேசு பேசியவற்றில் மத்தேயு கவனம் செலுத்துகிறார்; அவர் செய்தவற்றில் மாற்குவுக்குக் கவனம்; அவர் உணர்ந்தவற்றில் லூக்காவுக்குக் கவனம்; அவர் யாராயிருந்தார் என்பது யோவானுக்கு முக்கியம். கிறிஸ்துவின் போதனைகளில் மத்தேயு கவனம் செலுத்துகிறார்; அவரது செயல்பாடுகளில் மாற்குவுக்குக் கவனம்; அவரது உவமைகளில் லூக்காவிற்குக் கவர்ச்சி; அவரது உரையாடல்களில் யோவானுக்குத் தனிப்பிரியம். நான்கு உயிரினங்களைக் குறித்த தீர்க்கன் எசேக்கியேலின் தரிசனத்திற்கு இவை ஒத்திருக்கின்றன (எசேக் 1:5,6,10). அவற்றின் முகங்கள் சிங்கம் போலவும், இளங்காளை போலவும், மனிதன் போலவும், கழுகு போலவும் முறையே இருந்தன (வெளி 4:6,7). கிறிஸ்துவை மத்தேயு யூதருக்கு ராஜாவாய் அறிமுகப்படுத்துகிறார்; சிங்கம்தான் மிருகங்களுக்கு அரசன். கிறிஸ்துவை மாற்கு யேகோவாவின் பணியாளராய்ச்

சித்தரிக்கிறார்; முரட்டு வேலைகளுக்கே காளைகள் பயன்படுத்தப் படும். அவரை மனுமகனாய் லூக்கா முன்நிறுத்துகிறார்; அதுதான் மனித முகம். அவரை இறைமகனாய் யோவான் அறிமுகம் செய் கிறார்; வானில் பறப்பது கழுகு.

நான்கு சுவிசேஷங்களையும் இரு பிரிவுகளாய்ப் பிரிக்கலாம்: மத்தேயு, மாற்கு, லூக்கா ஆகிய மூன்றும் இணையான (synoptic) சுவிசேஷங்கள் எனப்படும்; இவை மூன்றும் கிறிஸ்துவின் மானி டத்தை அதிகம் சுட்டிக்காட்டுகின்றன. யோவான் சுவிசேஷமோ அவரது தெய்வீகம் அல்லது தேவத்துவத்தை வலியுறுத்துகின்றது. சிங்கம், காளை மற்றும் மனிதன் நடப்பது தரையில்; கழுகு பறப் பதோ வானில்.

இச்சுவிசேஷங்களை வாசிக்கும் சராசரி வாசகருக்கு இவைகளி லுள்ள வேறுபாடுகள் குழப்பத்தை ஏற்படுத்தலாம். இவ்வேறுபாடு களுக்கு விளக்கம்தான் என்ன? இந்தச் சரிதை விபரங்கள் கால வரிசை யில் (chronological) தரப்படவில்லை. அந்தந்த சுவிசேஷகனின் தனிப்பட்ட பார்வைக்கேற்ப அவை தலைப்புகள் அல்லது கருத்துக் களின் (topical and logical) அடிப்படையில் தொகுக்கப்பட்டுள்ளன.

இந்த நான்கு சுவிசேஷங்களையும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போல இரண்டிரண்டு இரட்டைகளாய்ச் சேர்க்கலாம். மத்தேயுவும் மாற்குவும் முதல் இரட்டை நூல்கள். மத்தேயுவில் கிறிஸ்துவை வேந்தராகவும், மாற்குவில் அவரை வேலைக்காரராக வும் நாம் சந்திக்கிறோம். லூக்காவும் யோவானும் அடுத்த இரட்டை நூல்கள். லூக்காவில் கிறிஸ்து மனுமகனாகவும், யோவானில் அவர் இறைமகனாகவும் வெளிப்படுகிறார்.

இந்தப் பின்னணியுடன் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பாக்கிய வசனங்களின் அடிப்படையில் உற்றுக் கவனிப்போம். பாக்கிய வச னங்கள் எட்டும் அவரில் உருவெடுத்தன. முந்திய அத்தியாயத்தில், முதலாம் மற்றும் மூன்றாம் பாக்கிய வசனங்களின் அடிப்படையில்



அவரது *''எளிமையின் அடிச்சுவடுகளைக்''* கவனித்தோம்: ''ஆவி யில் எளிமையுள்ளோர் பாக்கியவான்கள் ... சாந்தகுணமுள்ளோர் பாக்கியவான்கள்.'' இப்பொழுது இரண்டாம் மற்றும் நான்காம் பாக் கிய வசனங்களைச் சேர்த்து அவற்றின் அடிப்படையில் இயேசுவின் *''வேட்கையின் அடிச்சுவடுகளைத்''* தியானிப்போம். ''துயரப்படு வோர் பாக்கியவான்கள் ... நீதியின்மேல் பசி தாகமுள்ளோர் பாக்கிய வான்கள்.'' ''துயரப்படுவோர்'' அல்லது ''புலம்புவோர்'' என்பது பாடு களைத்தான் குறிக்கும் என்று சொல்ல முடியாது; அது வாழ்க்கையின் நிலை குறித்த ஆழ்ந்த அதிருப்தியையே பிரதானமாய்க் குறிக்கும். இருக்கும் நிலை குறித்த அதிருப்தியையும், இருக்கவேண்டிய நிலை குறித்துத் தீராத தாகம் கொள்வதையும் சேர்த்து ''வேட்கை'' எனலாம்.

''வேட்கை'' (passion) என்பதற்குப் பல்வேறு அர்த்தங்கள் தரலாம்: ''ஆழ்ந்த உணர்வு, தீராப் பசி, தணியா விருப்பம், அளவுக்கடங்கா உற்சாகம், தீவிர வாஞ்சை, போன்றவை.'' இதற்கு எதிர்மறை யானவை: ''சோம்பேறித்தனம், ஆர்வமின்மை, ஏனோதானோ என்றிருத்தல், உணர்வின்மை, கவலையீனம், அனலின்மை, சுய திருப்தி, வெதுவெதுப்பு, போன்றவை.''

■ வேட்கையின் அடிச்சுவடுகளை இயேசுவில் கவனிப்பதற்கு மத்தேயு சுவிசேஷத்தில் தொடங்கி யோவான் வரை பயணிப்போம். அவரது வாலிபப் பருவத்தை நோக்க லூக்கா சுவிசேஷத்திற்குச் செல்லுவோம். பஸ்கா பண்டிகை முடிந்த பின்னர், வாலிபன் இயேசு எருசலேமிலேயே தங்கிவிட்டது அவரது பெற்றோருக்குத் தெரிய வில்லை. அவர் தங்களுடன் திரும்பவில்லை என்று கண்டுபிடித்த அவர்கள் அவரைத் தேடிக்கொண்டு எருசலேமிற்கு வந்தனர் (லூக் 2:43-45). மூன்று நாட்களுக்குப் பின்னர் அவரை எருசலேம் தேவாலயத்தில் கண்டுபிடித்தனர். வேதப் பண்டிதர் நடுவில் அமர்ந்திருந்து அவர்களிடம் கேள்வி கேட்டுக்கொண்டும், அவர்கள் பேசுவதைக் கேட்டுக்கொண்டும் இருந்தார் (வச 46). திருமறையின் மீதுள்ள அவரது பசி தாகம் இங்கு தெளிவு. ஒவ்வொரு ஆண் மகனும்

பன்னிரண்டு வயதிலிருந்து தனது தந்தையின் தொழிலைக் கற்கத் தொடங்கவேண்டும். இங்கேயோ இயேசு, ''என் தந்தையின் அலுவல்களில் நான் ஈடுபட்டிருக்கவேண்டும் என உங்களுக்குத் தெரியாதா'' என்றார் (வச 49). திருமறையைக் கற்பதில் தீவிர ஈடுபாடு கொள்வதே விண்தந்தையின் அலுவல் என அவருக்குத் தோன்றிற்று. தேவன்பாலுள்ள நமது வேட்கையும் அவரது வசனத்தைத் தியானிப்பதிலும் ஆராய்வதிலுமே துவங்கவேண்டும். ஏனெனில், ''அனைத்திற்கும் மேலாக ஆண்டவர் தமது வார்த்தையை மேன்மையுறச் செய்துள்ளார்'' (சங் 138:2இ). பன்னிரண்டு வயதிலேயே இயேசுவுக்கு அவ்வளவு வேத அறிவு எப்படி வந்தது? அதற்குரிய பாராட்டு மரியன்னைக்கே கொடுக்கப்படவேண்டும். பழைய ஏற்பாட்டில் அவ்வம்மையாருக்கிருந்த அறிவை அவர்களது கீதத்தைப் படித்தால் தெரியும் (லூக் 1:46-55). தனது மகனுக்குப் பழைய ஏற்பாட்டைக் கற்றுக்கொடுக்க எவ்வளவு நேரம் செலவழித்திருப்பார்கள்! அருமைப் பெற்றோரே, நமது பிள்ளைகளுக்குக் கல்வியறிவைப் பாலர் பள்ளியிலிருந்தே எவ்வளவு கவனம் செலுத்தித் திணிக்கிறோம்! வேத அறிவில் அவர்களை வளர்க்கிறோமா? எது நமக்கு முக்கியம்?

■ தேவ நீதியை நிறைவேற்றுவதில் இயேசுவுக்குத் தணியாதாகமிருந்தது. யோவானால் திருமுழுக்கு பெற்றிட அவரே அவர் இருக்குமிடம் சென்றார்! யோவான் கொடுத்தது மனந்திரும்புதலுக்கேற்ற ஞானஸ்நானம். இயேசுவைப் பொருத்தவரை மனந்திரும்புதலுக்குத் தேவை எங்கே? தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மக்கள் யோவானிடம் திருமுழுக்கு பெற்றனர் (மத் 3:6). அறிக்கையிட இயேசுவிடம் இருந்த பாவம் என்ன? அவரைத் திருமுழுக்காட்டத் தனக்குத் தகுதியே இல்லை என்று வாதிட்டார் யோவான். ஆனாலும் அவரைத் தமக்குத் திருமுழுக்கு கொடுக்கும்படி இயேசு வற்புறுத்தியதேன்? அவர் எல்லா நீதியையும் நிறைவேற்ற வாஞ்சித்தார் (வச 15). நீதிக்கு வேட்கை! இங்குதான் பரிசேயர் தவறினர். அதைக் குறித்து லூக்கா எழுதியுள்ளது: ''வரி தண்டுவோரும் கடவுளுடைய நீதிநெறியை ஏற்று யோவானிடம் திருமுழுக்கு பெற்றனர்.



ஆனால் பரிசேயரும் திருச்சட்ட அறிஞரும் அவர் கொடுத்த திருமுழுக்கைப் பெறாது, தேவனது ஆலோசனையைப் புறக்கணித்தார்கள்'' (லூக் 7:29,30). திருமுழுக்கு குறித்த உபதேசத்தை விளக்க இது இடமல்ல. ஆனாலும் இயேசுவைப் பின்பற்றுவதில் திருமுழுக்கு என்பது கீழ்ப்படிதலின் முதல் படியாகும். நீங்கள் மனந்திரும்பிக் கிறிஸ்துவை விசுவாசித்தபின் இன்னும் திருமுழுக்கு பெறாதிருந்தால் மேலும் தாமதிக்கவேண்டாம். பிந்திய கீழ்ப்படிதல் கீழ்ப்படியாமை என்றாகிவிடும்.

■ தந்தையானவரிடமிருந்து இயேசுவுக்கு ஏற்கனவே, ''இவர் என் நேசக் குமாரன்; இவரில் நான் பிரியமாயிருக்கிறேன்'' என்ற வெளிப்படையான சான்று கிடைத்திருந்தும், அவர் நாற்பது நாள் உபவாசம் மேற்கொண்டார் (மத் 3:17-4:2). ஆன்மீகப் பயிற்சியாக உபவாசம் என்பது தேவனுக்கு நாம் ஏதோ கொடுப்பதற்காக அல்ல; அவரோடு தரமான நேரம் செலவழிப்பதற்காகவே. தமது வெளியுலகப் பணியை தொடங்குமுன் நேரமெடுத்து இடையூறின்றிப் பிதாவுடன் ஐக்கியப்பட இயேசு வாஞ்சித்தார். தான் பிரசங்கிக்கவும் உபதேசிக்கவும் தொடங்குமுன் எவ்வளவு முடியுமோ அவ்வளவு பிதாவானவர் பேசக் கேட்க இயேசு விரும்பினார். இதுதான் மோசேயின் அனுபவம் என்பது இயேசுவுக்குத் தெரியும். யாத்திராகமம் 34:28இல் இப்படி வாசிக்கிறோம்: ''மோசே அங்கே நாற்பது பகலும் இரவும் ஆண்டவருடன் இருந்தார். அப்பொழுது அவர் அப்பம் உண்ணவுமில்லை; தண்ணீர் பருகவுமில்லை. உடன்படிக்கையின் வார்த்தைகளான பத்துக் கட்டளைகளை ஆண்டவர் பலகைகளின்மேல் எழுதினார்.'' உடலுக்குத் தேவையான உணவை உட்கொள்ளாவிடினும், இறை வார்த்தையை இயேசுவானவர் உட்கொண்டு அதில் திளைத்திருந்தார் என்பது பிசாசின் முதலாம் சோதனைக்கு அவர் கொடுத்த பதிலிலிருந்து தெளிவு. அவர் சொன்னது: ''மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றினாலும் வாழ்வர்'' (மத் 4:4). வாய்ச்சொல் ''ஒவ்வொன்றினாலும்'' என்பது திருமறை ''முழுவதாலும்'' என்று பொருள்படும். பாலை நிலத்தில்

இயேசுவோடிருந்தது ''வன விலங்குகளும் வான தூதர்களுமே'' (மாற் 1:12,13). இவ்விதம் உபவாசித்து ஜெபிக்கச் சில நாட்களை நாம் ஒதுக்குகிறோமா? கதவை அடைத்துக்கொண்டு திருமறையுடன் தனித்து அறையில் நேரம் செலவிடுகிறோமா? திருப்பாடகனின் அறிக்கையில் சவாலுண்டு: சங் 119:20,103,131, ''எந்நேரமும் உமது நீதிநெறிகளை முன்னிட்டு என் உள்ளம் ஏங்கி உருகுகின்றது ... உமது சொற்கள் என் நாவுக்கு எத்துணை இனிமையானவை! அவை என் வாய்க்குத் தேனிலும் இனிப்பானவை ... வாயை 'ஆ' எனத் திறக்கின்றேன்; பெரு மூச்சு விடுகின்றேன்; ஏனெனில், உமது கட்டளைகளுக்காக ஏங்குகின்றேன்.''

■ வெளியிடத்தில் இயேசுவானவர் ஏறெடுத்ததாகச் சொல்லப் பட்ட முதலாம் ஜெபம் அவரது திருமுழுக்கின்போதுதான்: லூக்கா 3:21, ''மக்களெல்லாரும் திருமுழுக்கு பெற்றபோது, இயேசுவும் திருமுழுக்கு பெற்று, ஜெபம்பண்ணுகையில், வானம் திறக்கப் பட்டது.'' நம்மோடு தம்மை முழுவதும் அடையாளப்படுத்திக் கொள்ளவேண்டும் என்பதற்காக இயேசு இவ்விதம் செய்தார். திருமுழுக்குத் தொட்டிக்கு அருகில் திருமுழுக்கு கொடுப்பவரே ஜெபம் ஏறெடுப்பது நாமறிந்த வழக்கம். இங்கோ திருமுழுக்கு எடுப்பவர் ஜெபம்பண்ணுகிறார். எப்படியாவது தேவனோடு பேச வேண்டும், அவர் பேசக் கேட்கவேண்டும் என்ற வேட்கை இயேசு வின் வாழ்வில் ஓங்கியிருந்தது என்று சுவிசேஷங்கள் எல்லாவற்றி லும் வாசிக்கிறோம். ஜெபிக்க ''வேண்டுமே'' என்று ஜெபிக்கிறோமா, அல்லது ஜெபிக்க ''விரும்புவதால்'' ஜெபிக்கிறோமா? கிடைக்கும் வாய்ப்பையெல்லாம் பயன்படுத்திக்கொண்டு ஜெபிப்பதுதான் ஜெபத்தில் வாஞ்சை என்பது—

*ஜெபத்தைக் கேட்கும் எங்கள் தேவா,*
*ஜெபத்தின் வாஞ்சை தந்தருளும்;*
*ஜெபத்திலே தரித்திருந்து*
*ஜெபத்தின் மேன்மை காணச் செய்யும்!*



■ இயேசுவானவர் எதிர்கொண்ட மூன்றாம் சோதனை நம்மெல் லாருக்கும் பொதுவானது (மத் 4:8-10). செல்வத் திரட்சியை வணங்கிட இயேசு மறுப்பு தெரிவித்தார். தேவன்மீது அவருக்கிருந்த வேட்கைக்குப் போட்டியான எதற்கும் அவர் தமது வாழ்வில் இடம் தரவில்லை. உலக அரசுகளின் ''மகிமையைக்'' காட்டி இயேசுவை மயக்கச் சாத்தான் முயன்றபோது, ''அகன்று போ, சாத்தானே'' என்று அவர் கடிந்துகொண்டார். பல்வேறு வகைகளில் இச்சோதனை நமக்கு வரத்தான் செய்கிறது. இக்காரியத்தில் இயேசுவானவர் தந்துள்ள நேரடிப் போதனையை இதயத்திலிருத்துவோம்: மத் 6:21-24, ''உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும் ... எவரும் இரு தலைவர்களுக்குப் பணிவிடை செய்ய முடியாது. ஏனெனில், ஒருவரை வெறுத்து மற்றவரிடம் அவர் அன்பு செய்வார்; அல்லது ஒருவரைச் சார்ந்துகொண்டு மற்றவரைப் புறக்கணிப்பார். நீங்கள் கடவுளுக்கும் செல்வத்துக்கும் பணிவிடை செய்ய முடியாது.'' முடிவாக இயேசு சொன்னது: ''ஆகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ கவலை கொள்ளாதீர்கள்'' (வச 25). அதாவது, சம்பாதிப்பது மற்றும் சேமிப் பது குறித்துத் தேவையற்ற கவலை வேண்டாம் என்பதே அவரது போதனை. பணம் என்பது கொடூரமான தலைவன்! பண ஆசை என்பது அதை உடையவரது உயிரை வாங்கும் (நீதி 1:19; 1 தீமோ 6:9,10). நமது வாஞ்சையும் வேட்கையும் எதில் இருக்கின்றன?

■ ஆன்மீக இருட்டில் இருப்போரைக் குறித்த கரிசனை இயே சுவை வெகுவாய் அழுத்திக்கொண்டிருந்தது. நாசரேத்துதான் அவரது சொந்தவூர். அவரது உற்றார், உறவினர் அங்குதானிருந்தனர். அவரோ தவிர்க்க முடியாத தரிசனத்துடன் நாசரேத்திலிருந்து நப்தலிக்கு நகர்ந்தார். ஏசாயாவிலிருந்து ஒரு தீர்க்கதரிசன வசனத்தை மேற்கோள் காட்டி மத்தேயு இதனை இவ்விதம் எழுதுகிறார்: ''காரிருளில் இருந்த மக்கள் பேரொளியைக் கண்டார்கள். சாவின் நிழல் சூழ்ந்துள்ள நாட் டில் குடியிருப்போர்மீது சுடரொளி உதித்துள்ளது'' (மத் 4: 13-16).

உலகின் அனைத்து இனங்களுக்கும் ஆசீர்வாதமாயிருக்கும்படி ஆபிரகாம் தனது சொந்தவூரை விட்டுப் புறப்பட்டார். ஆபிரகாமின் குமாரனும் அதையன்றோ செய்தார்? இயேசு ஓர் யூதனாயிருந்தும் யூதரல்லாதோரைக் குறித்தே அவரது இதயம் பாரங்கொண்டது. மந்தைக்கு வெளியே இருப்போர் மீதே எப்பொழுதும் அவருக்குக் கரிசனை. கப்பர்நகூமில் சுகமளிக்கும் அற்புதங்கள் நிகழ்ந்தபின்னர், அவர் வனாந்திரமான ஓர் இடத்திற்கு ஜெபத்திற்காய்த் தனித்துச் சென்றிருந்தாலும், மக்கள் அவரைத் தேடிச் சென்றனர் (மாற் 1:34-37). அவரோ தமது சீடரைப் பார்த்துச் சொன்னது: ''நாம் அடுத்த ஊர்களுக்கும் போவோம், வாருங்கள். அங்கும் நான் நற்செய்தியைப் பறைசாற்றவேண்டும்; இதற்காகவே நான் வந்திருக்கிறேன்'' (வச 38). மக்களது தேவைகளைச் சந்திக்க அவர் நாசரேத்தை விட்டுக் கப்பர்நகூமிற்கு வந்தார்; இப்பொழுது கப்பர்நகூமை விட்டு மற்ற ஊர்களுக்கு விரைகிறார். ஆத்துமாக்கள் மீது அவருக்கிருந்த பரிவு ணர்வே அவரை இவ்விதம் துரத்திற்று. ஐயகோ, ''ஒன்றுமில்லாத வர்களை'' மனதிற்கொள்ளாமல் நற்செய்தி திரும்பத் திரும்ப அறி விக்கப்பட்டுள்ள நமது சவுகரிய எல்லைக்குள்ளேயே தங்கிவிடு கிறோமே! ஆசீர்வாதங்களைப் பெற்றுள்ள மக்களது வற்புறுத்தல் களுக்கு இணங்கிவிடாது ஆண்டவர் கன்னி நிலங்களை நாடிச் சென்றார் (லூக் 4:42,43). ''இந்தத் தொழுவத்தில் இல்லாத வேறே ஆடுகள் எனக்குண்டு; அவற்றையும் நான் கொண்டுவர வேண்டும்'' என்பதே நல்ல மேய்ப்பரான அவரது துடிப்பு (யோ 10:16). ''நமக்கு'' என்பது ''பிறர்க்கு'' என்று மாறவேண்டும்! இதைத்தான் ஆத்தும வாஞ்சை என்கிறோம்.

■ ஆண்டவர் தமது முதல் அழைப்பிலேயே ஆத்தும வாஞ்சை எனும் சால்வையைத் தமது சீடர்மீது வீசியெறிந்தார். அவரது நேரடியான அழைப்பைக் கவனியுங்கள்: ''என் பின்னே வாருங்கள்; உங்களை மனிதரைப் பிடிப்போர் ஆக்குவேன்'' (மத் 4:19). தம்மைப் பின்பற்றும் ஒவ்வொருவரும் அவரைப் பின்பற்ற மற்றவர்களைச் சேர்க்கவேண்டும் என்பதே அவரது அவா. அவரது சீடர் ஒவ்



வொருவரும், முழுநேரப் பணியாளரோ, பகுதிநேரப் பணியாளரோ, அனைத்துநேர ஆத்துமாதாயகராய் இருக்கவேண்டும் என்பதே அவரது சித்தம். இதில் சோம்பேறித்தனத்தையோ சமரசத்தையோ அவர் சகிக்கவே மாட்டார். ''என்னோடு மக்களைக் கூட்டிச் சேர்க் காதவர் அவர்களைச் சிதறச் செய்கிறார்'' என்ற இயேசுவின் வார்த்தை களில் குழப்பம் ஏது? (மத் 12:30). நீங்கள் இயேசுவுக்கு ஆள் சேர்ப்ப வராயிருக்கவேண்டும்; இல்லையேல் ஆட்களைத் துரத்துபவர்தான். ஆத்துமாதாயகனாயிராத கிறிஸ்தவன் எவனும் பின்வாங்கியவனே. இதோ, சில கேள்விகள்: ஆத்தும வாஞ்சையுடன் பிறருக்கு நற்செய் தியை அறிவிக்கிறீர்களா? விறுவிறுப்பாய் நற்செய்திக் கைப்பிரதி களை விநியோகிக்கிறீர்களா? சடங்காச்சார மூடப்பழக்கங்களால் கட்டப்பட்டிருப்போரைச் சந்திக்க உங்கள் கால்கள் கிராமங்களுக்கு விரைகின்றனவா? நேரடி நற்செய்தியறிவிப்புப் பணிக்காய் வாரந் தோறும் எத்தனை மணி நேரங்கள் ஒதுக்குகிறீர்கள்? மிஷனரிப் பணியில் ஈடுபாடு கொள்ள இதய பாரத்துடன் உங்கள் பிள்ளைகளை ஊக்குவிக்கிறீர்களா? நற்செய்தியறிவிப்பில் நமது வெதுவெதுப்பான நிலை மற்றும் கரிசனையின்மைக்காய் நாம் ''துயரப்படுவோம்!'' புலம்புவோம்! நீதியின்மேல் நமக்குப் பசிதாகம் இருக்குமானால் அநேகரை நீதிநெறிக்கு வழிநடத்த வீறுகொண்டு எழும்புவோமே! (தானி 12:3ஆ). ஆத்துமாதாய அக்கினியைத் திரும்பவும் உங்கள் இதயத்தில் போட்டுவிட ஆண்டவரிடம் வேண்டுங்கள். ''ஆண்ட வரே, ஆத்துமாக்களைத் தாரும்; இல்லையேல் என் ஆத்துமாவைத் தீரும்'' என்று பழம் பரிசுத்தர் ஒருவர் கதறினார்!

■ பந்தபாச உறவுகளைவிட ஆன்மீக ஐக்கியத்தையே இயேசு வெகுவாய் நாடினார். அவரது வார்த்தைகளைக் கேட்கவும், அவரால் வியாதிகள் நீங்கிக் குணமடையவும் மக்கள் எப்பொழுதும் அவரைச் சூழ்ந்திருந்தனர். ஒருமுறை அவர் ஒரு வீட்டிலுள்ள பெருங்கூட்ட மொன்றிற்கு உபதேசித்துக்கொண்டிருக்கையில் அவரது தாயாரும் சகோதரரும் அவருடன் பேச விரும்பி வெளியே நின்றுகொண்டிருந்

தனர். இத்தகவல் அவருக்குக் கொடுக்கப்பட்டது. அவரது உடனடிப் பதிலைக் கவனியுங்கள்: ''என் தாய் யார்? என் சகோதரர்கள் யார்?'' பின்னர் தமது சீடர் பக்கம் கையை நீட்டி, ''என் தாயும் சகோதரர்களும் இவர்களே. விண்ணகத்திலுள்ள என் தந்தையின் திருவுளத்தை நிறை வேற்றுபவரே என் சகோதரரும் சகோதரிகளும் தாயும் ஆவர்'' என்றார் (மத் 12:46-50). இன்னொரு சமயம் அவர் போதித்துக்கொண்டிருக் கையில், கூட்டத்திலிருந்த ஒரு மாது தனது சத்தத்தை உயர்த்தி, ''கருத்தாங்கிப் பாலூட்டி வளர்த்த உம் தாய் பேறுபெற்றவர்'' என்றார் (லூக் 11:27). அதற்கு அவர் மறுமொழியாய்ச் சொன்னது: ''இறை வார்த்தையைக் கேட்டு அதைக் கடைப்பிடிப்போர் இன்னும் அதிகம் பேறு பெற்றோர்'' (வச 28). இயேசுவின் இவ்வித வாஞ்சையும் தாகமும் அவரது வாழ்நாள் முழுவதிலும் தலையோங்கி நின்றது; அவரது இறப்புக்குப் பின்னரும் அது தொடர்ந்தது. உயிர்த்தெழுந்த பின்னர் அவர் சொல்லியவற்றில் முக்கியமானதொன்று, அவரும் அவரது சீடரும் தேவனது தந்தைத்துவத்தை (fatherhood of God) பொதுவாய் அனுபவிக்கலாம் என்ற சத்தியமே. ஆண்டவர் மகத லேனா மரியாளிடம் சொன்ன வார்த்தைகள்: ''நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம், 'என் தந்தையும் உங்கள் தந்தையும், என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்' எனச் சொல்'' (யோ 20:17). நமது குடும்பத்தினரைவிடக் கடவுள் குடும்பத்தை அதிகம் நேசிக்கிறோமா? கடினமான கேள்விதான்; ஆனால் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றவேண்டுமானால் இவ்விதமான சில தெரிவுகளைச் செய்தேயாகவேண்டும்.

■ அது வேதனையின் வேளையோ, சாதனையின் வேளையோ, இயேசுவானவர் தமது தந்தையானவரோடு தனித்து நேரம் செலவழிப் பதையே பிரதானமாக வாஞ்சித்தார். திருமுழுக்கினன் யோவான் இறந்ததைக் கேட்டபோது, தாம் இருந்த இடத்திலிருந்து படகில் ஏறி ''வனாந்திரமான ஓரிடத்திற்குத்'' தனித்துச் சென்றார் (மத் 14:12,13). துக்க வேளையில் தனித்திருக்க விரும்புவது புரிதற்குரியது. ஐயா



யிரம்பேருக்கு அதிகமானோருக்கு அற்புதமாய் உணவளித்ததைத் தொடர்ந்தும் அவர் தனித்திருக்கச் சென்றார். ''மக்களை அனுப்பி விட்டு, அவர் தனியே தேவனிடம் வேண்டுவதற்காக ஒரு மலையின் மேல் ஏறினார். பொழுது சாய்ந்த பிறகும் அங்கே அவர் தனியாக இருந்தார்'' (வச 22,23). இது சங்கீதக்காரனின் அறிக்கையை நமக்கு நினைவுபடுத்துகிறது: சங் 42:1,2, ''மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ் சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன் மேலேயே, தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?''

ஜெபிக்கவேண்டுமென்ற வாஞ்சை கிறிஸ்துவின் வாழ்க்கையில் தலைதூக்கி நின்றது. இதனைச் சுட்டிக்காட்டும் வசனப்பகுதிகள் சுவிசேஷங்களில் நிறையவுண்டு —

மாற்கு 1:35, ''இயேசு அதிகாலையில் இருட்டோடு எழுந்து தனிமையான ஓரிடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்; அங்கே அவர் தேவனை நோக்கி ஜெபித்துக்கொண்டிருந்தார்.''

லூக்கா 5:15,16, ''இயேசுவைப்பற்றிய செய்தி மிகுதியாய்ப் பரவிற்று. அவரது சொல்லைக் கேட்கவும் தங்கள் நோய்கள் நீங்கி நலம் பெறவும் பெருந்திரளான மக்கள் அவரிடம் கூடிவந்துகொண் டிருந்தார்கள். அவரோ ஆள் நடமாட்டம் இல்லாத இடங்களுக்குச் சென்று தனித்திருந்து ஜெபம்பண்ணினார்.''

லூக்கா 6:12,13, ''அந்நாட்களில் அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இரவு முழுவதும் தேவனை நோக்கி ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்.''

லூக்கா 11:1, ''அவர் ஓரிடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவரது சீடரில் ஒருவர் அவரைப் பார்த்து, 'ஆண்டவரே, யோவான் தனது சீடருக்கு ஜெபம்பண்ணக் கற்பித்ததுபோல, நீரும் எங்க ளுக்குக் கற்பிக்கவேண்டும்' என்றார்.''

லூக்கா 21:37,38, ‘‘அவர் பகல் வேளைகளில் தேவாலயத்தில் உபதேசம்பண்ணிக்கொண்டிருந்து, இரவு வேளைகளில் வெளியே போய், ஒலிவம் என்ற மலையிலே தங்கிவந்தார்.’’

மத்தேயு 26:36, ‘‘இயேசு அவர்களோடு கெத்செமனே என்ற இடத்திற்கு வந்து, சீடர்களைப் பார்த்து, ‘நான் அங்கே போய் ஜெபம் பண்ணும்வரை நீங்கள் இங்கே உட்கார்ந்திருங்கள்’ என்றார்.’’

கெத்செமனே தோட்டத்தில் இயேசுவானவர் ஏறெடுத்த ஜெபத்தில் கவனிக்கவேண்டிய இரு முக்கிய காரியங்கள் உண்டு: (1) ஒப்புக் கொடுத்தல் (yieldedness) (லூக் 22:41,42). ‘‘அவர் முழந்தாள்படியிட்டு, ‘பிதாவே, உமக்கு விருப்பமானால் இத்துன்பக் கிண்ணத்தை என்னிடமிருந்து அகற்றும்; ஆனாலும் எனது விருப்பத்தின்படி அல்ல; உமது விருப்பத்தின்படியே நிகழட்டும்’ என்று ஜெபம்பண்ணினார்’’ (2) ஊக்கம் (earnestness) (வச 43,44). ‘‘அப்பொழுது விண்ணிலிருந்து ஒரு தூதன் அவருக்குத் தோன்றி அவரை வலுப்படுத்தினார். அவரோ மிகுந்த வேதனைக்குள்ளாகவே, உருக்கமாய் ஜெபம்பண்ணினார். அவரது வியர்வை பெரும் இரத்தத் துளிகளாய்த் தரையில் விழுந்தது.’’ பிடிவாதம் இல்லாது, ஆனால் ஊக்கத்துடன் ஜெபத்தில் தரித்திருந்தார்! இவ்விதம் அவர் தமது ஆவியில் வியாகுலத்துடன் பெருமூச்சு விட்ட வேளைகள் பலவுண்டு —

□ காது கேளாதவனும் பேச முடியாதவனுமாகிய ஒருவனை இயேசு தொடும்படிக் கெஞ்சிக்கொண்டு மக்கள் அவரிடம் கொண்டு வந்தனர். இயேசு அவனைக் கூட்டத்திலிருந்து தனியே அழைத்துச் சென்று, தமது விரல்களை அவனது காதுகளில் இட்டு, உமிழ்நீரால் அவனது நாவைத் தொட்டார். பிறகு வானத்தை அண்ணாந்து பார்த்து, **பெருமூச்சு** விட்டு, அவனை நோக்கி, ‘‘எப்பத்தா,’’ அதாவது ‘‘திறக்கப்படு’’ என்றார். உடனே அவனது காதுகள் திறக்கப்பட்டன; நாவும் கட்டவிழ்ந்தது; அவன் தெளிவாகப் பேசினான் (மாற் 7:32-35). இயேசு பேசியது அரபி மொழி போன்ற அரேமி மொழி.



அது வணிகத்துறையில் பயன்பாட்டிலிருந்தது. தமஸ்கு சாலையில் சவுலிடம் இயேசு எபிரெய மொழியில் பேசினார் (அப் 26:14). அவர் எவ்வளவாய்த் துயருற்றார் என்பதைக் காட்டவே அவர் பேசிய மூலப் பதங்கள் இங்கு தரப்பட்டுள்ளன.

□ பரிசேயர் வந்து இயேசுவோடு வாதாடி, வானத்திலிருந்து அடையாளம் ஒன்று காட்டும்படி அவரைச் சோதித்தனர். அவர் **பெருமூச்சு** விட்டு, ‘‘இத்தலைமுறையினர் அடையாளம் கேட்பதேன்? இத்தலைமுறையினருக்கு அடையாளம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது’’ என்று உறுதியாய்ச் சொன்னார் (மாற் 8:12). இன்னொரு இடத்தில் அவர் சொன்னது: ‘‘இந்தத் தீய விபசாரத் தலைமுறையினர் அடையாளம் கேட்கின்றனர். இவர்களுக்குத் தீர்க்கன் யோனாவின் அடையாளம் தவிர வேறு எதுவும் கொடுக்கப்படமாட்டாது’’ (மத் 12:39). தாம் மூன்று நாட்கள் மரணக்கட்டில் இருக்கப்போவதையே இயேசு இங்கு எண்ணிப்பார்த்தார் (வச 40). எவ்வளவு வியாகுலப் பட்டிருப்பார்!

□ லாசருவின் சகோதரி மரியாள் அழுவதையும், அவரோடு வந்த யூதர்கள் அழுவதையும் இயேசு கண்டபோது, அவர் **உள்ளம் குமுறிக் கலங்கினார்**. லாசருவின் கல்லறைக்கு அருகில் அவர் வந்தபோது ‘‘கண்ணீர் விட்டு அழுதார்’’ (யோ 11:33-35).

□ இயேசு எருசலேம் நகரை நெருங்கி வந்ததும் அதைப் பார்த்து **அழுதார்** (லூக் 19:41).

இவையெல்லாவற்றையும் சேர்த்துத் தீர்க்கன் ஏசாயா இயேசுவைத் ‘‘துக்கம் நிறைந்தவர், பாடு அனுபவித்தவர்’’ என வர்ணித்தார் (ஏசா 53:3). இயேசுவை மக்கள் இவர் எரேமியாவோ என்று நினைத்தற்கு இதுவே காரணமாயிருக்கலாம் (மத் 16:14). எரேமியா ஒரு புலம்பல் தீர்க்கதரிசிதானே! (எரே 9:1). எபிரெய நிருப ஆக்கியோன் எழுதுவது: ‘‘அவர் மனுவுடலில் இருந்த நாட்களில், தம்மைச் சாவிலிருந்து

காப்பாற்ற வல்லவரை நோக்கி, உரத்த சத்தத்தோடும், கண்ணீரோடும் விண்ணப்பம்பண்ணி, வேண்டுதல் செய்து, தமக்கிருந்த **பயபக்தியின்** பொருட்டுக் கேட்கப்பட்டார்'' (எபி 5:7). பிரியமானவரே, நமக்குப் பாடத் தெரியும்; பெருமூச்சு விடத் தெரியுமா? (Singing vs. Sighing). ஊக்கமும் பாரமும் நமது ஜெபங்களில் குறைவாயிருப்பதாலேயே அவை கேட்கப்படுவதில்லை. இதைத்தான் ''கர்த்தருடைய பாரம்'' என்று முற்காலத் தீர்க்கர்கள் குறிப்பிட்டனர் (ஏசா 13:1; 15:1; 17:1; 19:1; முதலியன). தனது பிள்ளைகளுக்குக் கர்த்தருடைய பாரம் உண்டாகவேண்டுமென்ற ஏக்கத்துடன் தீர்க்கர் லியோனார்டு ரேவன்ஹில் (1907-1994) அவர்கள் தனது எழுப்புதல் நூல்களில் ஒன்றை அவர்களுக்கு அர்ப்பணித்தார்! என்னே வாஞ்சை!

■ தேவாலய முற்றங்களை வணிகமயமாக்கினவர்கள்மீது இயேசுவுக்கு அவ்வளவு கோபம் வரக் காரணம் என்னவென்று நாம் வியக்கலாம். அவர்கள் விற்றுக்கொண்டிருந்த பறவைகள், மிருகங்கள் எல்லாம் பலியிடத்தானே! காசு மாற்றியது ஆலய வரி கட்டத்தானே! தேவாலயத்தின் ''அதிமுக்கிய'' நோக்கம் அடிபட்டதாலேயே இயேசு கொதித்தெழுந்தார். வணிகர்களைப் பார்த்து அவர் சொன்னது: ''என் வீடு **ஜெப** வீடு என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்'' (மத் 21:12,13). இதைவிடக் கடுமையான வார்த்தைகள் சொல்வதரிது. நவீன காலத் திருச்சபைக்கு இவ்விதக் கடிந்துகொள்ளுதல் பொருந்தும். நியாயமான எத்தனையோ காரியங்கள் நாம் செய்யலாம்; ஆனால் அதில் முதன்மைத்துவம், முன்னுரிமை எதற்குத் தரப்படுகிறது? பல்வேறு வகைகளில் நமது ஆலயங்களை நாம் அலங்கரிக்கலாம்; ஆனால் பரிசுத்தவான்களின் ''ஜெபங்கள்'' எனும் ''தூப வாசனை'' தேவனுக்குமுன் எழும்புகிறதா? (வெளி 8:4). பண்டிகைகளுக்கும் வைபவங்களுக்கும் நமது ஆலயங்கள் நிரம்பி வழிகின்றன; ஆனால் உபவாசத்திற்கும் மன்றாட்டு ஜெபத்திற்கும் வருவோரின் எண்ணிக்கை? வார நாட்களில் நடக்கும் ஜெபக் கூட்டங்களுக்காய் வருவோரின் எண்ணிக்கை பரிதாபம்! தேவாலயத்தைத் துர்ப்பிரயோகித்தோர்மீது இயேசுவின் கோபத்தை யோவான் எப்படி விவரிக்கிறார், பாருங்கள்: ''என் தந்தையின் இல்லத்தைச் சந்தை ஆக்காதீர்கள் என்றார் இயேசு. அப்போது அவரது சீடர், 'உம் இல்லத்தின்மீதுள்ள **ஆர்வம்** (பக்தி வைராக்கியம்) என்னை எரித்து விடும்' என்று மறைநூலில் எழுதியுள்ளதை நினைவுகூர்ந்தார்கள்'' (யோ 2:14-17). ஞாயிறு ஆராதனைகளில் அறிவிப்புகளுக்கும் வரவு செலவுக் கணக்கு அறிக்கைகளுக்கும் எவ்வளவோ நேரத்தை விரயமாக்கிவிட்டு, பிரசங்க நேரத்தையோ இருபது நிமிடம் எனக் குறைத்துவிடுகிறோம்! ''தேவா, சாட்டைகளோடு தீர்க்கர்களை எங்கள் நடுவில் அனுப்பிவையும்!'' ஆலயக் கட்டிடங்கள்மீது நமக்கு அவ்வளவு பயபக்தி; ஆனால் சபையாரின் ஆன்மீக நிலை கண்டு பதறுவோர் யாரோ?



தேவாலயத்தை இயேசு இருமுறை சுத்தம்பண்ணினார்: ஒன்று அவரது ஊழியத் துவக்கக் காலத்தில் (யோ 2:13-17); அடுத்தது முடிவுக்கட்டத்தில் எருசலேமுக்குள் பவனி செல்கையில் (மத் 21: 12,13). எவ்வளவு சீக்கிரம் திருச்சபை கெட்டுவிடுகிறது, பாருங்கள்!

■ கடினமான கேள்விகள் கேட்டு எதிரிகள் எப்பொழுதெல்லாம் இயேசுவை மடக்க முயன்றார்களோ, அப்பொழுதெல்லாம் வாய்ப்பைப் பயன்படுத்தி உயரிய ஆன்மீகச் சத்தியங்களை அவர் போதித்துவிட்டார். ''போதகரே, நியாயப்பிரமாணத்தில் மிகப் பெரிய கட்டளை எது?'' என்று வழக்கறிஞனாயிருந்த பரிசேயன் ஒருவர் அவரிடம் கேட்டார் (மத் 22:34-36). தமக்கு மிகவும் பிரியமான உபாகமம் புத்தகத்திலிருந்து இயேசு அவருக்குப் பதிலளித்தார். அவர் சொன்னது: ''உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும் உன் தேவனாகிய கர்த்தரிடம் அன்பு செலுத்து. இதுவே முதலாம் பிரதான கற்பனை'' (வச 37,38; உபா 6:5). ''இருதயம்'' (heart) என்பது ''உணர்வுகளைக்'' (feelings) குறிக்கும். ''ஆத்துமா'' (soul) என்பது ''உள்ளான அறிவைக்'' (insights) குறிக்கும். ''மனது'' (mind) என்பது ''சிந்தனைகளைக்'' (thoughts) குறிக்கும்.

உபாகமத்திலுள்ள வசனத்தில் ''உன் முழு பலத்தோடு'' என்றும் சேர்க்கப்பட்டுள்ளது. ''பலம்'' (might) என்பது ''உடலின் சக்தியைக்'' (physical strength) குறிக்கும். ஆம், தேவனுக்கான வேட்கை என்றால் அது ''அனைத்தும்'' அவருக்கே எனப் பொருள்படும்! ''முழு'' இருதயம்! ''முழு'' ஆத்துமா! ''முழு'' மனது! ''முழு'' பலம்!

*அனைத்தும் கிறிஸ்துவுக்கே — எந்தன்*
*அனைத்தும் அர்ப்பணமே;*
*என் முழுத் தன்மைகள் ஆவல்களும்*
*அனைத்தும் கிறிஸ்துவுக்கே!*

■ தமது தந்தையாம் தேவன்மீது தமக்கிருந்த அன்பைத் தணிக்கக்கூடிய எதற்கும் இயேசு எதிராயிருந்தார். தாம் எவ்விதம் பாடுபட்டுக் கொல்லப்படுவார் என்று தமது சீடரிடம் மனந்திறந்து அவர் சொன்னபோது, சீமோன் பேதுரு இயேசுவைத் தனியே அழைத்துக் கொண்டுபோய் அவரைக் கடிந்துகொண்டார் (மாற் 8:31,32). அவரை இயேசு எவ்விதம் கடிந்துகொண்டார், பாருங்கள்: ''என் கண்முன் நில்லாதே, சாத்தானே. நீ கடவுளுக்கு ஏற்றவைபற்றி எண்ணாமல் மனிதருக்கு ஏற்றவைபற்றியே எண்ணுகிறாய்'' (வச 33). தேவன்மீது சிதறாத அன்பைப் பதிக்கவேண்டுமானால் அவருக்கேற்றவை, மனிதருக்கேற்றவை ஆகிய இரண்டுக்கும் இடையில் சில கடினமான தெரிவுகள் செய்யவேண்டும் என்பதே இங்கு இயேசு நமக்குப் போதிப்பது. இது நிசமாகவே ஒரு போராட்டம்தான். தேவன்மீதுள்ள அளவு கடந்த அன்பின் வேட்கை மட்டுமே நம்மை வெற்றியடையச் செய்யும். தேவனுக்கடுத்தவற்றிற்கு ''ஆம்'' என்றும், உலகிற்கடுத்தவற்றிற்கு ''இல்லை'' என்றும் சொல்லவேண்டுமானால் வாழ்வின் சில இன்பங்களையும் உசிதங்களையும் துறந்தே ஆகவேண்டும். தன்னல மறுப்பும், சிலுவை சுமப்பும் அதுதான் (வச 34). உன்னத தேவன்மீது அன்பும் உலகத்திலுள்ளவைமீது அன்பும் சேர்ந்து குடியிருக்க முடியாது (1 யோ 2:15). நவீன உபதேசங்களில், கடவுளை நேசிப்பதைக் குறித்துப் பேசும்போது அதற்கான நிபந்தனையாகிய தன்னல மறுப்பைக் கவனியாது விட்டுவிடுகிறோம். புரட்சிகரமான சீடத்துவம் என்பது இரண்டையும் சேர்க்கும்.



■ தேவனது பிள்ளைகளோடு ஐக்கியம் கொள்வதிலும் இயேசுவுக்கு அளவிலா ஆசை இருந்தது. தமது சீடரை அவர் தெரிந்துகொண்டதின் பிரதான நோக்கமே அவர்கள் ''அவரோடு'' இருக்கவேண்டும் என்பதே (மாற் 3:13.14). ''அவருக்காய்'' பணியாற்றப் புறப்பட்டுச் செல்வது அடுத்ததே. தமது சீடரின் தோழமையை இயேசு குறிப்பாய் ஜெபத்திற்காய் அதிகம் நாடினார். பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோரை ஜெபிப்பதற்காய் ஒரு மலைக்குக் கூட்டிச்சென்ற வேளையில்தான் இயேசு மறுரூபமானார் (லூக் 9:28,29). ஜெபிப்பதற்காகத் தமது சீடருடன் அடிக்கடி கெத்செமனே என்ற தோட்டத்திற்குச் சென்றுவந்தார் (யோ 18:1,2). காட்டிக்கொடுக்கப்பட்ட அன்றிரவு இயேசு எங்கிருப்பார் என்று அப்படித்தான் யூதாசுக்குத் தெரிந்தது. இயேசுவானவர் மனுவுடல் எடுப்பதற்கு முன்னதாகவே நம்மோடு ஐக்கியப்பட அவர் வாஞ்சித்து வந்தாராம்: நீதி 8:30,31, ''நான் அவர் அருகில் அவரது செல்லப் பிள்ளையாய் இருந்தேன்; நாள்தோறும் அவருக்கு மகிழ்ச்சியூட்டினேன்; எப்போதும் அவரது முன்னிலையில் மகிழ்ந்து செயலாற்றினேன். அவரது பூவுலகில் எங்கும் மகிழ்ந்து செயலாற்றினேன்; மனித இனத்தோடு இருப்பதில் மகிழ்ச்சி கண்டேன்!'' இப்பொழுதும், அவர் பரமேறிய பின்னரும், நம்முடன் ஐக்கியமென்றால் அவருக்கு அலாதிப் பிரியம். இதனைச் சங்கீதம் 68:18இல் வாசிக்கிறோம்.

இக்கட்டான வேளையில் மட்டுமே நாம் இறைமக்களின் சகவாசம் நாடுகிறோம். கடைசி மணி நேரத்தில்தான் கெத்செமனேக்கு விரைகிறோம். இயேசுவோ, ஜெபத்தில் தமது சீடர் வல்லவர்களாயிராதிருந்தும், அவர்களுடன் அடிக்கடி அங்குச் சென்றார். ஜெபத்திற்குத்தான் என்றிருக்கவேண்டிய அவசியமில்லை, சாப்பிடுவதற்காகவும் ஐக்கியமாய்க் கூடிவரலாம். இயேசுவின் இறுதியான இராப்போஜனம் குறித்து நாம் வாசிப்பது: ''நேரம் ஆனதும் பன்னிரு அப்போஸ்தலரோடு இயேசு பந்தியில் அமர்ந்தார். அப்போது அவர் அவர்களை நோக்கி, 'நான் துன்பங்கள் படுமுன் உங்களோடு இந்தப் பஸ்கா விருந்தை உண்பதற்கு **மிகமிக ஆவலாய்** இருந்தேன்' என்றார்'' (லூக்

22:14,15). தீவிர வாஞ்சை, தணியா தாகம், ஆழ்ந்த விருப்பம், தடுக்க முடியா வேட்கை (passion) போன்றவற்றை இயேசுவின் அடிச்சுவடுகளில் கவனித்து வருகிறோம். இவையில்லாது அவர் இருந்ததேயில்லை.

■ இறைமக்களுடன் ஐக்கியம் கொள்ளவேண்டியதை வலி யுறுத்தும் அதே வேளையில் நாம் அறையில் தனித்து தேவனோடு செலவழிக்கவேண்டிய அனுபவத்தையும் தியாகம் செய்துவிடக் கூடாது. யோவான் 7:53இலும் 8:1இலும் இரு முக்கிய வாக்கியங்கள் உண்டு: ''பின்பு அவரவர் தங்கள் தங்கள் வீட்டுக்குப் போனார்கள் ... இயேசுவோ ஒலிவ மலைக்குப் போனார்!'' தனி ஜெபத்திற்காய் அவர் சென்ற இடமே அவருக்கு ''இன்ப இல்லம்'' (Home Sweet Home!). தேவனோடு தனித்திருப்பது ஒன்றே தகும் எனும் வேளை கள் நமது வாழ்க்கையில் வரத்தான் செய்யும். இயேசுவானவர் தமது மண்ணுலக வாழ்வின் இறுதிக்கட்டத்திற்கு வந்தபோது, தமது சீட ரிடம் சொன்னது: ''இதோ, காலம் வருகிறது; ஏன், வந்தேவிட்டது. அப்போது நீங்கள் சிதறடிக்கப்பட்டு ஒவ்வொருவரும் அவரவர் வீட்டுக்கு ஓடிப்போவீர்கள்; என்னைத் தனியே விட்டுவிடுவீர்கள். ஆயினும் நான் தனியாய் இருப்பதில்லை; தந்தையானவர் என்னுடன் இருக்கிறார்'' (யோ 16:32).

இயேசுவிடமிருந்த இந்த இறைப்பிரசன்ன உணர்வினால் நாம் எப்பொழுதும் ஆட்கொள்ளப்படவேண்டும். அவரது சாட்சியைக் கவனியுங்கள்: ''நான் ஆண்டவரை எப்போதும் என் கண்முன் வைத் துள்ளேன்; அவர் என் வலப்பக்கம் உள்ளார்; எனவே நான் அசை வுறேன். இதனால் என் இதயம் பேருவகை கொள்கின்றது; என் நாவு மகிழ்ச்சியால் நிறைந்துள்ளது; என் உடலும் எதிர்பார்ப்பில் நிலைத் திருக்கும். ஏனென்றால் என்னைப் பாதாளத்திடம் ஒப்புவிக்க மாட்டீர்; உம் தூயவரைப் படுகுழியைக் காணவிடமாட்டீர். வாழ்வின் வழியை நான் அறியச் செய்வீர்; உமது முன்னிலையில் எனக்கு நிறைவான மகிழ்ச்சி உண்டு'' (அப் 2:25-28; சங் 16:8-11). ''ஏன்'' என்று இயேசு தமது பிதாவிடம் என்றுமே கேட்டதில்லை. ஆனால் அவ



ரோடுள்ள தமது ஐக்கியம் நொடிப்பொழுது அறுபட்டபோது, ''என் தேவனே, என் தேவனே, ஏன் என்னைக் கைவிட்டீர்?'' என்று கதறி னார் (மாற் 15:34). கொடூரமான இவ்வேளை ஏசாயா 54:7,8இல் விவரிக்கப்பட்டுள்ளது: ''நொடிப்பொழுதே நான் உன்னைக் கை விட்டேன்; ஆயினும் பேரிரக்கத்தால் உன்னை மீண்டும் ஏற்றுக் கொள்வேன். பொங்கிவரும் சீற்றத்தால் இமைப்பொழுதே எனது முகத்தை உனக்கு மறைத்தேன்; ஆயினும் என்றுமுள பேரன்பால் உனக்கு இரக்கம் காட்டுவேன் என்கிறார் ஆண்டவர்!'' இதுதான் இயேசு நமக்காய்ப் ''பாவம்'' ஆன வினாடி (2 கொரி 5:21). பாவத் தைப் பார்க்கமாட்டாத சுத்தக் கண்ணராகிய தேவப் பிதாவுக்குத் தமது முகத்தை மறைப்பதைவிட வேறு வழியில்லை (ஆப 1:13). தேவன் எப்பொழுதும் நம்மோடுதான் இருக்கிறார்; ஆனால் நாம் விசுவாசத் தினால் அதை ஏற்று அவரைத் துதிக்கவேண்டும். இதுவே உண்மை யான வாஞ்சையின் வெளிப்பாடு.

■ இயேசுவுக்கு நியமிக்கப்பட்ட வேலையில் அவர் எவ்வளவு தீவிர ஈடுபாடு கொண்டிருந்தாரென்று பார்ப்போம். இதைக் குறித்த வசனங்கள் பெரும்பாலும் யோவான் சுவிசேஷத்திலேயே உண்டு —

□ ஒரு சமாரியப் பெண்ணுடன் இயேசு உறவாடிக்கொண்டிருந்த போது அவரது சீடர்கள் அருகிலிருந்த கிராமத்திலிருந்து அவருக்கு ஆகாரம் கொண்டுவந்தனர். சாப்பிடும்படி அவர்கள் அவரைத் துரிதப்படுத்தியபோது அவர் சொன்னது: ''நான் உண்பதற்குரிய உணவு ஒன்றுண்டு; அது உங்களுக்குத் தெரியாது'' (யோ 4:31,32). யாராவது அவருக்குச் சாப்பாடு கொடுத்திருப்பார்களோ என்று சீடர் நினைத்தனர். அவரோ அவர்களுக்கு விளக்கியது: ''என்னை அனுப் பியவரின் திருவுளத்தை நிறைவேற்றுவதும் அவர் கொடுத்த **வேலை யைச்** செய்து முடிப்பதுமே எனது உணவு'' (வச 33,34). ''சாப்பி டுகிறேனோ இல்லையோ, வேலையை முடிக்கவேண்டும்'' என்பதே இயேசுவின் வேட்கை! ஐயகோ, இறைப்பணிக்கு எவ்வளவு இலகுவாக நாம் சாக்குப்போக்கு சொல்லுகிறோம்! சூழ்நிலையின் அத்தனை காரியங்களும் சாதகமாயிருந்தால்தான் திருப்பணி என்

றால் இறையரசு வளர்ந்து பெருகாது. அறுவடைக்கு ஆயத்தமா யிருந்த ஆத்தும அறுவடை குறித்தே இங்கு இயேசு பேசினார் (வச 35). ''காற்று தக்கவாறு இல்லை என்று காத்துக்கொண்டே இருப் போர் விதை விதைப்பதில்லை; வானிலை தக்கபடி இல்லை என்று சொல்லிக்கொண்டே இருப்போர் அறுவடை செய்வதில்லை ... காலையில் விதையைத் தெளி; மாலையிலும் அப்படியே செய்'' என்று திருமறை நம்மைச் சவாலிட்டு அழைக்கிறது (பிர 11:4,6).

□ திமிர்வாதக்காரன் ஒருவனை ஓய்வு நாளன்று இயேசு குண மாக்கியதால் அவரைக் கொன்றுவிட யூதர் வகைதேடியபோது, அவர் களுக்கு அவர் கொடுத்த பதில்: ''என் தந்தை இன்றுவரை செய லாற்றுகிறார்; நானும் **செலாற்றுகிறேன்**'' (யோ 5:16,17). மக்களது ஆதரவு இருந்ததோ இல்லையோ, இயேசு தமது பணியில் எவ்வளவு விறுவிப்பைக் காட்டினார், பாருங்கள்! உபத்திரவங்களும் துன்புறுத் தல்களும் நமது வேகத்தைக் குறைக்கக்கூடாது. உத்தமமான திருப் பணி எதுவும் எதிர்ப்புக்குத் தப்பாது. பவுலின் சிறையடைப்பினால் அநேக விசுவாசிகள் இன்னும் கூடுதல் தெளிவோடும் தைரியத் தோடும் திருவசனத்தைப் பறைசாற்ற முற்பட்டனர் (பிலி 1:14). தமது தந்தையானவரது வேலையின் தொடர்ச்சியாகவே இயேசு தமது பணியைக் கணித்தார் (யோ 5:17). இயேசு தொடங்கிய பணியின் தொடர்ச்சியாகவே நாம் செயலாற்ற வேண்டும் (அப் 1:1,2).

□ பிறப்பிலிருந்தே பார்வையற்றிருந்த ஒருவரை இயேசு சந்தித் தார். ''இவர் பார்வையற்றவராய்ப் பிறக்கக் காரணம் இவர் செய்த பாவமா, இவர் பெற்றோர் செய்த பாவமா?'' எனச் சீடர்கள் இயேசு விடம் வினவினர் (யோ 9:1,2). இயேசு கொடுத்த பதிலில் அவருக்கு வேலையில் இருந்த ஆர்வம் தெரிகிறது: ''இவர் செய்த பாவமும் அல்ல; இவர் பெற்றோர் செய்த பாவமும் அல்ல; கடவுளின் **செயல்** இவர் வழியாக வெளிப்படும் பொருட்டே இப்படிப் பிறந்தார்'' (வச 3). இறையியல் கேள்விகளைவிடச் ''செயல்பாட்டிலேயே'' இயேசு வுக்குக் கவனம் அதிகம்! அவர் தொடர்ந்து சொன்னது: ''பகலாய்



இருக்கும்வரை என்னை அனுப்பியவரின் **வேலைகளை** நான் செய்யவேண்டும். இரவு வருகிறது; அப்போது யாரும் செயலாற்ற முடியாது'' (வச 4). இறைப்பணியில் கருமமே கண்ணாயினார் நியாயமான காரியங்களைக்கூட விவாதித்துக்கொண்டிருப்பதில் காலத்தைக் கழிக்க விரும்பமாட்டார்.

□ தமது நண்பர் லாசரு நோயுற்றிருப்பதைக் கேள்விப்பட்ட பின்னரும் இயேசு தாம் இருந்த இடத்திலேயே இன்னும் இரு நாட்கள் தங்கிவிட்டார். பின்பு தமது சீடரைப் பார்த்து, ''மீண்டும் யூதேயா வுக்குப் போவோம், வாருங்கள்'' என்றார். அதற்குச் சீடர்கள் அவரி டம், ''இப்போதுதானே யூதர்கள் உம்மேல் கல்லெறிய முயன்றார்கள்; மீண்டும் அங்கு போகிறீரோ?'' என்று கேட்டார்கள். அதற்கு இயேசு கொடுத்த பதில் எவ்வளவு சவாலானது, பாருங்கள்: ''பகலுக்குப் பன்னிரண்டு மணி நேரம் உண்டு அல்லவா? பகலில் நடப்பவர் இடறி விழுவதில்லை; ஏனெனில் பகலில் ஒளியைப் பார்க்க முடி கிறது'' (யோ 11:6-9). பயமுறுத்தல்கள் எவ்வளவு நிசமாக இருந் தாலும் வேலையில் அவருக்கிருந்த வேகத்தை எதுவும் குறைக்க முடியவில்லை. காலையில் உங்களைக் கல்லெறியத் திட்டங்கள் இருந்தால் பணிக்கு மதியம் செல்லுங்கள்! மதியத்தில் கல்லெறியப் படவிருந்தால் பணிக்கு மாலையில் செல்லுங்கள்! சுற்றி நடப்ப வற்றில் கவனம் செலுத்தாதபடி, நமது கண்கள் நமக்குப் பேராணை யிட்டவரையே மேல்நோக்குமானால், நமது பாதைக்குப் போதுமான வெளிச்சம் கிடைக்கும். சூழ்நிலை இருண்டு காணப்படலாம்; ஆனால் தேவன் தரும் வெளிச்சம் நாம் அரண்டுபோகாது நம்மை நடத்தும்.

□ பரிசேயர் சிலர் இயேசுவிடம் வந்து, ''இங்கிருந்து போய்விடும்; ஏனெனில் ஏரோது உம்மைக் கொல்ல வேண்டும் என்றிருக்கிறான்'' என்றனர் (லூக் 13:31). அதற்கு இயேசு தந்த பதிலைப் பாருங்கள்: ''இன்றும் நாளையும் பேய்களை ஓட்டுவேன்; பிணிகளைப் போக்கு வேன்; மூன்றாம் நாளில் என் **பணி** நிறைவுபெறும் என நீங்கள் போய் அந்த நரியிடம் கூறுங்கள்'' (வச 32). நமது வேட்கையையும் உத்

வேகத்தையும் பயமானது குளிர் நீர் ஊற்றித் தணித்துவிடுமே! பயம் நம்மை முடமாக்கும். இயேசுவோ விசுவாசத்தால் பயத்தை மேற் கொண்டார். தமது வாழ்க்கையில் இறைச்சித்தத்திற்கு மிஞ்சி எதுவும் நடந்துவிடாது என்று அவர் மனவுறுதி கொண்டிருந்தார் (வச 33). தமது பாதுகாப்பிற்காய்க் கவலைப்படுவதற்குப் பதிலாக எருசலேம் நகருக்காய்க் கண்ணீர் விட்டார் (வச 34,35).

■ தமது சீடர்மீது இயேசுவுக்கிருந்த நேசமும் பாசமும் குறையவே இல்லை, கூடிக்கொண்டேயிருந்தது. யோவான் 13:1இல் நாம் வாசிப்பது: ‘‘தாம் இவ்வுலகை விட்டுத் தந்தையிடம் செல்வதற்கான நேரம் வந்துவிட்டதை இயேசு அறிந்திருந்தார்; உலகில் வாழ்ந்த தமக்குரியோர்மீது அன்பு கொண்டிருந்த அவர் அவர்கள்மீது இறுதி வரையும் அன்பு செலுத்தினார்.’’ கடினமான சூழ்நிலைகள் வழியாய்க் கடந்துவந்தாலும் ஒருவர்மீது ஒருவர் அன்பு தணியாது நடந்து கொள்வோரைப் பார்ப்பது இன்று அரிது. இயேசுவோ தமது சீடரிடம் சொன்னதைக் கவனியுங்கள்: ‘‘நான் சோதிக்கப்படும்போது என் னோடு இருந்தவர்கள் நீங்களே. என் தந்தை எனக்கு ஆட்சியுரிமை கொடுத்திருப்பதுபோல நானும் உங்களுக்குக் கொடுக்கிறேன். எனவே எனது ஆட்சி வரும்போது நீங்கள் என்னோடு பந்தியில் அமர்ந்து உண்டு குடிப்பீர்கள்; இஸ்ரயேலின் பன்னிரு குலத்தவருக் கும் தீர்ப்பு வழங்க அரியணையில் அமர்வீர்கள்’’ (லூக் 22:28-30). என் பாடு! என் பந்தி! அடுத்து, சீமோன் பேதுருவின் விசுவாசம் சோதிக்கப்படும்போது அது ஒழிந்துவிடாதிருக்க அவருக்காய் ஜெபித்தார் (வச 31,32). இயேசுவின் சீடர் எத்தனையோ முறை அவருக்கு ஏமாற்றமளித்திருந்தும், அவர்கள்மீதுள்ள தமது அன்பை அவர் தளர்த்தவே இல்லை.

இவ்விதமே, நாமும் அவரிடம் அன்பு செலுத்தவேண்டுமென இயேசு பெரிதும் வாஞ்சிக்கிறார். 153 பெரிய மீன்கள் தமது சீடருக்கு அகப்படும் அற்புதம் செய்தார் (யோ 21:11). எப்படி வந்தது என்று விளக்க முடியாத வகையில் அவர்களுக்குக் காலைச் சிற்றுண்டியும்



ஆயத்தமாய் வைத்திருந்தார் (வச 9,12). இச்சூழலில் அவர் மும்முறை கேட்ட கேள்வி: ‘‘இவை எல்லாவற்றையும்விட நீ என்மீது அன்பு செலுத்துகிறாயா?’’ (வச 15-17). வாழ்வின் ஆசீர்வாதங்கள் எதுவும் அவர்மீது இருக்கவேண்டிய அன்பின் பெருக்கத்திற்குத் தடையாக அமைந்துவிடுவதை அவர் சகிக்கமாட்டார்.

இவ்வத்தியாயத்தை எபேசியர் 5:1,2இலுள்ள வசனங்களோடு நிறைவு செய்வது பொருத்தமாயிருக்கும்: ‘‘நீங்கள் கடவுளின் அன் பார்ந்த பிள்ளைகளாய் அவரைப்போல் ஆகுங்கள். கிறிஸ்து உங்க ளுக்காகத் தம்மை நறுமணம் வீசும் பலியும் காணிக்கையுமாகக் கடவுளிடம் ஒப்படைத்து உங்களிடம் அன்புகூர்ந்ததுபோல, நீங்க ளும் அன்புகொண்டு வாழுங்கள்!’’

■

*இயேசு ராஜா, உம் இதயத் துடிப்பை*
*அறிந்துகொள்ளும் பாக்கியம் தாரும்;*
*உம் ஏக்கம் எல்லாம் நிறைவேற்ற*
*கிருபையைத் தாரும்.*

*ஒரு வாழ்வு, அது உமக்காக;*
*உணர்வெல்லாம் உமக்காக;*
*உள்ளமெல்லாம் உமக்காக.*

*உம் இதயம் மகிழ்ந்திட வாழ்ந்திட வேண்டும்;*
*உம் சித்தம் செய்து நான் மடிந்திட வேண்டும்.*

*உலகத்திற்கு மரித்து நான் வாழ்ந்திட வேண்டும்;*
*உண்மையான ஊழியனாய் உழைத்திட வேண்டும்.*

— தந்தை S. J. *பெர்க்மான்ஸ்*






# 4
# இரக்கத்தின் அடிச்சுவடுகள்
## Footsteps of Pity

திருமறை முழுவதும் கிறிஸ்துவை மையமாய்க் (Christocentric) கொண்டது. கிறிஸ்துவின் வாழ்க்கை நாம் பின்பற்றக்கூடிய நடைமுறையில் உள்ளது. அவர் நாம் வெறுமனே ரசிக்கவேண்டிய சிற்பம் அல்ல! நமது தொழில் எதுவாயினும் அவரிடமிருந்து ஊக்கம் பெறலாம் —

**இயேசுவானவர் ....**

*அச்சடிப்பவனுக்கு:* வார்த்தை (யோ 1:1; வெளி 19:13)

*அமைப்பாளனுக்கு:* எல்லாம் நன்றாய்ச் செய்பவர் (மாற் 7:37)

*அரசனுக்கு:* இராஜாதி இராஜா (வெளி 17:4)

*ஆசிரியருக்கு:* முன்மாதிரி (1 பேது 2:21)

*இசைக் கலைஞனுக்கு:* இரட்சண்யக் கொம்பு (லூக் 1:69)

*ஐக்கிய நாடுகளுக்கு:* சமாதானம் (எபே 2:14)

*கட்டிடவியலருக்கு:* பிரதான மூலைக்கல் (1 பேது 2:6)

*கல்விமானுக்கு:* அல்பா & ஓமேகா (வெளி 1:8)

*சரித்திராசிரியனுக்கு:* நீண்ட ஆயுசுள்ளவர் (தானி 7:9)

*சேவகனுக்கு:* கேடகம் (சங் 3:3)

*தச்சனுக்கு:* வாசல் கதவு (யோ 10:7)

*தட்டானுக்கு:* விலையேறப்பெற்ற கல் (1 பேது 2:6)

*தத்துவ ஞானிக்கு:* தேவ ஞானம் (1 கொரி 1:24,30)

*தாவரவியலருக்கு:* இளங்கிளை (ஏசா 53:2)

*தொழிலதிபருக்கு:* உத்தம ஊழியன் (மத் 20:28)
*பத்திரிகையாளருக்கு:* மகிழ்வுண்டாக்கும் நற்செய்தி (லூக் 2:10,11)
*புவியியலருக்கு:* பரிசோதிக்கப்பட்ட கல் (ஏசா 28:16)
*பிரசுரிப்பாளருக்கு:* ஆக்கியோன் (துவக்குபவர்) (எபி 12:2)
*ரொட்டி தயாரிப்பாளருக்கு:* ஜீவ அப்பம் (யோ 12:24; 6:35,48)
*வக்கீலுக்கு:* பரிந்துபேசும் நடுவர் (1 யோ 2:1)
*வங்கி அலுவலர்க்கு:* மகிமையின் ஐசுவரியம் (பிலி 4:19)
*விண் ஆய்வாளருக்கு:* விடிவெள்ளி நட்சத்திரம் (வெளி 22:16)
*விவசாயிக்கு:* அறுப்பின் ஆண்டவர் (லூக் 10:2)
*விலங்கியலருக்கு:* சிங்கம் & ஆட்டுக்குட்டி (வெளி 5:5; யோ 1:36)
*வியாபாரிக்கு:* விலையுயர்ந்த முத்து (மத் 13:46)
*மருத்துவருக்கு:* மாபெரும் வைத்தியர் (மத் 8:17)
*மருந்தாளுநருக்கு:* கீலேயாத்தின் பிசின் தைலம் (எரே 8:22)
*மாணவனுக்கு:* சத்தியம் (யோ 14:6)
*மார்க்கவாதிக்கு:* வழி (யோ 14:6)
*மின்னியல் வல்லுநருக்கு:* உலகிற்கு ஒளி (யோ 8:12)
*மீனவனுக்கு:* அலைகளை அமர்த்துபவர் (மத் 8:23-27)
*மேய்ப்பனுக்கு:* தேவாட்டுக்குட்டி (யோ 1:29)

மலைப்பிரசங்கத்தின் பாக்கிய வசனங்களின் அடிப்படையில் இயேசுவின் அடிச்சுவடுகளைத் தொடருவோம் (மத் 5:3-10). முதலாம் மற்றும் மூன்றாம் பாக்கிய வசனங்களின் அடிப்படையில் *''எளிமையின் அடிச்சுவடுகளைக்''* (Poorness) கவனித்தோம். இரண்டாம் மற்றும் நான்காம் பாக்கிய வசனங்களின் அடிப்படையில் *''வேட்கையின் அடிச்சுவடுகளைப்''* (Passion) பார்த்தோம். மூன்றாம் தலைப்பு ஐந்தாம் பாக்கிய வசனத்தை அடிப்படையாகக் கொண்டது: *''இரக்கத்தின் அடிச்சுவடுகள்''* (Pity) — ''இரக்கமுள்ளோர் பாக்கிய வான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்'' (வச 7).



''இரக்கம்'' என்பதற்கு எதிர்மறைச் சொற்கள் இரக்கத்தின் அழகை மிளிரச்செய்யும்: கல் நெஞ்சம், மனிதாபிமானமின்மை, கொடுமை, அன்பின்மை, இரக்கமின்மை, தன்னலம், பதிலுக்குப் பதில், பிறரைக் கவலைக்குள்ளாக்குவதில் களிப்பு, பரிவின்மை, முதலியன. கிறிஸ் துவைச் சுவிசேஷங்கள் ''இரக்கத்தின்'' அல்லது ''கனிவின்'' சொரூபி யாய்ச் சித்தரிக்கின்றன. மத்தேயுவில் தொடங்கி இதனைக் கவனிப் போம் —

■ மலைப்பிரசங்கத்தை முடித்தவுடன், தொழுநோயாளி ஒரு வரை இயேசு **தொடுகிறார்:** ''அவர் மலையிலிருந்து இறங்கியபோது பெருந்திரளான மக்கள் அவரைப் பின்தொடர்ந்தார்கள். அப்பொழுது தொழுநோயாளர் ஒருவர் வந்து அவரைப் பணிந்து, 'ஐயா, நீர் விரும் பினால் என் நோயை நீக்க உம்மால் முடியும்' என்றார். இயேசு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு, 'நான் விரும்புகிறேன்; உமது நோய் நீங்குக!' என்றார். உடனே அவரது தொழுநோய் நீங்கியது'' (மத் 8:1-3). இதே சம்பவம் மாற்கு சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட இடத்தில், இயேசு **''மனதுருகி''** அவரைத் தொட்டார் என்று வாசிக் கிறோம் (மாற் 1:41). தொழுநோயாளியைத் தொடுவதை மோசேயின் நியாயப்பிரமாணம் அனுமதிப்பதில்லை. பொதுவான குடியிருப்பு களுக்குத் தள்ளித் தூரத்தில்தான் அவர்கள் வசிக்கவேண்டும். எதிர்ப் படுவோர் எவரும் அவர்களுக்கு அருகில் வந்துவிடாதபடி, ''தீட்டு, தீட்டு'' என்று அவர்கள் குரலெழுப்பவேண்டும் (லேவி 13:45,46). இந்தத் தொழுநோயாளியை இயேசு தொட்டிருக்க அவசியமில்லை. ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் அற்புதம் நிகழ்ந்திருக்கும். தமது மனதுருக்கத்தை வெளிப்படுத்திக்காட்டவே இயேசு அவரைத் தொட்டார். நியாயப்பிரமாணத்தில் சன்மார்க்கத்திற்கு (moral) அடுத்த கட்டளைகளையும் சடங்காச்சாரத்திற்கு (ceremonial) அடுத்த பிர மாணங்களையும் இயேசு வெவ்வேறாகப் பிரித்தார். ''தொழுநோயா ளியைத் தொடக்கூடாது'' — இது சடங்காச்சாரப் பகுதி. ''உன்னை ஆச்சாரியனுக்குப் போய்க் காண்பித்துக் காணிக்கை செலுத்து'' — இது ஆன்மீகப் பகுதி. சடங்காச்சாரக் கட்டுப்பாடும் ஆன்மீக முக் கியத்துவமும் இங்கு அழகாய் வேறுபிரிக்கப்பட்டுள்ளன.

■ மத்தேயு சுவிசேஷத்தின் அடுத்த அத்தியாயத்திலேயே இரத்தப்போக்கு உள்ள ஒரு பெண்ணை இயேசு சுகப்படுத்தினார். அவள் அவரைத் ''தொட்டபோது'' இவ்வற்புதம் நிகழ்ந்தது (மத் 9:20-22). லூக்கா இதனை இன்னும் அழகாய் விவரிக்கிறார் (லூக் 8:43-48). அவரது மேலாடையின் ஓரத்தை அவள் தொட்டபோது சுகமடைந்தாள் (வச 44). ''என்னைத் தொட்டது யார்?'' என்றார் இயேசு. அவ்வளவு கூட்டம் அவரை நெருக்கிக்கொண்டிருந்த வேளையில் இயேசுவின் இக்கேள்வி அவர்களுக்கு அர்த்தமுள்ளதாய்த் தெரியவில்லை. அவரிடமிருந்து வல்லமையை வெளிக் கொண்டுவந்த விசுவாசத் தொடுதலையே அவர் குறிப்பிட்டார்! அப்பெண்மணிக்குத் தேவையான ஆரோக்கியம் கிடைத்துவிட்ட தென்று இயேசு அறிந்தும், அதனை வெளிப்படையாக்கும்படியே ''என்னைத் தொட்டது யார்?'' என்றார். இதோ, அதற்குக் காரணம்: மாதவிடாய்க் காலம் தவிர்த்து மற்ற நேரங்களில் இரத்தப்போக்குள்ள பெண் தீட்டானவள் என்பது மோசேயின் பிரமாணம். அவள் தீண்டத் தகாதவள் ஆகிவிடுகிறாள் (லேவி 15:25-27).

தீண்டத்தகாதவர்களைக் குணமாக்கிய மேற்கண்ட இரு சம்பவங்களுக்கும் இடையில் (மத் 8 & 9), மத்தேயு 9:13இல் இயேசு உச்சப் படிப்பினையைத் தருகிறார்: ''பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதன் கருத்தை நீங்கள் போய்க் கற்றுக்கொள் ளுங்கள்.'' ''பலி'' என்பது இங்கு மார்க்கச் சடங்கைக் குறிக்கும். இந்தப் பழைய ஏற்பாட்டு வசனத்தை இயேசு இச்சந்தர்ப்பத்தில் பயன்படுத்தினார். ஓசியா 6:6, ''உண்மையாகவே நான் விரும்புவது பலியை அல்ல; இரக்கத்தையே விரும்புகின்றேன்; எரிபலிகளை விடக் கடவுளை அறியும் அறிவையே நான் விரும்புகிறேன்.'' மத்தேயு 12:7இலும் இதே வசனத்தை இயேசு மேற்கோள் காட்டு கிறார். இயேசுவும் சீடரும் ஓய்வு நாளொன்றில் விளைநிலங்கள் வழியாய் நடந்துசென்றனர். அப்பொழுது சீடர்கள் மெல்லுவதற்காய்க் கதிர்களைக் கொய்தார்கள். ஓய்வு நாளில் ''செய்யத்தகாததை'' அவர்கள் செய்துவிட்டதாகப் பரிசேயர் அவர்கள்மீது குற்றம் சாட்டி



னர். இயேசு தமது சீடர் செய்ததை ஆதரித்துக் கூறியது: ''பலியை அல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதன் கருத்தை நீங்கள் அறிந்திருந்தால் குற்றமற்ற இவர்களைக் கண்டனம் செய்திருக்கமாட் டீர்கள்'' (வச 7). இதற்கு முந்திய இடத்தில் (மத் 9:13) இவ்வச னத்தை அவர் மேற்கோள் காட்டியது, பாவிகளோடு அவர் சாப்பிடு வதற்கெதிராய்ப் பேசப்பட்ட வேளையாகும். தேவ பக்தியற்றோரிட மிருந்து பிரிந்து வாழ்வதற்குப் (separation) பதிலாக அவர்களிட மிருந்து ஒதுங்கி வாழ்வதை (seclusion) அவர் கண்டித்தார். இப் போது பிரமாணக் கொள்கைக்கு (legalism) எதிராய் அவ்வசனத்தை மேற்கோள் காட்டுகிறார் (12:7).

காணிக்கை செலுத்துவதற்கும் பலி கொடுப்பதற்கும் மேலானது அன்பும் கனிவிரக்கமும் என்பது திருமறை எங்கும் வலியுறுத்தப் பட்டுள்ளது. ஏசாயா 1:11,17, ''எண்ணற்ற உங்கள் பலிகள் எனக்கு எதற்கு? ... நன்மை செய்யக் கற்றுக்கொள்ளுங்கள் ... ஒடுக்கப் பட்டோருக்கு உதவிசெய்யுங்கள்.'' ஆமோஸ் 5:21-24, ''எரிபலி களையும் தானியப் படையல்களையும் எனக்கு நீங்கள் செலுத்தி னாலும் நான் ஏற்கமாட்டேன் ... மாறாக, நீதி வெள்ளமெனப் பொங்கி வருக! நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்துவருக!'' மீகா 6:7,8, ''ஆயிரக்கணக்கான ஆட்டுக்கிடாய்கள் மேலும் பல்லாயிரக்கணக் கான ஆறுகளாய்ப் பெருக்கெடுத்தோடும் எண்ணெய் மேலும் ஆண்டவர் விருப்பம் கொள்வாரோ? ... ஓ மானிடா, இரக்கம் கொள் வதில் நாட்டத்தையும் உன் கடவுளுக்கு முன்பாகத் தாழ்மையோடு நடந்துகொள்வதையும் தவிர வேறு எதை ஆண்டவர் உன்னிடம் கேட்கின்றார்?'' நீதிமொழிகள் 21:3, ''பலி செலுத்துவதைவிட நேர்மையாகவும் நியாயமாகவும் நடப்பதே ஆண்டவருக்கு உவப் பளிக்கும்.''

■ சுவிசேஷங்களில் இயேசுவின் ஏறத்தாழ 40 அற்புதங்கள் எழுதப்பட்டுள்ளன. நான்கு சுவிசேஷங்களிலும் விவரிக்கப்பட்ட ஒரே அற்புதம் ஐந்தப்பம் இருமீன் கொண்டு ஐயாயிரம் பேருக்குமேல்

உணவளித்ததாகும். மக்கள்மீதுள்ள இயேசுவின் கனிவு மற்றும் கரிசனையினாலேயே இவ்வற்புதம் நிகழ்த்தப்பட்டதே அதற்குக் காரணம் (மத் 14:13-21). சீடரோ தந்திரமாய் நடந்துகொண்டனர். அவர்கள் இயேசுவைப் பார்த்து, ''இவ்விடம் பாலைநிலம் ஆயிற்றே, நேரமும் ஆகிவிட்டது. ஊர்களுக்குச் சென்று தேவையான உணவு வாங்கிக்கொள்ள மக்கள் கூட்டத்தை அனுப்பிவிடும்'' என்றனர் (வச 15). இன்னொரு இடத்தில், ''இவ்வளவு திரளான மக்களுக்கு அளிக்கப் போதுமான உணவு நமக்குப் பாலைநிலத்தில் எங்கிருந்து கிடைக்கும்'' என்று கேட்டனர் (15:33). ஆனால் அவர்களைப் பட்டினியாய் அனுப்பிவிடுவதால் அவர்கள் வழியில் தளர்ச்சி அடைந்துவிட இயேசுவுக்கு மனதில்லை (வச 32). திரள்கூட்டத்திற்குத் தாராளமாய் உணவளித்தபின், மீதமுள்ளவை வீணாகாதபடி அவற்றைக் கூடைகளில் சேகரிக்கச் சீடரைக் கேட்டுக்கொண்டார் ஆண்டவர். பிரியமானவரே, ஆகாரத்தை ஒருபோதும் வீணாக்காதீர். மிச்சமானவைகளைக் கொண்டாவது லாசருவை நினைத்துக்கொள்ளுங்கள்! இல்லாதோர்மீது இரக்கமாயிருங்கள்!

■ மக்கள்மீதுள்ள ''கனிவிரக்கத்தினாலேயே'' அகிலவுலக நற்செய்திப்பணிக்கான தரிசனம் இயேசுவிடம் உருவாகியது. நற்செய்தியறிவிக்கவும், நோயுற்றோரைச் சுகமாக்கவும் தனிப்பட்டு அவரால் முடிந்தவரை கிராமங்களையும் நகர்களையும் சுற்றிவந்தார் (மத் 9:35). அடுத்த வசனத்தை நாம் கூர்ந்து கவனிக்கவேண்டும்: ''திரளான மக்களைக் கண்டபோதோ, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்ததால், அவர்கள்மீது **மனதுருகினார்**'' (வச 36). தனி மனிதனாய் எல்லா இடங்களுக்கும் நற்செய்தியைத் தம்மால் எடுத்துச் செல்ல முடியாது என்று உணர்ந்தபோது, தமது சீடருக்கு விட்ட சவால்: ''அறுவடை மிகுதி; வேலையாட்களோ குறைவு. ஆகையால் தேவையான வேலையாட்களைத் தமது அறுவடைக்கு அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள்'' (வச 37,38).



மிஷனரிகளுக்காய் ஜெபித்தலிலும், மிஷனரிப்பணிக்குக் கொடுத்தலிலும், மிஷனரிப்பணிக்காய்ச் செல்லுதலிலும் நாம் ஏன் தளர்ந்துவிடுகிறோம், குளிர்ந்துவிடுகிறோம், என்பதற்கான இரகசியம் இங்கு தானிருக்கிறது. மக்கள்மீதுள்ள ''மனதுருக்கம்'' குறைந்து, நற்செய்தியறிவிப்பை வெறுமனே ஒரு செயல்திட்டமாய் மேற்கொள்ளுகிறோம். தொலைந்துபோன ஆடுகளுக்கான கரிசனையுணர்வு குறைந்துவிடுகிறது. இறையன்பு திரும்பவும் நமது இருதயங்களில் ஊற்றப்பட இறைஞ்சுவோம். அப்போஸ்தலரது சுவிசேஷப்பணிக்கு உந்துவிசையாயிருந்தது இதுவன்றோ? இதோ, பவுல் எழுதியது: ''கிறிஸ்துவின் பேரன்பே எங்களை ஆட்கொள்ளுகிறது ... எனவே நாங்கள் கிறிஸ்துவின் தூதுவர்களாய் இருக்கிறோம் ... ஆகவே கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் உங்களிடம் மன்றாடுகிறோம்'' (2 கொரி 5:14,20). பரிவுணர்வு எனும் இப்பரிமாணம் இல்லாதபோது, நாம் நற்செய்திப்பணியில் எவ்வளவு விறுவிறுப்பாயிருந்தாலும் எதிர்பார்க்கும் விளைச்சல் இராது.

■ நம்மீது தேவன் காட்டிய இரக்கத்தின் அடிப்படையிலேயே பிறர்மீது நாமும் கனிவுள்ளம் கொள்ளவேண்டும். அரசனொருவன் தனது வேலைக்காரரிடம் கணக்கு முடிக்க விரும்பினார். ஒருவர் இருபது ஆண்டுகள் கூலிக்குச் சமமான 10,000 தாலந்துகள் அரசனிடம் கடன்பட்டிருந்தார். சற்றுக் கூடுதல் கால அவகாசம் கேட்டு அவர் அரசனிடம் மன்றாடியபோது அரசன் ''கனிவிரக்கம்'' கொண்டு கடன் முழுவதையுமே மன்னித்துவிட்டார் (மத் 18:23-27). இந்த வேலைக்காரனிடம் இருபது வாரச் சம்பள அளவான 100 வெள்ளிப்பணம் மட்டுமே கடன்பட்டிருந்த உடன் வேலைக்காரன் இருந்தான். அவனும் முந்தினவன் வேண்டியது போலத் தன்னிடம் பொறுமையாயிருக்கக் கேட்டான்; அவனோ மறுத்து அவனைச் சிறையிலடைத்தான் (வச 28-30). அரசனுடைய காதுகளை இச்செய்தி எட்டியபோது, முந்தின வேலைக்காரனை அழைத்து அவனிடம் கூறியது: ''பொல்லாதவனே, நீ என்னை வேண்டிக்கொண்டதால் அந்தக் கடன்

முழுவதையும் உனக்குத் தள்ளுபடி செய்தேனே. நான் உனக்கு **இரக்கம்** காட்டியது போல நீயும் உன் உடன் பணியாளனுக்கு **இரக்கம்** காட்டியிருக்க வேண்டும் அல்லவா?'' (வச 31-33). தேவன் நம்மைத் தமது தயாளத்தின்படித் தாராளமாய் மன்னித்திருக்க, நாமும் பிறரை அவ்விதமே மன்னிக்கவேண்டும் அல்லவா? எத்தனையோ பேர் நமக்குத் தீங்கிழைக்கின்றனர் என்பது உண்மைதான். ஆனால் நாம் ஜெபிக்க வேண்டியது: ''தேவா, நீர் என்னை மன்னித்ததுபோல நானும் அவர்களை மன்னிக்க எனக்கு உதவும்!'' இல்லையேல், ''நாங்கள் பிறரை மன்னிப்பதுபோல் எங்களை மன்னியும்'' என்ற கர்த்தருடைய ஜெப வரிகள் அர்த்தமற்றுப்போகுமே!

■ எளியவர்மீது நமக்கிருக்கும் கரிசனையானது பூரணத்தின் ஓர் அடையாளம் என்று ஒரு சம்பவத்தில் இயேசு நமக்குப் போதித்துள் ளார். இளைஞர் ஒருவர் இயேசுவிடம் வந்து, ''போதகரே, நிலை வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்கு நான் என்ன நன்மை செய்ய வேண்டும்?'' என்று வினவினார் (மத் 19:16). இறைக்கட்டளை களுக்குக் கீழ்ப்படியும்படி இயேசு அவருக்குப் பதிலுரைத்தபோது, அந்த இளைஞர் இயேசுவிடம், ''இவை அனைத்தையும் நான் சிறுவயது முதலே கடைப்பிடித்துள்ளேன்; இன்னும் என்னிடம் குறைவுபடுவது என்ன?'' என்று கேட்டார் (வச 20). அதற்கு இயேசு தந்த பதில் அனைத்துலகிற்கும் அனைத்துக்காலத்திற்கும் உரிய தாகும்: ''நிறைவுள்ளவராக விரும்பினால், நீர் போய் உமது உடைமை களை விற்று ஏழைகளுக்குக் கொடும்; அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர்; பின்பு வந்து என்னைப் பின்பற்றும்'' (வச 21). இப்பதிலை அந்த இளைஞர் சற்றும் எதிர்பார்க்கவில்லை; எனவே வருத்தத்தோடு திரும்பிவிட்டார் (வச 22). நமது பிரச்னை யும் இதுதானே? மார்க்கச் சட்டதிட்டங்களைக் கடைப்பிடிப்பதில் நமக்கு அதிகச் சிரமம் இல்லை; எளியவர்க்குத் தயாளமாயிருக்கவோ நம்மால் முடிவதில்லை. சமுதாயத்தில் நீதி நியாயம் மறுக்கப்பட் டோருக்கு இரக்கம் காட்டுவதைவிடத் திருப்பணிக்குத் தசமபாகம்



கொடுத்துவிடுவது நமக்கு எளிதாயிருக்கிறது (மத் 23:23). தசம பாகம் கொடுப்பதைவிட எளியவர்மீது இரக்கம் காட்டுவது ''முக் கியம்'' என்பது நமக்குப் புரிவதில்லை.

நற்செய்தியறிவிப்புப் பணியில் நமது ஆர்வமானது தானதர்மம் செய்தலை ஓரங்கட்டிவிடக்கூடாது (கலா 2:9,10). எபேசு சபைத் தலைவர்களிடம் அப்போஸ்தலன் பவுல் சாட்சியாய்க் கூறியது: ''பாடுபட்டு உழைத்து நலிவுற்றோர்க்குத் துணை நிற்கவேண்டு மென்று அனைத்திலும் உங்களுக்கு வழிகாட்டினேன். அத்துடன், பெற்றுக்கொள்வதைவிடக் கொடுத்துவிடுதலே பேறுடைமை என்று ஆண்டவர் இயேசு கூறியதை நினைவுகூருங்கள் என்றும் கூறி னேன்'' (அப் 20:35). கிறிஸ்தவ நண்பர்களுக்கு நான் தர விரும்பும் நடைமுறை ஆலோசனை இதோ: ''உங்கள் வருமானத்தில் பத்தி லொன்றைத் திருப்பணிக்குக் கொடுத்தால், இன்னொரு பத்தி லொன்றைத் தானதர்மத்திற்கென்று பிரித்துவையுங்கள்.'' இப்படிச் செய்வதால் நாம் யாரும் பட்டினியாகிவிடமாட்டோம். இயேசு கூறிய ஏறத்தாழ நாற்பது உவமைகளில் ஒரே நபர் மட்டும் பெயர் குறிப் பிடப்பட்டுள்ளார்: அது ஏழை லாசரு! இது தற்செயலானதா?

■ எளியவர் பொதுவாகச் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டோரும் தள்ளப்பட்டோரும்தான். எனவே அவர்களுக்கென்று ஒரு தனியிடம் இயேசுவின் இதயத்தில் இருந்தது. தேவாலயப் பெட்டியில் மக்கள் எப்படிக் காணிக்கைப் போடுகிறார்களென்று ஒரு நாள் இயேசு கவ னித்துக்கொண்டிருந்தார். தனவந்தர் ஏராளம் போட்டனர். தரித் திரத்திலிருந்த ஒரு விதவை இரு காசுகள் மட்டுமே போட்டாள் (மாற் 12:41,42). இதைக் குறித்து இயேசு சொன்னது நமது கவனத்திற் குரியது: ''காணிக்கைப் பெட்டியில் காசு போட்ட மற்ற எல்லாரை யும்விட இந்த ஏழை விதவை மிகுதியாகப் போட்டிருக்கிறார் என உறுதியாக உங்களுக்குச் சொல்லுகிறேன். ஏனெனில் அவர்கள் அனைவரும் தங்களுக்கு இருந்த மிகுதியான செல்வத்திலிருந்து போட்டனர்; இவரோ தமக்குப் பற்றாக்குறை இருந்தும் தம்மிடம்

இருந்த அனைத்தையுமே, ஏன் தனது பிழைப்புக்காக வைத்திருந்த எல்லாவற்றையுமே, போட்டுவிட்டார்'' (வச 43,44). நாம் எவ்வளவு கொடுக்கிறோம் என்பது மனிதரின் பதிவேட்டில் குறிக்கப்படுகிறது; எவ்வளவு வைத்துக்கொள்கிறோம் என்பதைக் கடவுள் கவனிக்கிறார்! இயேசுவின் மனதில் எளியவர் எவ்வளவு இடம் பிடித்திருந்தனர் என்பது மேற்கூறிய அவர் கூற்றிலிருந்து தெளிவு. இவ்வுலகில் எளியவர் செய்வது பொதுவாகக் கவனிக்கப்படுவதில்லை. 1000 ரூபாய் அல்லது 10,000 ரூபாய் கொடுப்போரே பாராட்டைத் தட்டிச் செல்கின்றனர். நாம் எவ்வளவு கொடுக்கிறோம் அல்லது வைத்துக்கொள்கிறோம் என்பதை இயேசு ''கவனிக்கிறார்'' என்பதை நினைவிற்கொள்வோம் (வச 41). எளியவர்மீது இயேசுவுக்கிருந்த பாசவுணர்வு நமது சபைகளிலும் சங்கங்களிலும் திரும்பப் பெறப்படவேண்டும்.

■ இயேசுவின் போதனைகள் அத்தனையுமே புரட்சிகரமாயிருந்தன. தம்மை விருந்துக்கழைத்த ஒருவரிடம் அவர் சொன்னதைப் பாருங்கள்: ''நீர் விருந்தளிக்கும்போது உம் நண்பரையோ, சகோதர சகோதரிகளையோ, உறவினரையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்கவேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்குக் கைம்மாறு ஆகிவிடும். மாறாக, நீர் விருந்தளிக்கும்போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழையும். அப்பொழுது நீர் பேறுபெற்றவர் ஆவீர். ஏனென்றால் உமக்குக் கைம்மாறு செய்ய அவர்களிடம் ஒன்றுமில்லை. நேர்மையாளர்கள் உயிர்த்தெழும்போது உமக்குக் கைம்மாறு கிடைக்கும்'' (லூக் 14:12-14). விருந்துக்கு அழைத்தவரிடம் எவரும் இவ்விதம் சொல்ல முடியுமா? இப்படிப்பட்ட இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றத்தான் நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்! நாம் குடியிருக்கும் இடத்திலேயே கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் ''எளியோருக்கு விருந்து'' (Dinner for the Poor) என்று கொடுத்தாலென்ன? ஆண்டுக்கொரு முறையாவது அப்படிச் செய்யலாமே! உயிர்த்தெழுதலில் பலன் பெறுவது எவ்வளவு மகிமையாயிருக்கும்!



''உலகத் தோற்றம் முதல் ஆயத்தப்படுத்தப்பட்ட விண்ணரசைச் சுதந்தரிக்கும்படி'' விண்ணரசனின் வலப்பக்கம் அனுப்பப்படும் செம்மறியாடுகளோடு சேர்க்கப்பட இது ஒன்றுதானே வழி! (மத் 25:31-40). தரித்திரர்க்குக் கொடுப்பதைவிட நமது செல்லப் பிராணிகளுக்கு அதிகம் செலவழிக்கிறோமோ? எளியோருக்கு விருந்தளிப்பதைப்பற்றிப் போதிக்குமுன் கழுதைகளையும் எருதுகளையும் ஆண்டவர் குறிப்பிட்டாரே! (லூக் 14:1-5). நீர்க்கோவை நோயுள்ள ஒரு மனிதனை ஓய்வு நாளன்று குணமாக்குவதைவிடக் குழியில் விழுந்துவிட்ட தங்களது மிருகம் ஒன்றை ஓய்வு நாளில் தூக்கிவிடுவதே அன்றையப் பரிசேயருக்கு முக்கியமாய்த் தெரிந்தது! நமது இன்றைய மார்க்கமும் இப்படித்தானே? வெளிநாட்டு மிஷனரிப்பணிகளுக்குக் கொடுப்பதைவிட நாய்த் தீனிக்கு அமெரிக்கா அதிகம் செலவழிக்கிறதாம்! தனது வாசலில் கிடந்த லாசருவைவிடத் தனது நாய்களை அச்செல்வந்தன் அதிகம் நேசித்தான்!

நல்ல சமாரியன் கதையில் இரக்கமும் தானதர்மவுணர்வும் தலையோங்கி நிற்கின்றன. ''எனக்கு அயலான் யார்?'' என்று இளம் வழக்கறிஞர் ஒருவர் இயேசுவிடம் வினவினார் (லூக் 10:29). இதற்குப் பதில் தரவே நல்ல சமாரியன் கதையை இயேசு சொன்னார். ''எனக்கு அயலான் யார்?'' என்ற வழக்கறிஞனின் கேள்விக்கு ஆண்டவர் ''அயலானுக்கு நல்லவனாயிருப்பது எப்படி'' என்று விளக்கினார். அந்த நல்ல சமாரியனின் அதிவுன்னத குணம் அவரது ''பரிவுள்ளமே!'' (compassion) (வச 33). நல்ல சமாரியன் செய்தது போலவே நாமும் தேவையுள்ளோரிடம் சென்று உதவவேண்டும் என்பதே இங்கு நமக்குச் செய்தி. அந்த நல்ல சமாரியன் காட்டிய ''இரக்கத்தை'' இயேசு மெச்சிப்பேசி, ''நீரும் போய் அந்தப்படியே செய்யும்'' என்றார் (வச 37). நாமோ இயேசுதான் நல்ல சமாரியன் என்று சொல்லிவிட்டுச் செயலில் எதுவும் காட்டுவதில்லை. நல்ல சமாரியன் சபைகள், நல்ல சமாரியன் ஐக்கியங்கள் என்றெல்லாம் பெயர்கள் வைக்கிறோம். அப்பெயருக்கேற்பச் செயல்படுகிறோமா? இக்கதையில் மூன்று வகையினரைச் சந்திக்கிறோம். முதலாவது, அந்தத் திருடன்.

அவனது தத்துவம்: ''என்னுடையதெல்லாம் எனக்கு; உன்னுடைய தும் எனக்கு!'' அடுத்து வருவது, மார்க்கவாதி. அவனது தத்துவம்: ''என்னுடையதெல்லாம் எனக்கு; உன்னுடைய தெல்லாம் உனக்கு!'' அந்தச் சமாரியன் மூன்றாம் பிரிவைச் சேர்ந்தவன். அவனது தத்துவம்: ''உன்னுடையதெல்லாம் உனக்கு; என்னுடையதும் உனக்குத்தான்!'' நாம் எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள்? எளியவருக்கும் தேவையிலிருப் போருக்கும் இருக்கும் புண்களைக் குணமாக்கி அவர்களுக்குப் புன் முறுவலைக் கொண்டுவரும் நல்ல சமாரியர்கள் இன்று எவ்வள வாய்த் தேவை!

■ இயேசு செய்த சுகமளிப்பு அற்புதங்களில் பெரும்பாலானவை அவரது ''இரக்கம்'' மற்றும் ''பரிவு'' ஆகியவற்றின் அடிப்படையில் தான். அதைக் குறித்த சில திருவசனங்களைப் பார்ப்போம் —

மத் 14:14, ''இயேசு பெருந்திரளான மக்களைக் கண்டு அவர்கள்மீது **பரிவு** கொண்டார்; அவர்களிடையே உடல்நலமற்றி ருந்தோரைக் குணமாக்கினார்.''

மத் 20:30, ''வழியோரத்தில் உட்கார்ந்திருந்த பார்வையற்றோர் இருவர் இயேசு அவ்வழியே கடந்து செல்கிறார் என்று கேள்விப்பட்டு, 'ஆண்டவரே, தாவீதின் குமாரனே, எங்களுக்கு **இரங்கும்**' என்று கத்தினர்.''

மாற் 1:41, ''இயேசு அந்தத் தொழுநோயாளிமீது **பரிவு** கொண்டு தமது கையை நீட்டி அவரைத் தொட்டு அவரிடம், 'நான் விரும்பு கிறேன்; உமது நோய் நீங்குக' என்றார்.''

மாற் 5:19, ''உமது வீட்டிற்குப் போய் ஆண்டவர் உம்மீது **இரக்கம்** கொண்டு உமக்குச் செய்ததையெல்லாம் உம் உறவினருக்கு அறி வியும்.'' பிசாசின் பிடியிலிருந்து விடுதலை பெற்றவர் இயேசு வோடேயே தங்கிவிடக் கேட்ட அனுமதியைக் கொடாமல் இயேசு அவருக்குக் கொடுத்த பதில் இது.



லூக் 7:13, தனது ஒரே மகனை இழக்கக் கொடுத்த நாயீனூர் விதவையைக் கண்ட ஆண்டவர், அவர்மீது **பரிவு** கொண்டு, ''அழா தீர்'' என்றார். இது இறுதி ஊர்வலத்தின்போது நடந்தது. இயேசுவிடம் இங்கு யாரும் உதவி நாடியதாகத் தெரியவில்லை.

இயேசுவின் சுகமளிப்பு ஊழியம் ஏன் பெரும்பாலும் எளியவரை நோக்கியே இருந்ததற்குக் காரணம் இதுதான். இயேசுதான் வரவிருந்த மேசியாவா, அல்லது இன்னொருவர் வரக் காத்திருக்கவேண்டுமா, என்று கேட்டறியத் திருமுழுக்கினன் யோவான் தனது சீடர் இருவரை அவரிடம் அனுப்பிவைத்தார் (மத் 11:2,3). இயேசுவின் பதிலில் எல் லாம் அடங்கிவிட்டது, பாருங்கள்: ''நீங்கள் கேட்பவற்றையும் காண்ப வற்றையும் யோவானிடம் போய் அறிவியுங்கள். பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர்; கால் ஊனமுற்றோர் நடக்கின்றனர்; தொழு நோயாளர் நலமடைகின்றனர்; காது கேளாதோர் கேட்கின்றனர்; இறந்தோர் உயிர்பெற்று எழுகின்றனர்; **ஏழைகளுக்கு** நற்செய்தி அறிவிக்கப்படுகிறது'' (வச 4,5). இதுதானே மேசியாவின் பிரதான பணி! ''ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்பவும், ஆண்டவர் அருள் தரும் ஆண்டினை முழக்கமிட்டு அறிவிக்கவும்'' (லூக் 4:18,19). ''ஒடுக்கப்பட்டோர்'' என்றால் ''தள்ளப்பட்டோர்.'' ஆண்டவரது ''அருள் தரும் ஆண்டு'' என்றால் என்ன? இதுதான் லேவியராகமம் 25இல் குறிப்பிடப்பட்டுள்ள ''யூபிலி ஆண்டு.'' யூபிலி என்ற எபிரெயச் சொல்லுக்குப் பொருள் ''குதூகலம், கொண் டாட்டமே'' என்பதாகும். அது எளியவர்க்கும் அடிமைகளுக்கும் விடு தலையைப் பறைசாற்றுவதால் உண்டாகும் ஆனந்தம்! (வச 10). இவ்விடுதலை வாசகம் அமெரிக்காவிலுள்ள பிலதெல்பியா மாகா ணத்திலுள்ள ''விடுதலை முழக்க மணி'' (Liberty Bell) மீது பொறிக் கப்பட்டுள்ளது. ''நீதி நியாயம்'' மற்றும் ''இரக்கவுணர்வு'' ஆகிய வற்றிற்கான அழைப்பு இது. செல்வந்தர் இன்னும் அதிகச் செல்வந்த ராகாதவாறும், தரித்திரர் இன்னும் அதிகம் தரித்திரராகாதவாறும் இருப்பதற்கான ஓர் ஏற்பாடு. இஸ்ரவேலின் கலாச்சாரம் மற்றும் பொருளாதாரத்தில் ஒரு சமநிலை ஏற்படுத்துவதற்கு இது உதவியது.

இக்கருத்தினை நமது சுகமளிப்பு மற்றும் தெய்வீக விடுதலைக் கூட்டங்களில் நாம் அடி யோடு மறந்துவிட்டோம். எனவேதான் நமது சுகமளிப்புக் கூட்டங்களில் குறிப்பிடத்தகு அற்புதங்களை நாம் காண்பது அரிதாகி விட்டது.

ஆண்டவர் நமது சுகமளிப்புக் கூட்டங்களில் அற்புதங்கள் ஏதாவது செய்துவிட்டால் அவற்றை விளம்பரத்திற்கும் நமது ஊழிய முன்னேற்றத்திற்குமான செய்தியாகவே பயன்படுத்துகிறோம். மாறாக, இயேசுவின் செயல்பாடுகளையே அதிகம் முன்வைக்கும் மாற்கு சுவிசேஷத்தில் மட்டும், நமதாண்டவர் குறைந்தது ஏழு தடவை தமது பயனாளிகளிடம் ''இதை ஒருவருக்கும் சொல்ல வேண்டாம்'' என்றார்! நியாயமான சாட்சிகளுக்கும் அறிவிப்புகளுக்கும் இடமுண்டு; ஆனால் புகைப்படத் தொழில்நுட்ப யுக்திகளினால் மிகைப்படுத்தும் தீய பழக்கம் எவ்விதத்திலும் ஒழிக்கப்படவேண்டும். அப்படியானால் ஒரு கேள்வி: வசனத்தை உறுதிப்படுத்தத்தானே அற்புதங்கள்? இது இரண்டாந்தர நோக்கம்தான். நான் ஏன் இப்படிச் சொல்லுகிறேன்? மற்ற மார்க்கங்களிலும் அற்புதங்கள் நடக்கத்தான் செய்கின்றன. கோராசின், பெத்சாய்தா மற்றும் கப்பர்நகூம் ஆகிய நகர்களில் இயேசு செய்த அற்புதங்களால் பெரிய அறுவடை ஏதும் கிடைக்கவில்லை (மத் 11:20-23). திருச்சபையில் இன்னும் சுகமளிக்கும் வரங்களும் அற்புதங்களைச் செய்யும் சக்தியும் உண்டு (1 கொரி 12:9,10). ஆனால் நமது இறையியல் தத்துவத்தில் எளியவர்க்குப் பணி என்ற கருத்து தலையோங்கும்போதுதான் இவ்வரங்கள் நேர்த்தியாய்ச் செயல்படும்.

■ இயேசுவானவர் தமது ''இரக்கத்தை'' அதிகம் காட்டிய இன்னொரு பகுதி மக்களது இயலாமை அல்லது பலமின்மை என்பதற்காக எனலாம். அதற்குச் சில எடுத்துக்காட்டுகளைக் கவனிப்போம் —

□ சீமோன் பேதுரு தம்மை மறுதலித்துச் சபிக்கவும் போகிறார் என்பதற்காய் அவரைத் திட்டித்தீர்க்காமல் இயேசு அவரது பலமின்மைமீது பரிவு கொண்டார். அவரிடம் இயேசு கூறிய வார்த்தைகள்: ''சீமோனே, சீமோனே, இதோ கோதுமையைப்போல் உன்னைப் புடைக்கச் சாத்தான் அனுமதி கேட்டிருக்கிறான். ஆனால் நான் உன் விசுவாசம் தளராதிருக்க உனக்காக மன்றாடினேன்'' (லூக் 22:31,32). பேதுருவுக்கிருந்த ''பரவசமான உள்ளத்தையும்'' அதே வேளையில் அவருக்கிருந்த ''பலங்குன்றிய உடலையும்'' இயேசு புரிந்துவைத்திருந்தார். அவரது விசுவாசத்திற்காய் ஜெபித்தது மட்டுமல்ல, அவர் சீரடைந்தபின் செய்யவேண்டிய பணியையும் முன்னதாகவே இயேசு குறிப்பிட்டார். ''நீ மனந்திரும்பியபின் உன் சகோதரரை உறுதிப்படுத்து!'' நாமோ மக்களைத் தூக்கிவிடுவதற்குப் பதிலாக அவர்களது பலவீனங்களைக் குறித்துத் தாக்கிப்பேசுவதிலேயே பிரியம் கொள்ளுகிறோம்.

□ ஒலிவ மலையில் ஓர் இரவு முழுவதும் ஜெபித்துவிட்டு தேவாலயத்தில் இயேசு உபதேசித்துக்கொண்டிருக்கையில், விபசாரத்தில் பிடிபட்ட ஒரு பெண்ணை வேதபாரகரும் பரிசேயரும் கொண்டு வந்து அவருக்குமுன் நிறுத்தினார்கள். மோசேயின் பிரமாணத்தையடுத்து இக்காரியத்தில் அவரது கருத்தைக் கேட்டனர். அவர்களைப் பார்த்து இயேசு விட்ட சவால்: ''உங்களுள் பாவம் இல்லாதவர் முதலில் இப்பெண்மேல் கல் எறியட்டும்!'' (யோ 8:7). ஒவ்வொருவராய் நழுவிச் சென்றுவிட்டனர் என்று சொல்லவேண்டுமோ? அப்பொழுது இயேசு அவளை நிமிர்ந்து பார்த்து, ''நானும் தீர்ப்பு அளிக்கவில்லை; நீர் போகலாம். இனிப் பாவம் செய்யாதீர்'' என்றார் (வச 11). அவள் தீர்ப்புணர்வு (condemnation) அல்ல, பாவவுணர்வு (conviction) அடையவேண்டுமென்பதே இயேசுவின் நோக்கம். இனிச் சிவப்பு ஒளிப்பகுதி வேண்டாம்; உலகின் ஒளியானவரையே பின்பற்ற வேண்டும் (வச 12)! ''நியாயத்தீர்ப்புக்குமுன் இரக்கம் மேன்மை பாராட்டும்'' என்பதற்கு இச்சம்பவம் என்னே எடுத்துக்காட்டு! (யாக் 2:13). ''இரக்கம் காட்டாதோருக்கு இரக்கமற்ற தீர்ப்புதான் கிடைக்கும்.'' இரக்கமுள்ளோர் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள்.

□ தமது சீடர் அவரை மறுதலித்ததையும் விட்டு ஓடியதையும் இயேசு உயிர்த்தபின் அவர்களுக்கு நினைப்பூட்டவில்லை. மாறாக, அவர்களைப் பார்த்து, ‘‘நீங்கள் துக்கமாயிருப்பது ஏன்?’’ என்று கேட்டார் (லூக் 24:17). ‘‘உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக’’ என்று வாழ்த்தினார் (வச 36). இதனால்தான் அவர் ‘‘இரக்கமுள்ள பிரதான ஆசாரியர்’’ என்றழைக்கப்படுகிறார் (எபி 2:17). நமது பலவீனங்களைப் பார்த்துப் பகடிபண்ணாது, நமக்காக அவர் பரிதபிக்கிறார் (4:15). யாராவது நெரிந்த நாணல் போல் இருந்தால் அவர்களை அவர் முறிக்கமாட்டார், முட்டுக்கொடுத்துத் தாங்குவார்! யாராவது மங்கியெரியும் திரிபோல் இருந்தால் அவர்களை அவர் அணைக்கமாட்டார், அவர்களுக்கு அனலூட்டி அவர்களை நன்கு எரியச் செய்வார்! (ஏசா 42:3). அல்லேலூயா!

■ இயேசு வாழ்ந்த சமுதாயத்தில் ஆணாதிக்கம் ஓங்கியிருந்தது. கால்மிதி போலத்தான் பெண்கள் நடத்தப்பட்டனர். ‘‘ஆண்டவரே, என்னை ஒரு பெண்ணாய்ப் படைக்காததற்காய் உம்மைத் துதிக்கிறேன்’’ என்று ஜெபாலய ஆராதனைகளில் யூத ஆடவர் ஜெபிப்பார்களாம்! இயேசுவோ பெண்களுக்குக் காட்டிய பரிவைச் சுட்டிக்காட்டும் சுவிசேஷப் பகுதிகள் நிறையவுண்டு —

□ கணவன் விரும்பினால் எதற்கானாலும் மனைவியை விவாகரத்து செய்யும் பழக்கம் அன்றிருந்தது. இயேசுவைப் பரிசோதிக்கும்படிப் பரிசேயர் ஒரு முறை அவரிடம் கேட்ட கேள்வி: ‘‘ஒருவர் தம் மனைவியை எக்காரணத்தையாவது முன்னிட்டு விலக்கிவிடுவது முறையா?’’ (மத் 19:3). இயேசு கொடுத்த பதில் மிகத் தெளிவு: ‘‘படைப்பின் தொடக்கத்திலேயே ஆணும் பெண்ணுமாகக் கடவுள் அவர்களைப் படைத்தார் என்று நீங்கள் மறைநூலில் வாசித்ததில்லையா? இதனால் கணவன் தன் தாய் தந்தையை விட்டுவிட்டுத் தன் மனைவியுடன் ஒன்றித்திருப்பான். இருவரும் ஒரே உடலாய் இருப்பர். இனி அவர்கள் இருவர் அல்ல; ஒரே உடல். எனவே கடவுள் இணைத்ததை மனிதர் பிரிக்காதிருக்கட்டும்’’ (வச 4-6). அவரது



பதில் இவ்வளவு திட்டமாயிருந்தும், மறுபடியும் அவரிடம் அவர்கள் கேட்ட கேள்வி: ‘‘மணவிலக்குச் சான்றிதழைக் கொடுத்து மனைவியை விலக்கிவிடலாம் என்று மோசே கட்டளையிட்டது ஏன்?’’ (வச 7). மோசே இவ்விதம் அனுமதித்ததற்குக் காரணம் அவர்களது ‘‘கடின உள்ளமே’’ என்று இயேசு விளக்கினார் (வச 8). வேறு வார்த்தைகளில் சொன்னால், ‘‘அவளை இம்சைப்படுத்துவதைவிட அவளை விட்டுவிடுங்கள்’’ என்றார் மோசே! ஆணாதிக்கம் நிறைந்த அன்றையச் சமுதாயம் கனிவு, இரக்கம், பரிவு, புரிதல் போன்றவற்றையெல்லாம் எங்கோ தூக்கியெறிந்துவிட்டது. தம்பதியரை ஒருமனதுடன் காப்பது கனிவிரக்கமும் மன்னிப்புமே. இரக்கமுள்ளோர் பாக்கியவான்கள்!

□ நிமிர முடியாது கூன் விழுந்த நிலையிருந்த ஒரு பெண்ணை ஆண்டவர் லூக்கா 13இல் குணமாக்கியதைப் பார்க்கிறோம். அவளுக்குப் பதினெட்டு ஆண்டுகளாய் இந்தப் பிரச்னை (வச 11). பெண்களுக்கு முதுகு வலி என்பது எவ்வளவு சகஜம் என நாமறிவோம். பிள்ளைப்பேறு, அறுவை சிகிச்சை, பொதுவான பலவீனம், அளவுக்கதிகமான வீட்டு வேலை போன்றவை இதற்குக் காரணங்கள். இயேசு தாமாகவே அவரை அருகில் கூப்பிட்டு, ‘‘அம்மா, உனது நோயிலிருந்து நீர் விடுவிக்கப்பட்டுள்ளீர்’’ என்றார் (வச 12). ஆனால் இப்பெண்ணைக் குணமாக்கியது ஓய்வு நாளில் என்பது ஜெபாலயத் தலைவருக்குக் கோபமூட்டிற்று. அவரது இதயக் கடினத்தைப் பாருங்கள்! பதினெட்டு ஆண்டுகள் கூனியிருந்தவள் நிமிர்ந்துவிட்டாளே என்று அவரால் மகிழ முடியாத அளவு அவருக்குச் சட்ட திட்டங்கள்தான் முக்கியமாயிற்று (வச 14). அவரை அதட்டி ஆண்டவர் கூறியது: ‘‘வெளிவேடக்காரரே, நீங்கள் ஒவ்வொருவரும் ஓய்வு நாளில் தம் மாட்டையோ கழுதையையோ தொழுவத்திலிருந்து அவிழ்த்துக்கொண்டு போய்த் தண்ணீர் காட்டுவதில்லையோ? பாருங்கள், ஆபிரகாமின் மகளாகிய இவரைப் பதினெட்டு ஆண்டுகளாய்ச் சாத்தான் கட்டி வைத்திருந்தான். இந்தக் கட்டிலிருந்து இவரை ஓய்வு நாளில் விடுவிப்பது முறையில்லையா?’’ (வச 15,16). இயேசுவின் கனிவுநிறை வார்த்தைகளைக் கவனியுங்கள்:

''ஆபிரகாமின் மகள்... பாருங்கள்!'' மக்களது துன்பங்களையும் தேவைகளையும் பார்க்க முடியாதபடிச் சட்டதிட்ட மார்க்கம் நமது கண்களைக் குருடாக்குகின்றது.

□ விதவைகள்மீது இயேசு வெகுவாய்க் கவனம் செலுத்தினார். பார்வைக்கு நீண்ட ஜெபம்பண்ணி விதவைகளுடைய வீடுகளைச் சூறையாடிய வேதபாரகருக்கு எதிராக அவர் குரலெழுப்பினார். அவர் களுக்குக் கடும் தண்டனைத் தீர்ப்பு உண்டு என்றார் (மாற் 12: 38-40). இதைத் தொடர்ந்து உடனே அவர் அந்த விதவையின் இரு காசுகளைப் பாராட்டியதைப் பார்க்கிறோம் (வச 41-44). ஒரு வேளை இவ்விதவையும் வேதபாரகரால் கொள்ளையடிக்கப்பட்டவராய் இருந் திருக்கலாம்! (லூக் 20:46 முதல் 21:4 வரையுள்ள வசனங்களையும் வாசியுங்கள்.) ஏற்கனவே நாம் பார்த்தபடி, நாயினூர் விதவையின் ஒரே மகனது இறுதி ஊர்வலத்தின்போது, இயேசு அவர்மீது ''இரக்கம்'' கொண்டு, ''அழாதே'' என்றார் (லூக் 7:11-15).

□ ஆண்களைவிடப் பெண்களுக்குக் கண்ணீர் நிறையவுண்டு! பெண்களில் ஒன்றுவிட்டு ஒருவர் தனிமையில் அழுதுகொண்டிருக் கின்றனர். துவளவேண்டாம், ஊக்கம் பெறுங்கள்! பெரிய வெள்ளி இறுதி நாளல்ல; ஈஸ்டர் ஞாயிறு வருகிறது! இயேசுவின் கல்ல றைக்கு வெளியே நின்றுகொண்டு மகதலேனா மரியாள் அழுது கொண்டிருந்தார். அவர் உள்ளே பார்த்தபோது, அங்கே வெண் ணாடை அணிந்த இரு வானதூதரை அவர் கண்டார். இயேசுவின் உடலை வைத்திருந்த இடத்தில் ஒருவர் தலைமாட்டிலும் மற்றவர் கால்மாட்டிலுமாக அவர்கள் அமர்ந்திருந்தார்கள் (யோ 20:11,12). ''அம்மா, ஏன் அழுகிறீர்'' என்று அவர்கள் கேட்டார்கள் (வச 13). இயேசுவும் அதே கேள்வியைக் கேட்டார்: ''ஏனம்மா அழுகிறாய்?'' (வச 15). உயிர்தெழுந்த இயேசுவின் முதல் வார்த்தைகள் இவைதான்: ''ஏனம்மா அழுகிறாய்?'' இதை வாசித்துக்கொண்டி ருக்கும் சகோதரியே, இது உங்களுக்கான நேரடிச் செய்தி. உங்கள் கண்ணீர் ஆண்டவரது பார்வையில் அருமையானது. அதனை அவர் தமது தோல்பையில் சேர்த்துவைத்துள்ளார் (சங் 56:8).



□ ''என்னைக் கண்டவர் என் பிதாவைக் கண்டுள்ளார்'' என்றார் இயேசு (யோ 14:9). பிதாவாகிய தேவனைக் குறித்து நாம் வாசிப்பது என்ன? அவர் ''இரக்கங்களின்'' பிதாவானவர் (2 கொரி 1:3). அவர் விதவைகளின், திக்கற்றோரின், தேவன் (சங் 68:4,5). எனவேதான் விதவைகளையும் அனாதைகளையும் பராமரிப்பதே உண்மையான மார்க்கம் என்ற சொல்லப்பட்டிருக்கிறது (யாக் 1:27).

இரக்கமுள்ளோர் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார் கள்! கிறிஸ்தவர்கள் அனைவருமே ''தானதர்ம மிஷனரிகளாய்த்'' (Missionaries of Charity) திகழவேண்டும்.

■

*கர்த்தர் அன்பே, தூய அன்பே,*
*பக்தர்கள் போற்றும் அன்பே — என்*
*இயேசுவின் அன்பு மா பெரிதே;*
*எப்படிப் பாடுவேனோ?*

*குற்றமில்லாத அன்புடனே*
*மற்றவரை நான் நேசிக்கவே*
*கற்பனையில் பிரதானம் ஒன்றே,*
*கைக்கொண்டு வாழ்ந்திடுவேன் — அவர்*

*சத்துருவான மித்திரனை*
*சோதரன் தோழனாய் நேசித்தீரே;*
*பாதம் பணிந்தும்மை வேண்டுகின்றேன்,*
*பூரண அன்பருள்வீர் — திருப்*

*ஜீவனைத் தந்த அன்பதுவே*
*தேவனின் சேவை செய்திடவே*
*கர்த்தர் வருகையைக் கண்டிடவே*
*காத்திருந்தே அடைவேன் — என்*

— சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014






# 5
# தூய்மையின் அடிச்சுவடுகள்
## Footsteps of Purity

கிறிஸ்துவை ''ஏற்றுக்கொள்ளுதல்'' அல்லது ''விசுவாசித்தல்'' என்ற பொருளிலேயே ஏராளம் பிரசங்கங்களைக் கேட்கிறோம். அவரைப் ''பின்பற்றுதல்'' (following) அல்லது அவர்போல் ''நடத்தல்'' (imitating) என்பவை பற்றிய போதனைகள் மிகமிகச் சொற்பம். நவீன அழைப்புகளைவிடத் திருமறை தரும் அழைப்பு வித்தியாசமானது. இதோ இரு எடுத்துக்காட்டு வசனங்கள்: கொலோ 2:6, ''நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே அவருக்குள் *நடந்துகொள்ளுங்கள்.''* 1 யோ 2:6, ''கிறிஸ்துவுக்குள் நிலைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறவன் அவர் நடந்தபடியே தானும் *நடக்கவேண்டும்.''* புதிய ஏற்பாடு முழுவதிலும் அப்போஸ்தலரது இதயக் கதறல் இதுவாகத்தான் இருக்கிறது—

ரோமர் 8:29, ''தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய *சாயலுக்கு* ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்.'' நாம் இயேசுவைப்போல் மாறவேண்டும் என்பதே கடவுளது ஏக்கம்.

2 கொரிந்தியர் 3:18, ''நாமனைவரும் முக்காடு இல்லா முகத்தினராய் ஆண்டவரின் மாட்சியைப் பிரதிபலிக்கிறோம். இவ்வாறு மென்மேலும் மாட்சி பெற்று, அவர் *சாயலாக* மாற்றமடைகிறோம். இவையெல்லாம் ஆவியாம் ஆண்டவரின் செயலே.'' நமக்குள் வாசமாயிருந்து ஆவியானவர் நிகழ்த்தும் பிரதானச் செயல் நம்மை இயேசுவைப்போல் மாற்றிட மறுரூபப்படுத்துவதே.

எபேசியர் 4:11-16, புதிய ஏற்பாட்டுச் சபையிலுள்ள ஐவகை ஊழியங்களின் பணி விசுவாசிகளைப் பக்திவிருத்தியும் பக்குவமும்

அடையச்செய்து ‘‘கிறிஸ்துவிடம் காணப்பட்ட *நிறைவைப்* பெறு மளவிற்கு’’ நம்மை முதிர்ச்சியடையச் செய்வதே. ‘‘தலையாய கிறிஸ் துவுக்குள் எல்லாவற்றிலும் நாம் வளரவேண்டும்.’’

கொலோசெயர் 1:27,28, ‘‘எந்த மனிதனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் *தேறினவனாக* நிறுத்தும்படி, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனிதனுக்கும் அறிவுரை கூறி, எந்த மனிதனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம் பண்ணுகிறோம்.’’

பாவிகளைக் கிறிஸ்துவிடம் அழைக்கும் சுவிசேஷப் பிரசங்கங் களையே ஞாயிறு காலை ஆராதனைகளில் செய்துகொண்டிருக்க வேண்டாமென்று சபை ஆயர்களை வருந்திக் கேட்கிறேன். கர்த்தருக் குள் விசுவாசிகள் வளரும்படித் திடமான செய்திகள் கொடுங்கள். விசுவாசிகளுக்குப் பக்திவிருத்தி உண்டாக்கி, அவர்களுக்கு அறி வுறுத்தி, அவர்களைப் பயிற்றுவித்துப் பழக்குவிக்கும்படி உங்கள் பிரசங்கங்களில் நிறைய சதை இருக்கட்டும்! திரும்பத் திரும்ப அடித் தளத்தையே போட்டுக்கொண்டிராமல் அவர்களைப் பூரணத்திற்கு வழிநடத்துங்கள் (எபி 6:1,2).

‘‘சீடர்கள்’’ என்ற சொல்லைவிட ‘‘விசுவாசிகள்’’ என்ற சொல்லே கிறிஸ்தவ வட்டாரங்களில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், திருச்சபை வாழ்வுக்குப் பாடப்புத்தகமான அப்போஸ்தலர் நடபடிகளில் ‘‘சீடன்’’ அல்லது ‘‘சீடர்கள்’’ எனும் சொல் இருபத் தெட்டு தடவையும், ‘‘விசுவாசிகள்’’ எனும் சொல்லோ இரண்டு மூன்று தடவை மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. ‘‘சீடன்’’ என்ப தற்கு அடிப்படைப் பொருள் ‘‘கற்பவன்’’ அல்லது ‘‘மாணவன்’’ என்ப தாகும். இயேசுவின் சீடராக அவரிடமிருந்து கற்கவேண்டும் என்ற விடப்பட்டுள்ள அழைப்பைத் திரும்ப வலியுறுத்துவதே இந்நூலின் நோக்கம். நமது கருப்பொருள் வசனம் மத்தேயு 11:29இலுள்ள இயேசுவின் வார்த்தைகள்: ‘‘என்னிடம் *கற்றுக்கொள்ளுங்கள்;* நான் சாந்தமும் மனத்தாழ்மையுமாய் இருக்கிறேன்; உங்கள் ஆத்துமாக் களுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும்.’’ மலைப்பிரசங்கத்திலுள்ள



பாக்கிய வசனங்கள் இயேசுவின் வாழ்வில் அப்படியே உருவானதால் அவற்றின் அடிப்படையிலேயே அவரது வாழ்க்கையை ஆராய்ந்து வருகிறோம். முதலாம் மற்றும் மூன்றாம் பாக்கிய வசனங்களைச் சேர்த்து *‘‘எளிமையின் அடிச்சுவடுகள்’’* என்று 2ஆம் அத்தியாயத்தில் தியானித்தோம். 3ஆம் அத்தியாயத்தில் இரண்டாம் மற்றும் நான்காம் பாக்கிய வசனங்களைச் சேர்த்து *‘‘வேட்கையின் அடிச்சுவடுகள்’’* என்று ஆராய்ந்தோம். ஐந்தாம் பாக்கிய வசன அடிப்படையில் *‘‘இரக் கத்தின் அடிச்சுவடுகள்’’* என 4ஆம் அத்தியாயத்தில் படித்தோம். இப்பொழுது *‘‘தூய்மையின் அடிச்சுவடுகள்’’* என்பதனை ஆறாம் பாக்கிய வசன அடிப்படையில் கவனிப்போம்: ‘‘இருதயத்தில் சுத்த முள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்’’ (மத் 5:8).

திருவிவிலியத்திலுள்ள ஒவ்வொரு புத்தகமும் ஒரு கருப் பொருளை மையமாய்க் கொண்டுள்ளது. ‘‘தூய்மை’’ அல்லது ‘‘பரி சுத்தம்’’ என்பதனை வெகுவாய் வலியுறுத்துவது லேவியராகமப் புத்தகம் ஆகும். இப்புத்தகத்திலிருந்து இரண்டு மூன்று வசனங் களோடு தொடங்குவோம் —

லேவி 19:2, ‘‘உங்கள் தேவனும் கர்த்தருமாகிய நான் பரிசுத்தர், ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்.’’

20:7,8, ‘‘நீங்கள் உங்களைப் பரிசுத்தப்படுத்திப் பரிசுத்தரா யிருங்கள்; நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் ... நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தர்.’’

21:8, ‘‘உங்களைப் பரிசுத்தமாக்குகிற கர்த்தராகிய நான் பரி சுத்தமாயிருக்கிறேன்.’’

இந்த வசனங்களிலிருந்து பரிசுத்தம் குறித்த முப்பரிமாணச் சத்தியம் வெளிப்படுகிறது. (1) ‘‘பரிசுத்தராயிருங்கள்!’’ இதனைப் பிதாவாகிய தேவனிடமிருந்து வரும் அழைப்பு எனக் கொள்ளலாம். (2) ‘‘நான் பரிசுத்தராயிருக்கிறதுபோல ...’’ இதனைக் குமாரனாகிய

தேவன் முன்வைக்கும் மாதிரி எனப் புரிந்துகொள்ளலாம். (3) ''நான் உங்களைப் பரிசுத்தமாக்குகிறேன்!'' பரிசுத்த ஆவியானவராகிய தேவனது சுத்திகரிக்கும் வேலை என இதனை எடுத்துக்கொள்ளலாம். ஒரு கட்டளை, ஒரு முன்மாதிரி, ஒரு வாக்கு! இம்மூன்று காரியங்களும் 1 பேதுரு 1:15,16இல் அழகாய் இணைக்கப்பட்டுள்ளன: ''உங்களை அழைத்தவர் தூய்மையுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் உங்கள் நடத்தையிலெல்லாம் தூய்மையுள்ளவராய் இருங்கள். நீங்கள் தூயவராய் இருங்கள்; ஏனெனில் நான் தூயவன் என மறைநூலில் எழுதப்பட்டிருக்கிறது.'' தூயவராய் இருங்கள் எனும் கட்டளை மட்டுமே கடவுளிடமிருந்து வந்திருந்தால், பாவமற்ற விண்ணகத்தில் வாழும் கடவுளுக்குப் பாவம் நிறைந்த உலகில் வாழும் நமது போராட்டமே புரியாது என்போம். எனவே பரிசுத்தத்திற்கு முன்மாதிரியாக அவர் தமது குமாரனை மண்ணுலகிற்குள் அனுப்பினார். ஆனாலும் நாம் கேட்கக்கூடியது, ''நம்மைப்போல் இயேசு பாவத்தில் பிறக்கவில்லையே, அவரைப்போல் நாம் தூய்மையாய் இருப்பது எப்படி?'' இக்கேள்விகளுக்குப் பதிலளிக்கும் வகையில்தான், நமக்குள் குடியிருந்து நம்மைத் தூய்மைப்படுத்துவதற்காய்க் கடவுள் தமது பரிசுத்த ஆவியானவரை அனுப்பிவைத்தார். திரித்துவ தேவனின் இந்த முப்பரிமாணப் பணியினை அப்போஸ்தலன் பேதுரு துல்லியமாய் வரையறுத்துள்ளார். 1 பேதுரு 1:2, ''பிதாவாகிய தேவனது முன்னறிவு ... இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தெளிக்கப்படுதல் ... ஆவியானவரின் பரிசுத்தமாக்குதல்!'' என்னே ஊக்குவிப்பு! இந்தப் பின்னணியுடன் நாம் இயேசுவானவரது தூய்மையின் அடிச்சுவடுகளைக் கவனிப்போம் —

■ கிறிஸ்து இயேசுவைக் ''கவனித்துப் பார்க்கும்படி'' எபிரெயர் நிருப ஆக்கியோன் நமக்கு அழைப்பு விடுக்கிறார் (எபி 3:1). இது பாவிகளுக்கு அல்ல, பரிசுத்தவான்களுக்கு வரும் அழைப்பு. ''பரிசுத்த சகோதரரே'' என இவ்வசனம் தொடங்குகிறது. நாம் ஏற்கனவே இயேசுவின் இரத்தத்தால் கழுவப்பட்டுள்ளோம். நிலையின்படியான (positional) பரிசுத்தத்திலிருந்து நடையின்படியான (practical)



பரிசுத்தத்திற்கு நாம் கடந்து செல்லவேண்டும். இயேசுவின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்து அதின்படி நடப்பதாலேயே இது சாத்தியமாகும். இறைமகன் இவ்வசனத்தில் ''கிறிஸ்து இயேசு'' என்றழைக்கப்படுகிறார். இயேசு என்பது அவரது மண்ணுலகப் பெயர்; கிறிஸ்து என்பது அவரது விண்ணுலகப் பட்டம். அவர் இப்போது பரலோகில் இருக்கிறார்; பூவுலகில் இருக்கும் நாம் அவர் இங்கு நடந்ததுபோல நடக்கவேண்டும். பிதாவானவரால் அனுப்பப்பட்டவர் என்ற ரீதியில் அவர் ''அப்போஸ்தலர்'' என்றிருந்தார். இப்பொழுது பிதாவானவரின் வலது பக்கம் ''பிரதான ஆசாரியராய்'' அமர்ந்திருக்கிறார். எனவே, இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வரும் அழைப்பு என்பது இகத்தின் பயணிகளுக்கு வரும் ''பரம அழைப்பு'' ஆகும்!

■ நாம் தூய்மையாக்கப்பட முடியும் என்பதற்கு இயேசுவின் வம்ச வரலாறே நமக்குத் திடமான நம்பிக்கையூட்டுகிறது. மத்தேயு முதலாம் அத்தியாயத்தைப் பாருங்கள். மூன்றாம் வசனத்தில் ''தாமார்'' என்பவளைச் சந்திக்கிறோம். தனது மாமனாரை மயக்கும்படி ஒரு வேசிபோல் நடித்த மலடியான விதவை அவள் (ஆதி 38:15). அடுத்து 5ஆம் வசனத்தில் வருவது ''ராகாப்.'' புதிய ஏற்பாட்டிலும் அவ்விதமே அழைக்கப்பட்ட ஒரு வேசி அவள் (யோசு 2:1; யாக் 2:25). அடுத்து 5ஆம் வசனத்திலேயே நாம் சந்திப்பது ''ரூத்.'' அவள் மோவாபிய இனத்தைச் சேர்ந்த யூதரல்லாதவள் (ரூத் 4:10,17). மோசேயின் நியாயப்பிரமாணத்தின்படி, பத்தாம் தலைமுறையில்கூட மோவாபியர் கர்த்தரது சபையில் சேர முடியாது (உபா 23:3). இயேசுவின் இந்த வம்ச வரலாற்றில் ''பத்சேபாளும்'' இடம் பெற்றுள்ளாள் (மத் 1:6). உரியாவின் மனைவியாயிருந்த இவளோடுதான் தாவீது விபசாரம்பண்ணினான் (2 சாமு 11:3,4). புதிய ஏற்பாட்டிலும் அவள் ''உரியாவின் மனைவியாயிருந்தவள்'' என்றே குறிப்பிடப்படுகிறாள்! யோபின் புத்தகத்திலுள்ள சவால் நிறை கேள்வி ஒன்று இங்கு பதிலளிக்கப்படுகிறது. யோபு 14:4, ''அழுக்குற்றதினின்று அழுக்கற்றதைக் கொணர முடியுமா? யாராலும் முடியவே முடியாது!'' ஆனால் தேவனால் முடியும்! தேவனால் மட்டுமே முடியும்! விழுந்து

போன மனுக்குலத்துடன் இயேசு தம்மை இவ்விதம் முழுமையாய் அடையாளப்படுத்திக்கொண்டு நமக்காகப் ''பாவம்'' ஆனார் (2 கொரி 5:21). நாம் நீதிமான்களாக்கப்படவும், பரிசுத்தர்களாக்கப்பட வும், புனிதர்களாக்கப்படவுமே இதைச் செய்தார்! என்னே உறுதிப் பாடு! என்னே நம்பிக்கை! அல்லேலூயா!

■ இயேசுவை வெளியுலகில் பணிக்காய் அறிமுகம் செய்தது அவரது முன்னோடியாய் வந்த திருமுழுக்கினன் யோவான்தான். இயேசுவை நெருப்புத் திருமுழுக்குக் கொடுப்பவரென்று அறிமுகம் செய்தார் (மத் 3:11,12). இது சுத்திகரிக்கும் நெருப்பு. நமது வாழ் வில் குப்பைக்கூளங்களும் தேவையற்றவைகளும் ஏராளம் உண்டு. பரிசுத்த ஆவியானவரின் அக்கினியினால் இயேசு நம்மைச் சுத்தி கரித்துப் புடமிடுகிறார். ''அக்கினி ஞானஸ்நானம்'' என்பதற்கு என் னென்னவோ விளக்கம் கொடுத்துவிட்டோம். பதரைச் சுட்டெரிக்கும் அக்கினி என்றுதானே இவ்வசனப் பகுதி தெளிவாய்ச் சொல்லுகிறது? பரிசுத்த ஆவியானவரின் சுத்திகரிக்கும் வேலையே இதுவன்றி வேறல்ல. பெந்தெகொஸ்தே வட்டாரங்களில் அக்கினி முகாம்கள், அக்கினிக் கருத்தரங்குகள் என்றெல்லாம் நடத்துகிறோம். அங்கு பிரதானமாக வலியுறுத்தப்படுவது சுத்திகரிப்பும், பரிசுத்தமாகுதலும் என்று யார் சொல்ல முடியும்? ''பரிசுத்த'' ஆவியானவர் என்ற அவரது பெயருக்கேற்ப அவரது பிரதான ஊழியம் நம்மைப் பரிசுத்தமாக்கு வதே. இதனை ''ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுதல்'' மற்றும் ''ஆவியானவரால் மறுரூபப்படுதல்'' என்றே திருமறை அழைக்கிறது (1 பேது 1:2; 2 கொரி 3:18). நமது வாழ்வின் இருண்ட பகுதிக்குள் பரிசுத்த ஆவியானவர் தமது ஒளிக்கதிர்களை வீச இடங்கொடுப் போம். அவர் நம்மை நீதியானதும் நேர்மையானதுமான பாதையில் நடத்துவார் (சங் 143:10).

■ தமது இகவாழ்வின் துவக்க முதலே இயேசு ''நீதிநெறி'' (righteousness) குறித்து மிகவும் கவனமாகவும் கண்டிப்பாகவும் இருந்தார். யோவானால் யோர்தானில் திருமுழுக்கு பெறும்படி



அவரைத் தள்ளிச்சென்றது தேவ நீதிக்கான அவரது நாட்டமே. தனது தகுதியின்மையை உணர்ந்த யோவான் இயேசுவுக்குத் திரு முழுக்கு கொடுக்கத் தயங்கியபோது இயேசு கொடுத்த பதில்: ''இப் பொழுது இடம் கொடும். கடவுளுக்கு *நீதியானவை* அனைத்தையும் நாம் இவ்விதம் நிறைவேற்றுவதுதான் முறை'' (மத் 3:15). தண்ணீர் ஞானஸ்நானம் என்பது விண்ணுலகிற்கு நுழைவுச் சீட்டு அல்ல; அது தேவ நீதியை நடைமுறையில் அனுபவிக்க உதவும் ஓர் அனுபவம். ஞானஸ்நானம் என்பது ஒரு சடங்காச்சாரம் அல்ல, அது நமது மனச் சாட்சியைத் தூய்மைப்படுத்தும் ஓர் ஏது என்ற இச்சத்தியத்தை அப்போஸ்தலன் பேதுரு அழுத்திக் கூறியுள்ளார் (1 பேது 3:21). திருமுழுக்காட்டப்படுவது உடல்தான் என்றாலும், அதின் உள்ளார்ந்த அர்த்தம் ஆன்மீகமானது. ரோமர் 6:1-4இல் அப்போஸ்தலன் பவுல் ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தை விளக்குகிறார்: இப்பகுதியில் இரு முக்கிய சத்தியங்களை முன்வைக்கிறார்: நாம் இனிப் பாவ வாழ்க்கையில் தொடரக்கூடாது (வச 1); புது வாழ்வு பெற்றவர்களாய் நடந்துகொள்ளவேண்டும் (வச 4). நாம் திருமுழுக்கு பெற்றதேன் என்பது நினைவிருக்கிறதா? அன்று செய்த தீர்மானமும் அர்ப்பணிப் பும் என்னவாயிற்று? நாம் பாடிய பல்லவி ஞாபகமிருக்கிறதா?

*இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்;*
*பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்!*
*சிலுவை என் முன்னே, உலகம் என் பின்னே;*
*பின்னோக்கேன் நான், பின்னோக்கேன் நான்!*

■ நீதி மற்றும் நேர்மை குறித்துப் பேசும்போது இயேசுவானவர் தமது சீடருக்கு முன்பும் மக்களுக்கு முன்பும் தெளிவானதொரு சவாலை முன்வைத்தார். அவர் சொன்னது: ''வேதபாரகர் பரிசேயர் ஆகியோரின் நெறியைவிட உங்கள் நெறி சிறந்திருக்கட்டும். இல்லையெனில், நீங்கள் விண்ணரசுக்குள் புக முடியாது என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்'' (மத் 5:20). இயேசுவின் காலத்தில் பரிசேயர்கள்தான் அதிக மார்க்க பக்தி நிறைந்தவர்கள். அவர்கள்

தேவன் கொடுத்த பிரமாணத்தை 613 சட்டங்கள், 248 கட்டளைகள், 365 விலக்கங்கள் எனப் பகுத்திருந்தனர். அவர்கள் எவ்வளவு கண்டிப்பாய் நடந்துகொண்டார்கள் என்பதற்கு இதோ சில எடுத்துக்காட்டுகள். தேவனது பெயரை அவமதிக்கக்கூடாது என்பதற்காக அதனை உச்சரிக்கவே மாட்டார்கள். பாலியல் சோதனையை மேற்கொள்வதற்காக, ஒரு பெண்ணைப் பார்த்தவுடன் தலையைத் தொங்கவிட்டுக்கொள்வார்கள். இவ்விதம் தலையைத் தொங்கவிட்டுச் செல்வதால் அறியாது சுவரில் முட்டிவிடுவார்கள். ''இரத்தம் கசியும் பரிசேயர்'' (Bleeding Pharisees) என்ற பெயரும் இதனால் அவர்களுக்கிருந்தது! தனிப்பட்ட தூய்மையைக் காத்துக்கொள்ள அவர்கள் அவ்வளவு கவனமாயிருந்தனர். அப்படியிருந்தும் அவர்களது பிரச்னைதான் என்ன?

பரிசேயராகிய அவர்கள் இறைச்சட்டத்தின் எழுத்தை (letter) பிடித்துக்கொண்டு அதின் கருத்தை (spirit) விட்டுவிட்டனர். தனது ஆன்மீகக் குருட்டுத்தனத்திலிருந்து சுகம் பெற்றபோதுதான் பரிசேயனாயிருந்த பவுலுக்கு மனத்தெளிவுண்டாயிற்று. அவர் எழுதியது: ''எழுத்து கொல்லும்; ஆவியோ உயிர்ப்பிக்கும்'' (2 கொரி 3:6). ரோ 2:28,29இல் இதனை இன்னும் விளக்குகிறார்: ''புறத்தோற்றத்தில் மட்டும் யூதராய் இருப்பவர் யூதர் அல்ல; அவ்வாறே, புறத்தோற்றத்தில், அதாவது உடலில், செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனம் அல்ல. ஆனால் அகத்தில் யூதராய் இருப்பவரே உண்மையான யூதர். உள்ளத்தில் செய்யப்படும் விருத்தசேதனமே உண்மையான விருத்தசேதனம். அது எழுதிய சட்டத்தின்படிச் செய்யப்படுவது அல்ல; தூய ஆவியால் செய்யப்படுவதாகும். அத்தகையவர் மனிதரிடமிருந்து அல்ல, கடவுளிடமிருந்து பாராட்டு பெறுவர்.'' எனவேதான், ''**இருதயத்தில்** சுத்தமுள்ளோர் பாக்கியவான்கள்'' என்றார் இயேசு.

''உள்ளான'' மார்க்கம் இல்லையே என்பதுதான் இன்றையக் கிறிஸ்தவத்தின் சோக நிலை. கிறிஸ்தவம் என்றாலே சட்டதிட்டங்கள்தான் என்றாகிவிட்டது. அன்றையப் பரிசேயர் தசமபாகம் செலுத்துவதில் கண்ணும் கருத்துமாய் இருந்தனர்; ''இரக்கம்'' காட்டுவதையோ விட்டுவிட்டனர் (மத் 23:23). அவர்கள் ஓய்வு நாளைக் கண்டிப்பாய்க் கடைப்பிடித்தனர்; மனிதாபிமானம்'' என்பதையோ மறந்துவிட்டனர் (மாற் 2:27). இப்பகுதிகளில் இயேசுவானவர் திருத்தங்கள் செய்தபோது அவர் நியாயப்பிரமாணத்தை மீறுகிறார் என்றெண்ணினார்கள். அவரோ ஆணித்தரமாய்ச் சொன்னது: ''திருச்சட்டத்தையோ தீர்க்கதரிசனங்களையோ நான் அழிக்க வந்தேன் என நீங்கள் எண்ணவேண்டாம்; அவற்றை நிராகரிக்க அல்ல, நிறைவேற்றவே வந்தேன்'' (மத் 5:17). அவர் நியாயப்பிரமாணத்தை அழிக்கவில்லை, அதனை அகலப்படுத்தினார். ''கோபம்'' என்பதையும் இணைத்து ''கொலை'' என்பதை அகலப்படுத்தினார் (மத் 5:21-23). ''இச்சை'' என்பதையும் இணைத்து ''விபசாரம்'' என்பதை அகலப்படுத்தினார் (வச 27,28). அடிப்படை ''உண்மை'' என்பதையும் இணைத்து ''ஆணை'' என்பதை அகலப்படுத்தினார் (வச 33-37). ''எதிர்த்தல்'' (resistance) என்பதையும் இணைத்துப் ''பழிவாங்குதல்'' என்பதை அகலப்படுத்தினார் (வச 38,39). ''எதிரியை வெறுத்தல்'' என்பது ''எதிரியை நேசித்தல்'' என்றாகவேண்டுமெனப் போதித்தார் (வச 43,44). *''ஆனால் நான்* உங்களுக்குச் சொல்வதாவது ...'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிப் பரிசுத்தத்தின் தரத்தை இன்னும் உயர்த்தினார்!

■ இயேசுவின் வாழ்க்கையில் ''பரிசுத்தம்'' என்பதே அவரது கோட்பாட்டுச் சொல்லாய் இருந்தது. எனவேதான், நமக்கு அவர் கற்றுக்கொடுத்த ஜெபத்தின் ஏழு விண்ணப்பங்களில் முதலாவது, ''உமது நாமம் பரிசுத்தப்படுவதாக!'' (மத் 6:9). கடவுளது பெயர் ஏற்கனவே பரிசுத்தமானதுதான்; நாம் அதைப் பங்கப்படுத்தக் கூடாது. இஸ்ரவேலரோ, சென்ற இடங்களிலெல்லாம் தேவனது பெயருக்கு அவமகிமையைத்தான் கொண்டுவந்தார்கள். தீர்க்கன் எசேக்கியேல் மூலம் அவர்களுக்கெதிரான தேவனது அதிருப்தி அதுதான்: ''வேற்றினத்தாரிடையே அவர்கள் எங்குச் சென்றாலும்

எனது திருப்பெயரைத் தீட்டுப்படுத்தினர். ஏனெனில் அவர்களைக் குறித்து 'இவர்கள் ஆண்டவரின் மக்களாக இருப்பினும், அவரின் நாட்டை விட்டுப் போகவேண்டியதாயிற்று' என்று கூறப்பட்டது'' (எசேக் 36:20,21). கர்த்தரது ஜெபத்தில் உள்ள, ''உமது நாமம் பரிசுத்தப்படுவதாக'' என்பதே நமது ஜெபங்களில் முதல் குறிப்பாயிருக்கட்டும். நம்மைத் தேவன் எங்கு வைத்திருந்தாலும், நாம் என்ன செய்தாலும், நமது நோக்கம் இதுவாகவே இருக்கட்டும். நாம் கடவுளை நமது ''இல்லத்திலும், ஊரிலும், உலகிலும்'' மகிமைப்படுத்த வேண்டும் (மத் 5:14-16). பாவமும் இருளும் நிறைந்துள்ள இவ்வுலகில் நாம் அவரது புனிதப் பெயருக்கு பிரகாசமான சான்றுகளாய் இருக்க வேண்டும். நாம் மண்ணுலகில் நடந்துகொள்ளும் விதம் விண்ணுலகில் எதிரொலிக்கிறது. ''பூவுலகில்'' நாம் செய்யும் நற்செயல்களால் மக்கள் ''மேலுலகில்'' இருக்கும் தந்தையாம் கடவுளைப் போற்றுவர் (வச 16). தமது பிதாவானவருக்குமுன் இயேசு ஏறெடுத்த பிரதான ஆசாரிய ஜெபத்தில் அவரது முதலாம் அறிக்கை எது தெரியுமா? (யோ 17). ''நான் உம்மை உலகில் மாட்சிப்படுத்தினேன்'' (வச 4).

■ இம்மண்ணுலகிற்குள் இயேசு நுழைந்தபோது தமது பிதாவானவரிடம் செய்த அர்ப்பணிப்பிலிருந்து அவர் ஒருபோதும் பின்வாங்கவில்லை. பரலோகில் அவர் கொடுத்த பிரிவுரையில் பிதாவானவரிடம் அவர் கூறியது: ''பலியையும் காணிக்கையையும் நீர் விரும்பவில்லை; ஆனால் ஓர் உடலை எனக்கு அமைத்துத் தந்தீர் ... என் கடவுளே, உமது திருவுளத்தை நிறைவேற்ற இதோ வருகின்றேன். என்னைக் குறித்துத் திருநூல் சுருளில் எழுதப்பட்டுள்ளது'' (எபி 10:5-7). மனுவுடலில் இயேசு இருந்த காலம் முழுவதும் அவர் விண்தந்தையின் விருப்பத்தையே நிறைவேற்றி வந்தார் என்பதே இங்கு பொருள். தமது உடலை எதுவும் தீட்டுப்படுத்த அவர் இடம் கொடுக்கவில்லை. தவறாது தொடர்ந்து அவர் இவ்விதம் நடந்துகொண்டதே நாம் கவனிக்கவேண்டியது. அவரது தைரியச் சாட்சியைக் கேளுங்கள்: ''என்னை அனுப்பியவருக்கு உகந்தவற்றையே *எப்பொழுதும்* செய்கிறேன்'' (யோ 8:29). மாறாக, நாமோ, சில



வேளைகளில் நல்லவர்கள், பல வேளைகளில் கெட்டவர்கள் என்றிருக்கிறோம். இயேசுவில் ''ஆம்'' என்றும் ''இல்லை'' என்றும் கிடையாது; ''ஆம்'' என்பது மட்டுமே இருந்தது. ''இறைவாக்குகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள், தேவனது மகிமைக்காக, ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கின்றன'' (2 கொரி 1:19).

இன்னொரு காரியம்: பரிசுத்தத்தைப் பொருத்தவரை முக்கியமானது, முக்கியமற்றது என்று ஆண்டவராகிய இயேசு எதையும் பிரிக்கவில்லை. ''எல்லாக்'' காரியங்களிலும் அவர் உண்மையுள்ளவராயிருந்தார் என்றெழுதுகிறார் எபிரெய நிருப ஆக்கியோன் (எபி 3:2). அதைத் தொடர்ந்து வரும் அறிவுறுத்தல்: ''தூய ஆவியார் கூறுவது: இன்று நீங்கள் அவரது குரலைக் கேட்பீர்களென்றால், பாலை நிலத்தில் சோதனை நாளன்று கிளர்ச்சியின்போது இருந்தது போல, உங்கள் இதயத்தைக் கடினப்படுத்தாதேயுங்கள்'' (வச 7,8). தமது வெளியுலகப் பணியைத் தொடங்குமுன் இயேசுவானவர் பிசாசைப் பார்த்து, ''அப்பாலே போ, சாத்தானே'' என்றார். அவர் ஒருபோதும் தமது வாழ்விலோ பணியிலோ பிசாசுக்கு இடம் கொடுக்கவில்லை. ஊழியக்காலத்தின் முடிவில் அவரால் சொல்ல முடிந்த சாட்சி: ''இதோ, இவ்வுலகின் அதிபதி வருகிறான்; அவனுக்கு என்னிடம் ஒன்றுமில்லை'' (யோ 14:30). நமது வாழ்வில் ஏதாவதொரு பகுதியில் நாம் பிசாசுக்கு இடம் கொடுத்திருக்கிறோமா? (எபே 4:27). இங்கு தவறுவதே நமது பெரும்பாலான தோல்விகளுக்குக் காரணம். ஆயி நகர்மீது இறைமக்கள் அடைந்த தோல்வி நாம் மறக்க முடியாத எச்சரிக்கை!

■ உண்மையான பரிசுத்தத்திற்குப் பிசாசானவன் கொடுக்கக்கூடிய மாற்றுக்களைக் குறித்து நாம் கவனமாயிராவிடில் பரிசுத்தத்தில் வளர்வது சாத்தியமன்று. இவற்றைக் குறித்து இயேசு நம்மைத் திட்டமாய் எச்சரித்துள்ளார். இதோ சில எடுத்துக்காட்டுகள் —

□ பரிசேயரும் யூதரனைவரும் ஆன்மீகத்துக்கடுத்த பரிசுத்தத்தைவிட (holiness) சுகாதாரத்தையடுத்த சுத்தத்திற்கே (hygiene)

அதிக முக்கியத்துவம் கொடுத்தனர். ''அடிக்கடி கைகழுவினா லொழிய'' அவர்கள் சாப்பிடமாட்டார்கள் (மாற் 7:3). கடைத்தெரு விலிருந்து வரும்போதும் குளிக்காமல் சாப்பிடமாட்டார்கள். குடங் கள், கிண்ணங்களை மட்டுமல்ல, இருக்கைகளையும் கழுவுவார்கள் (வச 4). கை கழுவாமல் இயேசுவின் சீடர் சாப்பிட்டுவிட்டார்களென அவர்கள்மீது சாடினர் (வச 2). சாப்பிடுமுன் கை கழுவுவதற்கு இயேசு எதிரானவரல்ல. இது அடிப்படைச் சுகாதாரம்தானே? ஆனால் ''உள் ளத்தில் பரிசுத்தம் என்பதற்கு மேலாக வெளிப்புறத்தில் சுத்தம்'' என்ற கோட்பாட்டையே அவர் எதிர்த்தார். அவர்களைக் கடிந்துகொண்டு அவர் சொன்னது: ''நீங்கள் இறைக்கட்டளையைத் தள்ளிவிட்டு, மனிதருடைய பாரம்பரியத்தைக் கடைப்பிடிப்பவர்களாய், கிண்ணங் களையும் செம்புகளையும் கழுவுகிறீர்கள்; மற்றும் இவ்விதப் பல சடங்குகளையும் அனுசரித்துவருகிறீர்கள் ... உங்கள் பாரம்பரியத் தைக் கடைப்பிடிக்கும்படி இறைக்கட்டளைகளைப் புறக்கணித்து விட்டீர்கள்'' (வச 8,9). இதனைத் தமது சீடருக்கு அவர் எப்படி விளக்கினாரென்று பாருங்கள்: ''வெளியேயிருந்து மனிதருக்குள்ளே செல்லும் எதுவும் அவர்களைத் தீட்டுப்படுத்த முடியாது ... அவர் களுக்கு உள்ளேயிருந்து வருவதே அவர்களைத் தீட்டுப்படுத்தும்'' (வச 18-23). விபசாரம், பேராசை, பொறாமை, செருக்கு போன்ற வையே உள்ளிலிருந்து வெளிவருபவை.

□ உலகிற்குமுன் அலங்காரமாய் ஆனால் உள்ளில் அலங்கோல மாயிருப்பதை இயேசு கண்டித்தார். அவரது கடினமான வார்த்தை களைக் கவனியுங்கள்: ''வெளிவேடக்காரரே, வேதபாரகரே, உங்க ளுக்கு ஐயோ! நீங்கள் வெள்ளையடித்த கல்லறைகளுக்கு ஒப்பான வர்கள். அவை வெளியே அழகாய்த் தோற்றமளிக்கின்றன; அவற் றின் உள்ளேயோ இறந்தோரின் எலும்புகளும் எல்லாவித அழுக்கு களும் நிறைந்துள்ளன. அவ்வாறே நீங்களும் வெளியே மக்களுக்கு நேர்மையாளராய்த் தோற்றமளிக்கிறீர்கள்; உள்ளேயோ போலித்தன மும் நெறிகேடும் நிறைந்தவர்களாய் இருக்கிறீர்கள்'' (மத் 23:27,28). நாம் நம்மைக் குறித்து என்ன நினைக்கிறோம், அல்லது பிறர் நம்மைக்



குறித்து என்ன நினைக்கிறார்கள், என்பதைவிடக் கடவுள் நம்மைக் குறித்து என்ன நினைக்கிறார் என்பதிலேயே நாம் அதிகக் கவனம் செலுத்தவேண்டும். இயேசுவானவர் தம்மைக் குறித்துத் தாமே பெருமிதம் கொள்வதில்லை என்றும், மக்களது புகழாரங்களைக் குறித்தும் பெருமை கொள்வதில்லை என்றும், விண்தந்தையின் சான் றையே முழுவதும் சார்ந்திருப்பதாகவும் கூறினார் (யோ 5:31-34). ஆம், பிரியமானவர்களே, நம்மைக் குறித்த நமது அல்லது பிறரது கணிப்பைவிட ஆண்டவரது அறிவே முக்கியம். நமது நடத்தையை இக்கருத்தே பாதிக்கவேண்டும்.

■ உலகிலிருந்து ''பிரிந்திருத்தல்'' (separation) என்றால் ''ஒதுங் கியிருத்தல்'' (seclusion) என்று பல விசுவாசிகள் நினைத்துவிட்டார் கள். எல்லாக் காரியங்களிலும் தங்களைத் தூரப்படுத்திக்கொண்டு முடிவில் தங்களைச் சுற்றி மதிலெழுப்பிவிடுகின்றனர். இயேசுவின் வாழ்க்கை முறை இதுவல்ல. ''பெருந்தீனிக்காரர், குடிகாரர், வரிக் காரருக்கும் பாவிகளுக்கும் நண்பன்'' என்றெல்லாம் அவர் பழிக்கப் பட்டார் (மத் 11:19). அவ்வளவாய் அவர் மக்களுடன் ஆசாபாசமாய்ப் பழகி, அவர்களது வைபவங்கள், விருந்துகளில் பங்கேற்று வந்தார். ''உன்னைவிட நான் யோக்கியன்'' (holier-than-thou) எனும் மனப் பான்மை கொண்டோரைக் குறித்து அவருக்குக் கவலையில்லை. ''ஞானம் மெய்யானது என்பதற்கு அதை ஏற்றுக்கொண்டோரின் செயல்களே சான்று'' என்று சுருக்கமாய்க் கூறிவிட்டார்! அதாவது, எது நிசமானது என்று நாளாவட்டத்தில் தெரிந்துவிடும்! யூத ஆடவர் வெளியிடங்களில் பெண்டிரோடு நின்று பேசமாட்டார்கள். ஆனால் இயேசுவோ அந்தச் சமாரியப் பெண்ணுடன் கிணற்றருகில் நின்று பேசத் தயங்கவில்லை (யோ 4:27). அவரது சீடரே இதைப் பார்த்த போது ஆச்சரியப்பட்டார்களாம்! பாவி என்று பெயர் பெற்றிருந்த ஒரு பெண்மணி தம்மைத் தொடவும் தமது பாதங்களை முத்தம் செய்து கொண்டேயிருக்கவும் அவர் அனுமதித்தார் (லூக் 7:37-39,45). ஆனாலும் அவர் ''பாவிகளுக்கு விலகியிருந்தார்'' என வாசிக்கிறோம் (எபி 7:26). அதாவது பாவிகளது வழிகளால் கறைபடாதவாறு

தம்மைக் காத்துக்கொண்டார்! அவர்தான் பாவிகள்மீது தாக்கம் ஏற்படுத்தினார்; பாவிகள் அவரைப் பாதிக்கவில்லை!

■ குறிப்பாக சில குடும்பங்கள்மீது இயேசுவுக்குத் தனிப் பாசம் இருக்கத்தான் செய்தது. அவற்றில் ஒன்று லாசரு மற்றும் அவரது சகோதரிகள் மரியாள், மார்த்தாள் அவர்களது குடும்பம். இம்மூன்று பிள்ளைகளும் பெற்றோரை இழந்து வாழ்ந்துகொண்டிருந்தனர் என யூகிக்கலாம். இயேசுவின் காலடிகளுக்கருகில் மரியாள் உட்கார்ந்து அவர் பேசுவதைக் கேட்பதிலேயே ஆர்வங்கொண்டிருந்தாள். ஆனால் இயேசுவின் அன்பில் களங்கம் ஏதுமில்லை. ஏனெனில், அவர் மார்த்தாளையும், மரியாளையும், லாசருவையும் ஒருங்கே நேசித்தார் என வாசிக்கிறோம் (யோ 11:5). இங்குதான் பூரணத்தின் அழகையும் அழகின் பூரணத்தையும் பார்க்கிறோம்!

■ பரிசுத்தத்தையும் சந்தோஷத்தையும் இயேசு பிரித்துப்பார்க்க வில்லை. பரிசுத்தம் அல்லது தூய்மை என்றால் அவருக்கு மகிழ்ச்சி யின்மை அல்லது மந்தம் என்று பொருள்படவில்லை. அவருக்குப் ''பரிசுத்தமே, பரவசமே!'' கீழ்க்கண்ட எடுத்துக்காட்டுகளைக் கவனியுங்கள் —

□ தமது முதலாம் அற்புதத்தை ஒரு திருமண வைபவத்தில் நிகழ்த்தி, பிந்தி வந்தோரையும் மகிழச் செய்தார்.

□ தமது சீடருக்குப் பட்டப்பெயர்கள் கொடுத்தார்: நிலையற்ற சீமோனுக்குப் ''பாறை'' எனும் அர்த்தங்கொள்ளும் கேபா என்று பெயர் கொடுத்தார் (யோ 1:42). யாக்கோபையும் யோவானையும் ''இடிமுழக்கத்தின் குமாரர்'' என்றழைத்தார் (மாற் 3:17).

□ தம்மை ஒரு மணமகன் என்றழைத்தார். மணவீட்டில் எவரையும்விட மகிழ்ச்சியாயிருப்பது மணமகன்தானே? (லூக் 5:34).

நீண்ட முகம் கொண்டு அலைந்த பரிசேயர் அவரைப் ''பாவி'' என்று அழைக்குமளவிற்குச் சென்றுவிட்டனர் (யோ 9:24,25).

■ நடைமுறைப் பரிசுத்தத்தில் தமது சீடர் வளரவேண்டுமென்ற பாரம் இயேசுவை எப்பொழுதும் அழுத்திக்கொண்டிருந்தது. அவர்கள்



தூய்மையாக்கப்படும்படி இறைவார்த்தைகளை அவர்களுக்குப் போதித்தார் (யோ 15:3). அவர்கள் இன்னும் பரிசுத்தப்படும்படி அவர் களுக்காய்த் தமது தந்தையிடம் வேண்டினார் (யோ 17:17). அவர்கள் பரிசுத்தமடையும்படித் தம்மைத்தாமே பரிசுத்தமாக்கினார் (வச 19). ''பரிசுத்தம்'' அடைவதற்கு அவரிடம் எப்பொழுது, என்ன, ''பாவம்'' இருந்தது? இல்லை, இங்கு பரிசுத்தம் (sanctify) எனும் பதம் பிரித் தெடுத்தல் (set apart) எனப் பொருள்படும். அதாவது, பாவம் நிறைந்த இவ்வுலகில் எப்படி அவர்கள் தங்களைக் கறைபடாதபடிக் காத்துக்கொள்ளவேண்டுமென்று இயேசு தமது சீடருக்குக் காண பித்தார். அவர்களுக்குமுன் அவர் நடைமுறையான முன்மாதிரியாய்த் திகழ்ந்தார். மனுவுருவில் அவர் வந்ததின் பிரதான நோக்கமே அது தானே? எபிரெய நிருப ஆக்கியோன் இதனைத் தெளிவாய்க் குறிப் பிட்டுள்ளார்: எபி 2:10-12, ''மக்கள் பலரை மாட்சியில் பங்குகொள்ள கடவுள் அழைத்துச்செல்ல விரும்பியபோது, அவர்களது மீட்பின் அதிபதியைத் துன்பங்கள் மூலம் நிறைவுள்ளவராக்கினார். இது ஏற்ற செயலே. தூய்மையாக்குகிறவர் மற்றும் தூய்மையாக்கப்படுவோர் ஆகிய அனைவருக்கும் உயிர்முதல் ஒன்றே. **இதனால்** இயேசு இவர் களைச் சகோதர சகோதரிகள் என்றழைக்க வெட்கப்படவில்லை.'' இங்கு ''துன்பங்கள்'' என்பது இயேசு எதிர்கொண்ட ''சோதனை களைக்'' குறிக்கும். ''பூரணப்படுத்தினார்'' அல்லது ''நிறைவுள்ள வராக்கினார்'' (perfected) என்றால் ''நிரூபிக்கப்பட்டார்'' (proved) என்றே பொருள்படும். எபிரெயர் 5:8,9இலும் இது விளக்கப்பட் டுள்ளது. இந்த வசனப்பகுதியிலும் ''பாடுபட்டதினால்'' என அர்த்தங் கொள்ளவேண்டும்; ''கற்றுக்கொண்டார்'' மற்றும் ''பூரணரானார்'' என்ற வார்த்தைகளும் ''நிரூபிக்கப்பட்டார்'' (proved) என்றே அர்த்தப்படுத்தப்படவேண்டும்.

நம்மைப்போல் சோதிக்கப்பட்டு, எல்லாச் சோதனைகளையும் மேற்கொண்டவராய், இயேசு நமது நித்திய இரட்சிப்பிற்குக் கார ணரும் அதிபதியும் ஆனார். எனவேதான் நமது விசுவாசத்தைத் துவக்குகிறவரும் நிறைவு செய்கிறவருமான அவர்மீது நமது கண் களைப் பதிக்கவேண்டும் (எபி 12:1,2). இங்கு நாம் செய்யவேண் டிய இரு காரியங்கள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன: முதலாவது, பரி

சுத்தமற்றவற்றையெல்லாம் ‘‘தள்ளி வைக்க’’ வேண்டும்; அடுத்தது, நம்மைப் பரிசுத்தப்படுத்துகிறவரை ‘‘நோக்கிப் பார்க்க’’ வேண்டும். விசுவாசம் மட்டுமல்ல, கீழ்ப்படிதலும் நாம் பரிசுத்தமடைய அவசிய மானவை. இதுதான் இயேசுவின் கீழ்க்கண்ட கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது: யோ 15:10, ‘‘நான் என் பிதாவுக்குக் கீழ்ப்படிகிறது போல நீங்களும் எனக்குக் கீழ்ப்படியுங்கள்.’’ ‘‘நான் உங்களுக்கு முன்மாதிரியைத் தந்துள்ளேன்; முன்மாதிரியாய் நடந்துகாட்டி யுள்ளேன்!’’

■ இயேசுவின் மண்ணுலக வாழ்வின் இறுதிக்கட்டத்தில் அவரது எதிரிகளும் அவரைக் கொன்றவர்களும்கூட அவரது தூய்மையான, நெறி நிறைந்த வாழ்க்கையைப் பாராட்டினர். பிரதான ஆச்சாரியர் களையும் மக்களையும் பார்த்துப் பிலாத்து, ‘‘இந்த மனிதனிடம் நான் ஒரு குற்றமும் காணவில்லை’’ என்றார் (லூக் 23:4). இப்படி இரு முறை சொன்னார் (வச 14). பிலாத்து தனது நியாயாசனத்தில் உட்கார்ந்திருக்கும்போது, அவரது மனைவி அவரிடம் ஆளனுப்பி, ‘‘நீர் அந்த நீதிமானை ஒன்றும் செய்யவேண்டாம்; அவர் பொருட்டு இன்று சொப்பனத்தில் வெகு பாடுபட்டேன்’’ என்று சொல்லச்சொன் னாள் (மத் 27:19). மரணத்துக்கு ஏதுவான ஒன்றையும் ஏரோதரசன் இயேசுவில் காண முடியவில்லை (லூக் 23:15). இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்ட இரு கள்ளரில் ஒருவன் அடுத்தவனைப் பார்த்து, ‘‘நாம் நியாயமாய்த் தண்டிக்கப்படுகிறோம்; நாம் செய்த வற்றிற்கு ஏற்ற தீர்ப்பை அனுபவிக்கிறோம்; இவரோ ஒரு குற்றமும் செய்யவில்லையே’’ என்றான் (வச 41). சிலுவைத் தண்டனை நிறை வேற்றப்படுவதை மேற்பார்த்த நூற்றுக்கதிபதி, ‘‘இவர் உண்மை யாகவே நேர்மையாளர்’’ என்று கூறிக் கடவுளைப் போற்றிப் புகழ்ந்தார் (வச 47).

■ திருமறையில் பரிசுத்தத்திற்கான இறுதி அழைப்பு கொடுப் பது இயேசுவே: ‘‘நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்த முள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். இதோ, சீக்கிரம் வருகிறேன்;



அவனவனுடைய செயல்களின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலாபலன் என்னோடு வருகிறது’’ (வெளி 22:11,12). இங்கு ‘‘செயல்’’ என்பது பரிசுத்தமும் நெறியும் நிறைந்த ‘‘நடக்கையைக்’’ குறிக்கும்.

நான்கு சுவிசேஷங்களையும் திரும்பத் திரும்ப வாசித்து அதி லுள்ள செய்திகளால் உங்களை நிறைத்துக்கொள்ளுங்கள். ஒவ் வொரு சூழலிலும் நீங்கள் கேட்டுக்கொள்ளவேண்டிய கேள்வி: ‘‘இயேசு இங்கு என்ன செய்திருப்பார்?’’ (What Would Jesus Do? W-W-J-D). நமது செயல்கள் யாவும் இக்கேள்வியினால் ஆளப்பட்டி ருக்குமானால், சங்கீதம் 85:13இலுள்ள திருவாக்கு நமக்கே: *‘‘நீதி* கர்த்தருக்கு முன்பாகச் சென்று, அவரது *அடிச்சுவடுகளின்* வழியிலே நம்மை நிறுத்தும்!’’ அல்லேலூயா!

■

*தூய்மை பெற நாடு; கர்த்தர் பாதமே*
*நிலைத்தவர் வார்த்தை உட்கொள் என்றுமே*
*கூடி பக்தரோடு சோர்ந்தோர் தாங்குவாய்,*
*யாவிலுமே தெய்வ தயை நாடுவாய்.*

*தூய்மை பெற நாடு; லோகக் கோஷ்டத்தில்;*
*தனித்திரு நாளும் அவர் பாதத்தில்;*
*இயேசுவைப் போலாவாய், நோக்கின் அவரை;*
*பார்ப்போர் உன்னில் காண்பார் அவர் சாயலை.*

— W. D. Longstaff, 1822-1894






# 6
# சமாதானத்தின் அடிச்சுவடுகள்
## Footsteps of Peace

பிரசங்கிகளின் வேந்தன் என்றழைக்கப்பட்ட C.H. ஸ்பர்ஜன் (1834-1892) அவர்களது ஒரு கூற்றிலிருந்து துவங்குவோம்: ''கடவுள் இன்று உங்களிடம் சொல்ல விரும்புவது என்ன என்று அறிய வேண்டுமானால், கிறிஸ்து எப்படி இருந்தார், எப்படி இருக்கிறார் எனப் படியுங்கள்!'' ஆம், நமக்குக் கடவுளின் இறுதிச் செய்தியானவர் இயேசு கிறிஸ்துவே. எபிரெயர் 1:1,2இல் அழகாய் வர்ணிக்கப் பட்டுள்ளது இதுவே: ''பல முறை, பல வகைகளில், முற்காலத்தில் இறைவாக்கினர் (தீர்க்கதரிசிகள்) வழியாக நமது மூதாதையரிடம் பேசிய கடவுள் **இவ்விறுதி நாட்களில்** தமது **மகன்** வழியாக நம்மிடம் பேசியுள்ளார்.''

நாம் இப்புத்தகத்தில் அடிக்கடி கூறியுள்ளபடி, இயேசுவானவர் தமது வாழ்க்கை மூலமாகவும் வார்த்தை மூலமாகவும் நம்மோடு பேசுகிறார். அவரது **உபதேசத்தை** மட்டுமே நாம் படித்தால், குற்றவுணர்வுதான் நமது பங்காகும். எடுத்துக்காட்டாக, அவரது நீண்ட மலைப்பிரசங்கத்தைக் கவனியுங்கள். ஒரு சகோதரன்மீது நியாயமற்ற கோபத்திற்கான தண்டனை நரகம்தான் என்கிறார் (மத் 5:22). ஒரு பெண்ணை இரண்டாம் முறை வேண்டுமென்றே பார்த்தால் அதுவே விபசாரம் என்கிறார் (வச 28). இதற்கு முடிவான பரிகாரமாகக் கண்ணைத் தோண்டியெடுத்துவிடச் சொல்லுகிறார் (வச 29). கூட்டிச் சொல்லுதலும் குறைத்துச் சொல்லுதலும் பிசாசுக்கடுத்தவை என்கிறார் (வச 37). நமது எதிரிகளிடம் அன்பு செலுத்துவது போதாது; அவர்களை ஆசீர்வதிக்கவும் வேண்டும் என்று கட்டளையிட்டிருக்கிறார் (வச 44). இதெல்லாம் சாத்தியம்தானா? ஊக்கமிழந்து உட்

கார்ந்துவிடுவோம் அவ்வளவுதான்! ஆனால் இயேசுவின் போதனைகளோடு அவரது **வாழ்க்கையையும்** ஆராய்ந்தால் ஊக்கமுண்டாகும்.

கிறிஸ்துவின் வார்த்தைகளையும் வாழ்க்கையையும் ஒருங்கிணைத்து சமநிலையில் நமக்குப் பரிமாறும் நான்கு சுவிசேஷங்களுக்காய்க் கடவுளைத் துதிப்போம். மார்க்கப் பக்தியில் மூழ்கிக் கிடந்த யூதருக்கென மத்தேயு தனது சுவிசேஷத்தை எழுதினார். அரசியலுக்குப் பெயர்பெற்ற ரோமருக்கென்று எழுதப்பட்டது மாற்கு சுவிசேஷம். ஞானத்தைத் தேடியலையும் கிரேக்கருக்கானது லூக்கா சுவிசேஷம். அவர்கள் தத்துவ ரீதியாகச் சிந்திப்பவர்கள். யோவான் சுவிசேஷமானது ஒவ்வொருவரும் நித்திய வாழ்வைப் பெற்றுக் கொள்வதற்காக அனைத்துலகிற்குமானது. மத்தேயு வரி வசூலிப்பவர்; மாற்கு ரோமக் குடிமகனான ஓர் யூதன்; லூக்கா ஒரு மருத்துவர்; யோவான் ஒரு மீனவர். நடைமுறைச் சாத்தியக்கூறுகளை நமக்குத் தருவதற்காய் எவ்வளவு அருமையான குழு இது!

மலைப் பிரசங்கத்தில் இயேசு திருவாய் மொழிந்த எட்டு பாக்கிய வசனங்களின் அடிப்படையில் நாம் இப்புத்தகத்தில் கிறிஸ்துவின் வாழ்க்கையை ஆராய்ந்து வருகிறோம் (மத் 5:3-10). முதலாம் மற்றும் மூன்றாம் பாக்கிய வசனங்கள் அவரது *எளிமையைக்* (poorness) குறித்துப் பேசுகின்றன. இரண்டாம் மற்றும் நான்காம் பாக்கிய வசனங்களின் அடிப்படையில் அவரது *வேட்கையின்* (passion) அடிச்சுவடுகளைக் கவனித்தோம். ஐந்தாம் பாக்கிய வசனம் அவரது *இரக்க* மனப்பான்மையைச் (pity) சுட்டிக்காட்டுகிறது. முந்திய அத்தியாயத்தில் அவரது *தூய்மையின்* (purity) அடிச்சுவடுகளை ஆறாம் பாக்கிய வசன அடிப்படையில் ஆராய்ந்தோம். இந்த அத்தியாயத்தில் அவரது *''சமாதானத்தின் அடிச்சுவடுகளை''* (peace) ஏழாம் பாக்கிய வசனத்தின் அடிப்படையில் கவனிப்போம்: ''சமாதானம் பண்ணுவோர் பாக்கியவான்கள்; அவர்கள் தேவ புத்திரர் எனப்படுவார்கள்'' (மத் 5:9).

■ இயேசுவின் பிறப்பிலிருந்தே சமாதானம் வெளிப்படுவதைக் காண்கிறோம். நம்மெல்லாருக்கும் பிடித்தமான கிறிஸ்துமஸ் வசனம்: ''நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். ஆட்சிப் பொறுப்பு அவரது தோள்மீது இருக்கும்; அவரது பெயர் அதிசயமானவர், ஆலோசனைக் கர்த்தர், வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, **சமாதானப் பிரபு** எனப்படும்'' (ஏசா 9:6). ''சமாதானப் பிரபு'' என்பதை ''அமைதியின் அரசர்'' என்றும் சொல்லலாம். திருமுழுக்கினன் யோவானது தந்தை சகரியாவின் தீர்க்கதரிசனமும் இதனைச் சுட்டிக்காட்டுகிறது. ''நமது காலடிகளைச் **சமாதானத்தின்** பாதையில்'' நடத்துவது இயேசு வந்ததின் முக்கிய நோக்கங்களில் ஒன்று (லூக் 1:79). இயேசுவின் பிறப்பை அறிவித்த விண்தூதர் கூட்டம் முழங்கியதும் இதுதானே? ''உன்னதத்தில் இருக்கும் தேவனுக்கு மகிமையும், பூவுலகில் **சமாதானமும்**, மனிதர்மீது பற்றும் உண்டாவதாக'' (லூக் 2:13,14). ''தேவனுக்கு மகிமை'' என்பதும் ''மனிதருக்குள் சமாதானம்'' என்பதும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்களாய் இங்கு காணப்படுகின்றன. கிறிஸ்தவ வாழ்வின் இரு பரிமாணங்கள் இவையே. சிலுவையின் நெடுக்கும் குறுக்குமான இரு கட்டைகள் இவற்றை முறையே சித்தரிக்கின்றன. நியாயப்பிரமாணம் முழுவதும் மற்றும் தீர்க்கதரிசிகளின் வார்த்தைகள் யாவும் இவையிரண்டிற்குள்ளேயே அடங்கியிருக்கின்றன என்றார் இயேசு (மத் 22:37-40). தனி வாழ்விலோ, குடும்ப வாழ்விலோ, சபை வாழ்விலோ சமுதாயத்திலோ ஏற்படும் அனைத்துக் குழப்பங்களுக்கும் முக்கியக் காரணம் மேற்கூறிய இரு பரிமாணங்களில் ஒன்று இருந்து அடுத்தது இல்லாதிருப்பதே.

■ பழைய ஏற்பாட்டில் அறிமுகமாகும் இரு சகோதரர் நடுவில் போராட்டம் இருந்தது; புதிய ஏற்பாட்டின் துவக்கத்திலோ இயேசுவின் திருப்பணியில் இணைந்த சகோதரர்களின் இரு ஜோடிகளைச் சந்திக்கிறோம்: பேதுருவும் அந்திரேயாவும், யாக்கோபும் யோவானும். என்னே அருமையான தொடக்கம்! தமது சீடரை இயேசு இரண்டிரண்டு பேராய் ''அனுப்பியதை'' அடிக்கடி குறிப்பிடுவோம் (லூக் 10:1). இங்கே அவர் இரண்டிரண்டு பேரைச் சீடராகும்படி ''அழைப்பதைப்'' பார்க்கிறோம். இறைமக்கள் சமாதானத்துடன் சகோதர

சகோதரிகள் எனும் உணர்வுடன் குழுக்களாய்ச் செயல்படவேண்டு மென்பது இங்கு கருத்து. எந்தக் குழுவையும் சபைப் பிரிவையும் சேர்ந்திருந்தாலும் விசுவாசிகள் அனைவரும் சகோதர சகோதரிகளே. நாம் நமது பட்டங்களினால் (titles) அல்ல, பணிகளினாலேயே (functions) அறியப்பட வேண்டும் (மத் 23:8). தந்தையாம் ஒரே தேவனது குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் நாம் என்பதை மறக்கக் கூடாது. புதிய ஏற்பாட்டில் ''சகோதரர்'' அல்லது ''சகோதரர்கள்'' எனும் பதம் எத்தனை முறை வருகிறதென்று ஒரு வேதாகமச் சொல்ல கராதியின் (Concordance) உதவியுடன் எண்ணுங்கள், ஆச்சரியப்படு வீர்கள். கிறிஸ்துவே நமது மூத்த ''சகோதரர்.'' அவரே நமது ''அண் ணன்'' (யோ 20:17; எபி 2:12).

திருச்சபையின் அமைதி காக்கப்படவேண்டுமானால் தேவனது பிள்ளைகளிடையே ''சகோதரத்துவம்'' என்பது நிலைநாட்டப்பட வேண்டும். ஒரே தேவனால் படைக்கப்பட்ட காரணத்தால், ஒரு கோணத்தில் பார்த்தால், உலகிலுள்ள யாவரும் சகோதர சகோதரி களே. எவரையும் அவமதிக்கவோ சபிக்கவோ கூடாது என்பதற்கு அப்போஸ்தலன் யாக்கோபு இந்த விவாதத்தையே முன்வைக்கிறார் (யாக் 3:9). ஐக்கிய நாடுகள் சபை (United Nations) அல்ல, உலகி லுள்ள ஒருமனப்பட்ட திருச்சபைதான் (United Church) சமாதானப் பிரபுவின் அரசாட்சியின் கீழ் சமாதானத்தை நிலவச் செய்ய முடியும்! ஆபிரகாமின் மேய்ப்பருக்கும் லோத்துவின் மேய்ப்பருக்கும் இடை யில் வாக்குவாதம் உண்டானபோது ஆபிரகாம் ஓர் எளிய தத்துவத் தைச் சொல்லிச் சண்டையைத் தீர்த்து வைத்தார்: ''நாம் **சகோதரர்**; எனவே நமக்குள் வாக்குவாதம் வேண்டாம்'' (ஆதி 13:8). எபிரெய மனிதரில் இருவர் ஒருவரோடொருவர் சண்டையிட்டுக்கொண்டி ருந்தபோதும் மோசே இதே தத்துவத்தையே அவர்களிடம் கூறிச் சவாலிட்டார்: ''மனிதரே, நீங்கள் **சகோதரராய்** இருக்கிறீர்கள்; ஒரு வருக்கொருவர் ஏன் தீங்கிழைத்துக்கொள்ளுகிறீர்கள்?'' (அப் 7:26). கெட்ட குமாரனின் மூத்த சகோதரன் இங்குதான் தவறினான். அவ னது மனநிலை தந்தையின் அன்புக்கு ஈடுகட்ட முடியவில்லை (லூக் 15:32). நமது ''சகோதரர்களுக்கு'' விரோதமான எந்தப் பாவமும் ''கிறிஸ்துவுக்கு'' எதிரானதாம் (1 கொரி 8:12).



■ மலைப் பிரசங்கத்தில் இயேசு வேறெந்தப் பொருளையும்விட சகவுறவுகள் குறித்தே அதிகம் பேசியுள்ளார். மத்தேயு 5,6,7ஆம் அத்தியாயங்களை வாசித்து இதனைக் கோர்த்துப் பாருங்கள். மாதிரிக்காக இரு வசனப்பகுதிகளை மட்டும் பார்ப்போம் —

□ மத் 5:13, ''நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாய் இருக்கிறீர்கள்.'' நமது உவர்ப்பை இழந்துவிடக்கூடாதென்று இயேசு எச்சரிக்கிறார். உவர்ப்பற்ற உப்பு என்றால் என்னவென்று மாற்கு 9:49,50இல் அவர் விளக்கியுள்ளார்: ''பலிப்பொருள் உப்பால் தூய்மையாக்கப்படுவது போல் ஒவ்வொருவரும் நெருப்பினால் தூய்மையாக்கப்படுவர். உப்பு நல்லது; ஆனால் அது உவர்ப்பற்றுப்போனால் எதைக் கொண்டு அதை உவர்ப்புள்ளதாக்குவீர்கள்? நீங்கள் உப்பின் தன்மை கொண் டிருங்கள்; ஒருவரோடொருவர் **சமாதானமாய்** வாழுங்கள்.'' அதாவது, நமது சகவுறவுகளைச் சுமூகமாய் வைத்துக்கொள்ளுவதாலேயே நமது உவர்ப்பைத் தக்க வைத்துக்கொள்ள முடியும். சகவுறவுகளில்கூட அதிமுக்கியமானது நமது வார்த்தைகள்தான். இதைக் கொலோசெயர் 4:6இல் அப்போஸ்தலன் பவுல் சுட்டிக்காட்டுகிறார்: ''உங்கள் பேச்சு எப்பொழுதும் இனியதாயும் உப்பினால் சுவையூட்டப்பட்டதாயும் இருப்பதாக! ஒவ்வொருவருக்கும் தகுந்த மறுமொழி அளிக்க நீங்கள் அறிந்திருக்கவேண்டும்.'' நமது வாயின் வார்த்தைகளைக் குறித்துப் பேசும்போதுதான் இயேசு முதலாவது ''நரகம்'' என்பதனைக் குறிப் பிட்டார்! மத் 5:22, ''தனது சகோதர சகோதரிகளிடம் சினங்கொள் கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார்; தனது சகோதரனையோ சகோதரியையோ 'முட்டாளே' என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார்; 'அறிவிலியே' என்பவர் எரிநரகத்திற்கு ஆளாவார்.'' இவ்விதம் முதல் முறையாக நரகம் குறித்துப் பேசும்வரை ஆண்டவர் மோட்சம் குறித்தே பேசிக்கொண்டிருந்தார் (வச 3,10,12,19,20). ஒப்புரவாகுதல் என்பதைப் பிரதானமாகத் திட்டுதல், பழித்தல், தூற்று தல் போன்றவற்றிற்கே வலியுறுத்தினார். ''ஆகையால் ...'' (வச 23). பிறருக்கெதிரான ''வார்த்தைகளுக்கே'' ஒப்புரவாகுதலை இயேசு வலியுறுத்தினார்; நாமோ பிறருக்கெதிரான ''செயல்களைக்'' குறித் தும் கவலைப்படுவதில்லை. ''முதலாவது ஒப்புரவாகி, பின்னர் ...'' எது முன்னுரிமை பெறவேண்டும் என்பதை மறந்துவிடாதீர்.

□ தம்பதியருக்கிடையே சமாதானம் காக்கவேண்டும் என்பதை வலியுறுத்தவே மலைப் பிரசங்கத்தில் விவாகரத்தைக் குறித்து ஆண்டவர் பேசினார் (மத் 5:31,32). மண வாழ்வில் மன வேறுபாடு களும் வாக்குவாதங்களும் வருவது இயல்பு. சமாதானமும் பொறு மையும் காக்க நாம் கற்றுக்கொள்வது மண வாழ்வு எனும் பள்ளி யிலேயே. விபசாரம் எனும் காரணத்திற்காக மண முறிப்பை இயேசு அனுமதித்தாரேயன்றி, உடனடி நிவாரணம் அதுதான் என்று சொல்ல வில்லை. தம்பதியர் மற்றும் பிள்ளைகள் நலன் கருதி குடும்பத்தில் சமாதானத்தைக் காத்துக்கொள்ள எத்தியாகமும் செய்யலாம். ஏதோ வொரு காரணம் காட்டி மனைவியைத் தள்ளிவிடலாமா என்று பரிசேயர் இயேசுவிடம் வினவியபோது, ''கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்'' என அவர் கூறிச் சமாதானமாய் வாழ வேண்டியதின் அவசியத்தை மறுபடி வலிறுத்தினார் (19:3-6). இயே சுவின் இக்கூற்று சபையிலும் சமுதாயத்திலும் தேவன் நியமித்துள்ள அனைத்துச் சகவுறவுகளுக்கும் பொருந்தும். ஆணாதிக்கம் நிறைந்த அன்றையச் சமுதாயத்தில் வாழ்ந்த சீடரின் பிரதிபலிப்பைப் பாருங் கள்: ''திருமணம் செய்துகொள்ளாமலிருப்பதே மனிதனுக்கு மேல்!'' (வச 10). ஆம், எந்த உறவிலும் நெடுங்காலம் சமாதானம் காப்பது இலகுவுமல்ல, இயலாததுமல்ல.

■ சமாதானத்தைக் குலைக்கும் எதற்கும், குறிப்பாக இன வெறிக்கு, எதிராக இயேசு குரலெழுப்பினார். யூதரல்லாதோரைத் தீட்டுள்ளவர் என்றும் தீண்டப்படாதவர் என்றும் யூதர் கருதினர். இயேசுவின் செயல்பாடுகள் பல இந்தத் தடுப்புச் சுவரைத் தகர்த்துத் தள்ளப்பட்டோரைத் தூக்கிவிடுவதற்காகவே. கீழ்க்கண்ட எடுத்துக் காட்டுகள் எவ்வளவு உன்னதமானவை, பாருங்கள் —

□ **ரோம** நூற்றுக்கதிபதி ஒருவர் தனது வேலைக்காரன் சுகம்பெற வேண்டி இயேசுவிடம் வந்தார். அதற்காய் அவரது வீட்டிற்குச் செல்ல இயேசு விரும்பியபோது, நூற்றுக்கதிபதி சொன்னது. ''நீர் வரவேண் டியதில்லை; ஒரு வார்த்தை சொன்னால் போதும்; என் வேலைக்



காரன் சுகமடைவான்.'' அவரது விசுவாசத்தைப் பாராட்டி இயேசு உடனே சொன்னது: ''**இஸ்ரவேலரிலும்** இவ்விதப் பெரிய விசு வாசத்தை நான் கண்டதில்லை!'' (மத் 8:5-10). மட்டுமல்ல, பரலோ கத்தை யூதரல்லாதோர் நிரப்புவர் என்றும் சொன்னார் (வச 11,12).

□ யூதனான இயேசு சமாரியப் பெண் ஒருவரிடம் தண்ணீர் கேட்டார். இது அவளுக்கே ஆச்சரியமாயிருந்தது. அவள் வினவியது: ''நீர் **யூதர்**; நானோ **சமாரியப் பெண்**. நீர் என்னிடம் குடிக்கத் தண்ணீர் கேட்பது எப்படி?'' (யோ 4:9). ஏனெனில் யூதர்கள் சமாரியரோடு பழகுவதில்லை. அந்தக் கிராமத்திலேயே இயேசு இரு நாள் தங்கி விட்டாராம் (வச 40). ஒரு துப்புரவுத் தொழிலாளியின் குடிசையில் ஒரு பிராமண அர்ச்சகர் உண்டு உறங்குவதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?

*இன்ப இயேசு, என் மதுரம், என் அற்புதம் நீரே;*
*விடி வெள்ளிக்குமேல் பிரகாசிக்கின்றீர்.*
*உந்தன் ரூபம் வெளி லீலியிலும் அழகுள்ளதே;*
*என் அருமையில் அருமை நீரே!*

□ நல்ல சமாரியன் கதை நமக்கு நன்றாகவே தெரியும் (லூக் 10:30-37). நம்மைப்போல் பிறரை நேசிக்கவேண்டும்; நமது கனி விரக்கம் செயலில் காட்டப்படவேண்டும்; இவைதான் இக்கதையின் படிப்பினைகள். இக்கதையில் இயேசு கொண்டுவரும் கதாபாத்தி ரங்கள் நமது கவனத்துக்குரியவர்கள். ஆசாரியனும் லேவியனும் **யூதர்கள்**. அவர்கள் குற்றுயிராய்க் கிடந்தவனைக் கண்டும் காணா மலும் சென்றுவிட்டார்கள். குற்றுயிராய்க்கிடந்தவனும் யூதனாயிருந் திருக்கவேண்டும்; ஏனெனில் அவன் எருசலேமிலிருந்துதான் எரிகோவிற்குப் பயணித்துக்கொண்டிருந்தான். இவனுக்கு உதவி செய்தவனோ யூதனல்லாத ஒரு **சமாரியன்!** இரு யூதர்களுக்கு மனிதாபிமானத்தைவிட மார்க்கப்பணிகள்தான் பெரிதாய்த் தெரிந் தன. யூதனல்லாதவனோ தனது பயணம் பிந்துவதைப் பெரிதாய் நினைக்கவில்லை; பணம் செலவழிக்கவும் தயங்கவில்லை! நல்ல

சமாரியன் சபைகள், நல்ல சமாரியன் ஆலயங்கள், நல்ல சமாரியன் ஐக்கியங்கள் என்றெல்லாம் நமக்கு உண்டு. ஆனால் இனவேற்றுமை யையும் ஜாதிச் சுவர்களையும் தாண்டிச் செல்லும் நல்ல சமாரியன் சிந்தை நமக்குண்டா?

□ இயேசுவானவர் பத்து தொழுநோயாளிகளைச் சுகமாக்கி, மோசேயின் பிரமாணத்தின்படி அவர்கள் போய்த் தங்களை ஆச்சாரி யர்களிடம் காண்பிக்கும்படிக் கூறினார். அவர்களில் ஒருவன் மட் டுமே இயேசுவுக்கு நன்றி சொல்லத் திரும்பி வந்தான். அவன் உரத்த குரலில் கடவுளைப் போற்றிப் புகழ்ந்துகொண்டு வந்து இயேசுவின் காலில் முகங்குப்புற விழுந்து அவருக்கு நன்றி சொன்னான் என்று வாசிக்கிறோம் (லூக் 17:12-16). தமது வியப்பில் இயேசு எதனைச் சுட்டிக்காட்டுகிறார், பாருங்கள்: ''சுகமடைந்தோர் பத்து பேர் அல் லவா? மற்ற ஒன்பது பேர் எங்கே? கடவுளைப் போற்றிப் புகழ **அன்னியனாகிய** உன்னைத் தவிர வேறு எவரும் திரும்பிவரக் காணோமே!'' (வச 17,18). அசாதாரண அற்புத சுகத்தைப் பெற்ற பின்னரும் நன்றிகெட்ட ஒன்பது யூதர்!

□ இவ்வித எடுத்துக்காட்டுகளை வரிசைப்படுத்துவதினால் இயேசு சொல்லாத அல்லது அவருக்குத் தோன்றாதவற்றைக் கண்டு பிடிக்க நாம் முயலவில்லை. இனவெறி அல்லது குலப் பெருமைக்கு இயேசு எவ்விதம் அப்பாற்பட்டிருந்தார் என இவையெல்லாம் தெளி வாய்க் காட்டுகின்றன. லூக்கா 4:25-27 போன்ற திருமறைப் பகுதி களிலிருந்து நமக்கு இயேசு எதனைப் போதிக்க விழைகிறார் என்று நினைக்கிறீர்கள்? ''உண்மையாக நான் உங்களுக்குச் சொல்லுகி றேன்: எலியாவின் காலத்தில் ... இஸ்ரயேலரிடையே கைம்பெண்கள் பலர் இருந்தனர்; ஆயினும் அவர்களுள் எவரிடமும் எலியா அனுப்பப் படவில்லை; **சீதோனைச்** சேர்ந்த சாரிபாத்தில் வாழ்ந்த ஒரு கைம் பெண்ணிடமே அனுப்பப்பட்டார் ... மேலும் தீர்க்கன் எலிசாவின் காலத்தில் இஸ்ரயேலரிடையே தொழுநோயாளிகள் பலர் இருந்தனர்; ஆயினும் அவர்கள் எவருக்கும் நோய் நீங்கவில்லை. **சீரியாவைச்** சேர்ந்த நாகமானுக்கே நோய் நீங்கியது!'' இவையெல்லாம் யூதரல்லா



தோரின் நகர்கள், பிராந்தியங்கள். கப்பர்நகூமிலிருந்து கோராசின் நகர் இரண்டே மைல் தொலைவில் இருந்தது. எனவே கோராசினிலும் பெத்சாயிதாவிலும் யூதர் பெருவாரியாய்க் குடியிருந்தனர். இயேசு வின் மகத்தான செயல்களைக் கண்டிருந்தும் அவர்கள் அவரது செய்திக்குக் காதடைத்தனர். **தீரு** மற்றும் **சீதோன்** நகர்களில் இவ்வளவு அற்புதங்கள் நடந்திருந்தால் அந்நகர்வாசிகள் பேராவ லுடன் திருவசனத்தை ஏற்றுக்கொண்டிருந்திருப்பர் என்று இயேசு கோராசின், பெத்சாயிதாவாசிகளான யூதரைக் கடிந்துகொண்டார் (மத் 11:20-22). இறைவாக்கினர் ஏசாயாவின் புலம்பலும் இதுதான் (ரோ 10:20,21).

இங்கிலாந்தின் ஆதிக்கத்திலிருந்து இந்தியராகிய நாம் விடுதலை பெற்றுவிட்டோம்; ஆனால் இனவெறியின் ஆட்டிப்படைப்பிலிருந்து நாம் இன்னும் விடுபடவில்லையே! நாடு சுதந்திரமடைந்து 70 ஆண்டுகளாகியும் இத்தீங்கினின்று நாம் வெளிவராதது வெட்கக் கேடு! ''தேவனிடம் பாரபட்சம் இல்லை'' என்று பிரசங்கபீடங்களி லிருந்து முழங்குவது எளிது. ''எங்களிடம் பாரபட்சம் இல்லை'' என்று நாம் மார்தட்ட முடியுமா? இவ்விதப் பிரிவினைச் சுவர்களை நாம் தகர்த்தெறியாவிடில் சமாதானப் பிரபுவாகிய இயேசுவின் அடிச் சுவடுகளைப் பின்பற்றுவது எப்படி?

■ ஒவ்வொரு ''குடும்பத்திலும்'' சமாதானம் நிலவவேண்டு மென்று இயேசுவுக்கு ஆழ்ந்த கரிசனை இருந்தது. ஆபிரகாமைத் தேவன் அழைத்தபோது அவனுக்குக் கொடுக்கப்பட்ட வாக்கு உலகிலுள்ள ''குடும்பங்கள்'' அனைத்திற்கும் அவர் ஆசீர்வாதமா யிருப்பார் என்பதே. தமது சீடர்களை நற்செய்தியறிவிப்புப் பணிக்கு இயேசு அனுப்பிவைத்தபோது, அவர் ஆணையிட்டது: ''நீங்கள் எந்த வீட்டிற்குள் சென்றாலும், 'இந்த வீட்டிற்கு **அமைதி** உண்டாகுக!' என முதலில் கூறுங்கள்'' (லூக் 10:5; மத் 10:12). நல்லோரா தீயோரா என நாம் கணிக்கவேண்டிய அவசியமில்லை. அவ்வீட்டிலுள்ளோர் நல்லவர்களாயிராவிட்டாலும் நாம் அவர்களுக்குச் ''சமாதானம்'' கூறி வாழ்த்தவேண்டும். இதை இயேசு தெளிவாய்ச் சொல்லிவிட்டார் (மத்

10:13; லூக் 10:6). என்னே விசாலமான இதயம்! பிரியமானவரே, நாம் எப்படியிருக்கிறோம்? சமாதானம் கூறாவிட்டாலும் சச்சரவு பண்ணாதிருந்தால் போதுமே! மற்ற குடும்பங்களின் தேவையற்ற தலையீட்டால் எத்தனைக் குடும்பங்கள், கிறிஸ்தவ வட்டாரங்களில் கூட, சின்னாபின்னமாயிருக்கின்றன! நண்பரே, எந்தக் குடும்பம் பற்றியும் துர்ச்செய்தி பரப்பாதிருங்கள். சமாதானத்தைப் பாதிக்கிற வர்களாய் அல்ல, சமாதானம் பண்ணுகிறவர்களாய் இருங்கள்! ஏற் கனவே குடும்பங்கள் நொந்துபோயிருக்கின்றன. காயங்கள்மீது உப்புக்கல் வைத்துத் தேய்க்காதீர்கள்! இன்று ஒரு குடும்பத்தைத் தாக்கிய புயல் நாளை உங்கள் குடும்பத்தின்மீது வீசலாமே, யாருக்குத் தெரியும்? சமாதானம் பண்ணுகிறவர்கள் தேவனது ''பிள்ளைகள்'' (children) என்பதைவிட அவரது ''புத்திரர்'' (sons) என்றழைக்கப் படுவர். இதைத்தான் ஆன்மீக முதிர்ச்சி என்பது.

அப்படியானால், மத்தேயு 10:34-36இன் பொருளென்ன? ''நான் உலகிற்கு அமைதி கொணர வந்தேன் என எண்ணவேண்டாம். அமைதியை அல்ல, வாளையே கொணர வந்தேன்.'' இவ்வார்த்தை களைச் சொன்னவுடன் அடுத்து, குடும்ப அங்கத்தினரிடையே ஏற்படக்கூடிய கருத்து வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டுகிறார். இவ் வசனப் பகுதியை அதின் சூழமைவிலேயே பொருள்படுத்தவேண் டும். அவர் பேசிக்கொண்டிருந்த காரியம் இறையரசின் விரிவாக்கம் பற்றியது (வச 7). அதாவது, மக்களைக் கிறிஸ்துவின் ஆளுகையாம் இறையாட்சிக்குள் கொண்டுவருதலாகும். இதற்கே எல்லாச் சமயங் களிலும் முன்னுரிமை தரப்படவேண்டுமென்று வலியுறுத்துவதற் காகவே இயேசு இவ்வார்த்தைகளைக் கூறினார். பந்தபாசவுறவுகள் ஒருபோதும் இறைப்பணிக்கு இடையூறாய் வந்துவிடக்கூடாது. நமது பெற்றோர் அல்லது பிள்ளைகளைவிட நாம் அவரில் அதிகம் அன்பு செலுத்தவேண்டுமென்று இயேசு வாஞ்சிக்கிறார் (வச 37).

இறையரசுக்கடுத்தவையே நமது வாழ்வில் முதலிடம் பெற வேண்டும். இல்லையேல் சந்தோஷம் எங்கே, சமாதானம் எங்கே? இதோ இதைக் குறித்து அப்போஸ்தலன் பவுலின் வார்த்தைகள்:



''தேவனுடைய இராஜ்யம் புசிப்பும், குடிப்பும் அல்ல; அது நீதியும், **சமாதானமும்**, பரிசுத்த ஆவியினால் உண்டாகும் சந்தோஷமுமாய் இருக்கிறது'' (ரோ 14:17). புசித்தல் மற்றும் குடித்தல் என்பவை இவ் வுலக வாழ்வை அடுத்தவை. நீதி, சமாதானம், மகிழ்ச்சி ஆகியவை ஆன்மீகக் காரியங்கள். குடும்பப் பிணைப்புகள் முக்கியந்தான்; ஆனால் அவை இறையரசுக்கடுத்த காரியங்களைவிட முக்கியமல்ல. மிஷனரி அழைப்புக்குக் கீழ்ப்படிய முடியாதபடி எத்தனை பெற்றோ ரும் உறவினரும் வாலிபர் நங்கையர்க்குத் தடங்கலாய் இருக்கின்றனர் தெரியுமா? தேவனுக்குக் கீழ்ப்படியாத நிலையில் காணப்படும் அமைதியும் சமாதானமும் போலியானவை. பிரிய பெற்றோரே, தேவ னுக்குக் கீழ்ப்படிவதற்கு உங்கள் பிள்ளைகளைத் தடுக்காதிருங்கள்! பிரிய வாலிபர் நங்கையரே, உங்கள் பெற்றோரைப் பிரியப்படுத்த எண்ணித் தேவனுக்குக் கீழ்ப்படியத் தவறிவிடாதீர்கள்! முழுநேரத் திருப்பணிக்காய் எனது வேலையை ராஜினாமா செய்ய நான் எனது விதவைத் தாயிடமோ, மாமனார் மாமியாரிடமோ அனுமதி பெறக் காத்திருக்கவில்லை. எனது தீர்மானத்தை அவர்களுக்கு அறிவித் தேன், அவ்வளவுதான்!

■ குழுவெறிக்கு இயேசுவானவர் முழுக்க முழுக்க எதிரானவர். கீழ்க்கண்ட சந்தர்ப்பங்களில் அவர் எவ்வளவு பெருந்தன்மையாய் நடந்துகொண்டார் பாருங்கள் —

□ மக்களைத் திருமுழுக்காட்டுவதற்கு ''மிகுதியான தண்ணீர்'' சாலிம் ஊருக்கருகிலுள்ள அயினோன் எனுமிடத்தில் இருந்ததால் திருமுழுக்கினன் யோவானும் இயேசுவும் அங்கே திருமுழுக்கு கொடுத்துக்கொண்டிருந்தார்கள் (யோ 3:22,23). இயேசுவும் அவரது முன்னோடியும் பக்கம் பக்கமாக மக்களுக்கு ஞானஸ்நானம் கொடுத் துக்கொண்டிருந்தது எவ்வளவு அழகான காட்சியாய் இருந்திருக்கும்! போட்டி இல்லை! பொறாமை இல்லை! பதட்டம் இல்லை! இன்று இரு பாஸ்டர்மார் அல்லது பிரசங்கிமார் இவ்விதம் ஊழியத்தில் செயல்பட்டால் எவ்வளவு அருமையாயிருக்கும்! தந்திரசாலிகளான பரிசேயரோ எப்பொழுதுமே ஏதோவொரு பிரச்னையைக் கிளப்பு

வார்கள். இயேசுதாமே யாருக்கும் திருமுழுக்கு கொடுக்கவில்லை; அவரது சீடரே அதைச் செய்தனர். யோவானிடம் சென்றவர்களைவிட இயேசுவிடம் சென்றோரின் எண்ணிக்கை அதிகமாயிருந்தது. இதை ஒப்பிட்டுப் பேசி, ஒருவிதமான போட்டிக்குத் தூண்டிவிடப் பரிசேயர் எத்தனிக்கின்றனர் என்பதை உணர்ந்த இயேசு ''யூதேயாவை விட்டு மறுபடியும் கலிலேயாவுக்குச் சென்றார்'' (4:1-3). தேவையற்ற பிரச்னைக்கு இயேசு இடங்கொடுக்க விரும்பவில்லை. யோவானது ஊழியமும் அவரது ஊழியமும் ஒன்றுக்கொன்று பக்கபலமாயிருக்கவே என்பதை இயேசு அறிந்திருந்தார். ஒரு வகையில் பார்த்தால், யோவான் விதைத்தார், இயேசு அறுத்தார்! (வச 36-38). நிலத்தை யோவான் பண்படுத்தி வைத்திருந்தார் (லூக் 3:5,6). ''தேவனது இரட்சிப்பாகிய'' இயேசுவை மக்களுக்கு அறிமுகப்படுத்தவே யோவான் அப்படிச் செய்திருந்தார்! தங்கள் பெருங்கூட்டங்களில் கொடுக்கப்படும் அழைப்பிற்குக் கையுயர்த்திப் பல்லாயிரங்கள் முன்வருவதைக் குறித்துப் பெருமிதம் கொள்ளும் சுவிசேஷகர்கள் ஒன்றை மறந்துபோகக்கூடாது: முன்வருவோரில் பெரும்பாலானோர் ஏற்கனவே பலமுறை சுவிசேஷத்தைக் கேட்டவர்கள்!

□ தனது சுவிசேஷத்தின் 9ஆம் அத்தியாயத்தில் லூக்கா இன்னொரு சுவாரஸ்யமான சம்பவத்தை விவரிக்கிறார். இயேசுவின் சீடரில் ஒருவராகிய யோவான் இயேசுவிடம் ஒரு முறை அறிவித்தது: ''ஆண்டவரே, ஒருவர் உமது பெயரால் பேய் ஓட்டுவதைக் கண்டு, நாங்கள் அவரைத் தடுக்கப் பார்த்தோம்; ஏனெனில், அவர் நம்மைச் சாராதவர்'' (லூக் 9:49). இதைத்தான் குழுவெறி என்கிறோம்! யோவானுக்கு இயேசு தந்த பதில்: ''அவரைத் தடுக்கவேண்டாம்; ஏனெனில் நமக்கு எதிராக இராதவர் நமது சார்பாக இருக்கிறார்'' (வச 50). பிரியமானவர்களே, பிறரது ஊழியங்களில் மகிழ்ச்சியடையக் கற்றுக்கொள்ளுங்கள். எலும்புப் புற்றுநோயிலும் கொடியதான பொறாமைக்கு ஒருபோதும் இடங்கொடாதீர்கள் (நீதி 14:30). நாம் சேவிப்பது அறுவடையின் ஒரே ஆண்டவரைத்தானே? ஒரே களஞ்சியத்தில்தானே தானியங்களெல்லாம் சேர்க்கப்படவிருக்கின்றன?



ஆனாலும், நம்மில் அநேகரைப்போல், இயேசுவின் சீடருக்கு அவரது மனப்பான்மையைத் தங்களுடையதாக்கிக்கொள்ள முடியவில்லை. மேற்கண்டவாறு அவர்களது குழுவெறி மனப்பான்மையை இயேசு திருத்தியதையடுத்து அவர்கள் சமாரியரின் கிராமம் ஒன்றிற்குள் நுழைந்தனர். இயேசு எருசலேம் செல்ல ஏற்கனவே தீர்மானித்துவிட்டதால், சமாரியாவிலுள்ளோர் அவரை முழு மனதாய் ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் சீடர் கோபமடைந்தனர். யாக்கோபும் யோவானும் உடனே இயேசுவிடம் கேட்டது: ''ஆண்டவரே, எலியா செய்ததுபோல, வானத்திலிருந்து அக்கினி இறங்கி இவர்களை அழிக்கும்படி நாங்கள் கட்டளையிட உமக்குச் சித்தமா?'' (லூக் 9:51-54). அவர்களைக் கடிந்துகொண்டு இயேசு கொடுத்த பதில்: ''நீங்கள் இன்ன ஆவியுள்ளவர்களென்பதை அறியீர்கள்; மனிதரின் உயிரை அழிக்க அல்ல, அவர்களை இரட்சிக்கவே மனுமகன் வந்தார்'' (வச 55,56). திருவசனத்தைத் தவறாய் மேற்கோள் காட்டி எத்தனையோ முறை நாம் மக்களை அழித்துவிடுகிறோம்.

■ இயேசுவின் சமாதான அடிச்சுவடுகளில் அவரைப் பின்பற்றுவது குறித்துப் பேசும் இச்சமயத்தில், எனது உடன் பிரசங்கிமாருக்கு ஓர் ஆலோசனை தர விரும்புகிறேன். தேவனுக்காய் நீங்கள் எதையாவது சாதிக்க விரும்பினால், நீங்கள் ஒரு சமாதானப் பிரியராய் இருக்கவேண்டும். தாவீதையும் சாலொமோனையும் ஒப்பிடுவது இங்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. தாவீது தேவனது இதயத்திற்கேற்றவர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தேவாலயம் கட்ட அவரைத் தேவன் அனுமதிக்கவில்லை. தேவன் அவரிடம் சொன்னது: ''நீ மிகுதியான இரத்தத்தைச் சிந்தினாய், பெரும் போர்களை நடத்தினாய்; எனக்கு முன்பாகத் தரையில் நீ மிகுதியான இரத்தத்தைச் சிந்தியதால், என் பெயருக்கு நீ ஆலயம் கட்டவேண்டாம்'' (1 நாளா 22:8). அடுத்து அவர் சொன்னது: ''உனக்கொரு மகன் பிறப்பான்! அவன் **அமைதி** மன்னனாய் இருப்பான்! ... அவனுடைய பெயர் சாலொமோன் எனப்படும்; ஏனெனில் அவனது வாழ்நாட்களில் இஸ்ரயேலுக்கு **நிறைவாழ்வும் சமாதானமும்** அருளுவேன். அவன் என் பெயருக்கு ஆலயத்தைக் கட்டுவான்'' (வச 9,10).

''சாலொமோன்'' என்றால் ''சமாதானம்'' என்று பொருள்படும். தேவன் தனக்குக் கொடுத்த செய்தியைச் சற்றும் மாற்றாமல், மறைக் காமல், தாவீது மக்களுக்குச் சொன்னார் (28:2,3). நியாயமான கார ணங்களாயிருந்தாலும் எப்பொழுதும் சண்டைபோட்டுக்கொண்டே இராதீர்கள். பிலாத்துவிடம் இயேசு கூறிய வார்த்தைகள் நமக்கு எப் பொழுதும் நினைவிலிருக்கட்டும்: ''எனது ஆட்சி இவ்வுலக ஆட்சி போன்றதல்ல... எனவே எனது ஊழியர் போராடமாட்டார்'' (யோ 18:35,36).

■ இயேசுவானவர் வீதியில் கத்தமாட்டார், கூக்குரலிடமாட்டார் என்பதே அவரைக் குறித்த தீர்க்கதரிசனம் (மத்12:19). தம்மைத்தாமே உயர்த்தி மக்களால் புகழப்பட அவர் விரும்பார் (வச 15,16). இதுதான் உண்மையான ''வெற்றி'' (வச 20இ). ''ஆண்டவரின் பணியாளர் சண்டையிடாதவராயிருக்கவேண்டும்; அனைவரிடமும் கனிவா யிருக்கவேண்டும்'' என்று ஊழியப் பயிற்சியிலிருந்த தீமோத்தேயு வுக்கு அப்போஸ்தலன் பவுல் எழுதினார் (2 தீமோ 2:24). ''ஆட்டுக் குட்டியானவராகிய'' இயேசுவின்மீது தூயாவியானவர் ''புறாவைப் போல்'' வந்திறங்கினார் (யோ 1:29,32). பறவைகளில் மென்மை யானது புறா; மிருகங்களில் மிருதுவானது ஆட்டுக்குட்டி! பரிசுத்த ஆவியினால் நிறைந்திருப்பதாகச் சொல்லும் பலரது வாழ்க்கையில் இந்தக் கனிவும், இனிமையும் இல்லாதிருப்பது பெருந்துக்கம். இறுதிக்காலத்தில் யுத்தங்களும், போராட்டங்களும் அதிகரிக்கத்தான் செய்யும்; ஆனால் நமக்கு வரும் ஆலோசனை: ''உங்கள் **சாந்தகுணம்** எல்லா மனிதருக்கும் தெரிந்திருப்பதாக; கர்த்தர் சமீபமாயிருக்கிறார்'' (பிலி 4:5).

■ சமாதானம் என்பது போராட்டம் இல்லாத நிலை எனப் புதிய ஏற்பாட்டு வெளிச்சத்தில் பொருள்படாது, ''சமாதானத்தின்'' தேவன் தானே சாத்தானைச் சீக்கிரம் நமது கால்களுக்குக் கீழ் நசுக்கிப்போடு வார் என்றிருக்கிறது? (ரோ 16:20). இது நாம் எதிர்பார்த்திருக்கும் அதிசீக்கிர இரண்டாம் வருகையின்போது சாத்தான் முழுமையாய்த் தோல்வியடையப்போவதைக் குறிக்கும். இயேசுவின் வாழ்வில்



போராட்டம் இல்லாத நாளே இருந்ததில்லை; ஆனால் அவரது உள் ளான மனிதனில் அமைதியும் அமரிக்கையுமே நிலவியன —

□ ஒரு முறை இயேசுவும் அவரது சீடரும் பயணித்தபோது புயல் காற்று உண்டாகி அவர்களிருந்த படகிற்குள் அலைமோதியது. ''அவரோ படகின் பிற்பகுதியில் தலையணை வைத்துத் தூங்கிக் கொண்டிருந்தார்'' (மாற் 4:35-38). சீடர்கள் கலங்கிப்போய் அவரை எழுப்பி, ''போதகரே, சாகப்போகிறோமே! உமக்குக் கவலையில் லையா?'' என்று கேட்டனர். அவர் எழுந்து காற்றை அதட்டி, ''இரை யாதே, அமைதியாயிரு'' என்றார். உடனே காற்று அடங்கியது; மிகுந்த அமைதி உண்டாயிற்று. வெளியே புயல்; இயேசுவின் உள் ளிலோ அமைதி! கிறிஸ்து நம்மோடு படகில் இருந்தால் புயலைப் பார்த்து ஏளனமாய்ச் சிரிக்கலாம்! சமாதானப் பிரபுவானவர் தம்மைப் பின்பற்றுவோரைச் சமாதான மக்களாய் மாற்றுகிறார். ''அக்கரைக்குச் செல்வோம், வாருங்கள்'' என்றது அவர்தானே? (வச 35). அப்படி யிருக்க நடுக்கடலில் அமிழ்ந்துபோவோமோ?

□ ஜெபாலயத் தலைவர்களில் யவீரு என்ற பெயருடைய ஒருவர் இறக்கும் தருவாயிலிருந்த தனது 12 வயது மகளைச் சுகப்படுத்த வீட்டிற்கு வரும்படி இயேசுவை வேண்டினார். அவர் அந்த வீடு நோக்கி நடந்தபோது, அச்சிறுமி இறந்துவிட்டாள் என்ற செய்தி எட்டியது. இயேசுவோ யவீருவைப் பார்த்து, ''பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு'' என்றார் (மாற் 5:22-24,35,36). வீட்டிற்கு இயேசு வந்ததும் புலம்புவோரைப் பார்த்து, ''ஏன் இந்த அமளி? ஏன் இந்த அழுகை? சிறுமி இறக்கவில்லை, உறங்குகிறாள்'' என்றார் (வச 39). பின்னர் அவளை உயிரோடெழுப்பினார். நெருங்கியவர் இறந்துவிட்டால் அதற்காய் அழுவதற்கு இயேசு எதிரானவரல்ல. ஆனால், நிசமாகவே எல்லாம் முடிந்துபோகுமுன் முடிந்துவிட்டதாக நாம் எண்ணுவது தவறு. ''உயிர்போகவில்லை, உறங்குகிறாள்!''

□ யூதாசின் இதயத்திற்குள் பிசாசு புகுந்தான் (யோ 13:2). ஆனால் இயேசுவின் இதயத்திலிருந்து சமாதானத்தைப் பிசாசினால்

பறிக்க முடியவில்லை. அவரது பாதுகாப்பு அவரது தந்தையிடமே இருந்ததை அவர் நன்குணர்ந்திருந்தார். இந்த அறிவே அவரை அமைதியாயிருக்கச் செய்தது. இது குறித்து நாம் வாசிப்பது: ''அனைத்தையும் தமது கையில் தந்தை ஒப்படைத்துள்ளார் என்பதையும், தாம் கடவுளிடமிருந்து வந்ததுபோல அவரிடமே திரும்பிச் செல்லவேண்டும் என்பதையும் இயேசு அறிந்திருந்தார்'' (வச 3). நம்மைச் சோர்புறச் செய்யும் எத்தனைக் காரியங்கள் நமது வாழ்வில் நிகழ்கின்றன! நம்மைப் பயமுறுத்தும் எத்தனை முயற்சிகள்! இவையெல்லாம் மனுக்குலத்திற்குப் புதிதல்ல. இறைமக்களாகிய நாமும் இவற்றிற்கு விதிவிலக்கல்ல. ஆனாலும், கிறிஸ்துவுக்குள் நமது நிலை (position) என்னவென்பதை நாம் நமக்கு நினைவுபடுத்திக் கொண்டிருந்தால், அவரைப் போலவே விவரிக்க முடியாத உள்ளான சமாதானத்தை நாம் அனுபவிக்கலாம்.

□ இயேசுவை யூதாஸ் காட்டிக்கொடுத்தபோது, அடுத்து என்ன நடக்கும் என்று சுற்றி நின்றோருக்கு நன்கு தெரியும். எனவேதான் அவர்கள் கேட்ட கேள்வி: ''ஆண்டவரே, வாளால் வெட்டட்டுமா?'' (லூக் 22:47-49). இக்கேள்விக்கு இயேசு பதில் தரும் முன்னரே தலைமைக் குருவின் வேலைக்காரனின் வலது காதைப் பேதுரு வெட்டித் துண்டித்தார் (வச 50). இயேசு சொன்னது, ''இதில் நிறுத்துங்கள்.'' இப்படிச் சொல்லி அவனது காதைத் தொட்டு அவனைச் சுகமாக்கினார் (வச 51). அமைதி, அடக்கம், அமரிக்கை, இப்படி யாவும் இங்கு இயேசுவில் காணப்பட்டன. இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்ற வேண்டுமானால், நமது வாழ்வில் தேவன் அனுமதிப்பதையெல்லாம் ஏற்கவேண்டும்.

□ விசாரணையின்போது கேட்ட கேள்விகளுக்கெல்லாம் இயேசு மவுனமாயிருந்தபோது, பிலாத்து அவரிடம், ''என்னோடு பேசமாட்டாயா? உன்னை விடுதலை செய்யவும் அல்லது உன்னைச் சிலுவையில் அறையவும் எனக்கு அதிகாரம் உண்டு என்பது உனக்குத் தெரியாதா?'' என்றார் (யோ 19:9.10). அதற்கு இயேசு அளித்த நிதானமான பதில்: ''மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என் மேல் எந்த



அதிகாரமும் இராது'' (வச 11). இன்றைய மொழிநடையில் நான் இதைச் சொல்லட்டுமா? ''ஐயா, நீர் உட்கார்ந்திருப்பது தற்காலிக நாற்காலி; எனது நம்பிக்கையோ விண்ணகத்திலுள்ள நித்திய அரியணையில் அமர்ந்திருக்கும் சர்வ வல்லவர் மீதே நங்கூரமிடப்பட்டுள்ளது!'' யாருடைய ஆளுகை மற்றும் கட்டுப்பாட்டுக்குள்ளேயே எல்லாம் இருக்கிறது என்ற அறிவினாலேயே இவ்வளவு இக்கட்டான சூழலிலும் இயேசு தமது உள்ளில் அமரிக்கையாய் இருந்தார்.

நமக்கு இயேசு வாக்குப்பண்ணியது இதுதானே? ''சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன்; **எனது** சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன்'' (யோ 14:27). போராட்டம் எதுவுமின்றிச் சமாதானம் மட்டுமே நிலவுமிடத்திற்கு அவர் சென்றுள்ளதால் அவரது சொந்த சமாதானத்தையே நமக்கு ''விட்டுச்'' சென்றுள்ளார்! அது எவ்விதமான சமாதானம் என்றும் வரையறுத்தார்: ''நான் தரும் சமாதானம் உலகம் தரும் சமாதானம் போன்றதல்ல.'' நல்லது ''நடப்பதால்'' ஏற்படும் சமாதானமே இவ்வுலகு தருவது; கெட்டது ''நடந்தாலும்'' நிலைக்கும் சமாதானம்தான் இயேசு தருவது! இதைத்தான் ''பூரண'' சமாதானம் என்று திருமறை அழைக்கிறது (ஏசா 26:3). கடலின் மேல்மட்டத்தில் எவ்வளவு அலைகள் இருந்தாலும் ஆழத்தில் காணப்படும் சலசலப்பின்மையே இயேசு தரும் சமாதானத்தை விளக்கும்.

■ நமது வாழ்வில் எவ்வளவாய்ச் சமாதானத்தை விரும்பி அனுபவிக்கிறோமோ, அதே ஆசீர்வாதத்தை மற்றவர்களும் பெற்றுக்கொள்ள நாம் வாஞ்சிக்கவேண்டும், அதற்காய் உதவவேண்டும். ''சமாதானம் பண்ணுவோர் பாக்கியவான்கள்!'' சமாதானத்தைத் தம் மகத்தே குறைவில்லாது நிறைவாய்ப் பெற்றிருந்த இயேசு, ''உங்கள் இருதயம் கலங்காதிருக்கட்டும்'' என்று அடிக்கடி சொல்லித் தமது சீடரை உற்சாகப்படுத்தினார் (யோ 14:1,27; மத் 24:6). உயிர்த்தெழுந்த அவர் தமது சீடருக்குத் தரிசனம் தந்தபோது அடிக்கடி சொன்ன வாழ்த்து: ''உங்களுக்குச் **சமாதானம்** உண்டாகட்டும்.'' குழப்பம் நிறைந்த இவ்வுலகில் நம்மெல்லாரது மனதிலும் பிரதான

மான தேவை என்னவென்பதை இயேசு அறிந்திருந்தார். நமதுள்ளில் இச்சமாதானத்தை நாம் இழந்துவிட்டால் எல்லாவற்றையும் நாமே குழப்பிவிடுவோம். நமக்குள்ளும் நம்மைச் சுற்றிலும் நிறைய போராட்டங்கள் உண்டு. எத்தனையோ காரியங்களை இயேசு தமது சீடருக்குச் சொன்னதேன் என்று யோவான் 16:33இல் தெளிவு படுத்துகிறார்: ''என் வழியாய் நீங்கள் **சமாதானம்** பெறும் பொருட்டே நான் இவற்றையெல்லாம் உங்களிடம் சொன்னேன். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு; எனினும் துணிவுடனிருங்கள். நான் உலகின்மீது வெற்றிகொண்டுவிட்டேன்.'' ''இவ்வுலகிலேயே'' இருந்தாலும் ''இயேசுவில்'' நாம் நிரந்தர சமாதானம் அனுபவிக்கலாம்.

■ இயேசுவின் சீடர் நடுவிலும் அவரிடம் வந்தவர்கள் நடுவிலும் பல்வேறு வாக்குவாதங்கள் கிளம்பின. எல்லாவற்றிற்கும் அவர் எழுதப்பட்ட திருவார்த்தையைச் சுட்டிக்காட்டித் தீர்வு கண்டார். நித்தியமான சத்தியங்கள் மூலமே நிவாரணம் அருளினார். அவர் எப்பொழுதும் சமாதான காரணராகவே திகழ்ந்தார். சில எடுத்துக் காட்டுகளை இங்கு காண்போம் —

□ ஒரு முறை இயேசுவின் பன்னிரு சீடர்களும் இருவர் ஒரு குழுவாகவும், பத்துபேர் அடுத்த குழுவாகவும் இரண்டாய்ப் பிரிந்தனர். யாக்கோபு மற்றும் யோவானின் தாயார் தனது இந்த இரு மகன்களுக்கும் விண்ணரசில் இயேசுவின் இரு பக்க இருக்கைகளையும் ஒதுக்கும்படி வேண்டியதை அடுத்து இப்பிரிவினை ஏற்பட்டது (மத் 20:20,21). இதற்கு நிவாரணமாக அவர் கொடுத்த போதனை: ''உங்களுள் முதன்மையானவராக இருக்க விரும்புகிறவர் உங்களுக்குப் பணியாளராக இருக்கட்டும். இவ்வாறே மனுமகனும் தொண்டு ஏற்பதற்கு அல்ல, தொண்டு ஆற்றுவதற்கே வந்தார்'' (வச 27,28). பணியாற்ற விருப்பம், அடிபணிந்திருத்தல் மற்றும் தியாகம் போன்றவையே முதன்மையாவதற்குப் படிகள். இரு திறத்தாரிடையே மோதல்கள் தவிர்க்கப்படவேண்டுமானால் இப்பண்புகள் இன்றியமையாதவை.



□ பரிசேயர், சதுசேயருக்கும், இயேசுவுக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் அடிக்கடி எழுந்தன. இறையியல் சார்ந்த பல்வேறு கேள்விகளை அவர்கள் எழுப்பினர். ஏழு சகோதரர்களை, ஒருவர்பின் ஒருவர் இறந்தபோது, மணந்த பெண் உயிர்த்தெழுதலில் யாருக்கு மனைவி என்று சதுசேயர் இயேசுவிடம் கேட்டனர் (மத் 22:23-32). அவர்கள் உயிர்த்தெழுதலை நம்பாதபடியினால்தான் இக்கேள்வியைக் கேட்டனர் (வச 23; அப் 23:8). அவர்களுக்குப் பதில் கொடுக்க இயேசு உடனே அவர்கள் கவனத்தை இறைவார்த்தை, இறைவன்மை ஆகியவற்றிற்குத் திருப்பினார் (வச 29). இறையியல் விவாதங்களைத் தொடர்ந்து எத்தனையோ தேவ மனிதரும் திருச்சபைகளும் ஒருவருக்கொருவர் எதிரிகளாகிவிட்டனர். திருமறைக்குத் திரும்பி வந்தால் மட்டுமே சமாதானம் திரும்ப வாய்ப்புண்டு. கருத்து வேறுபாடுகளும் வியாக்கியான வித்தியாசங்களும் நம்மை எதிரிகளாக்க அவசியமில்லையே. ''இறைவார்த்தை'' அத்துடன் ''இறைவன்மை'' (Word of God & Power of God) ஆகிய இரண்டையும் சமநிலைப்படுத்தாமல், ஒன்றைவிட அடுத்ததை அளவுக்குமீறி வலியுறுத்துவது நல்ல விசுவாசிகள் நடுவிலேயே கசப்பை உண்டாக்குகிறது. பெந்தெகொஸ்தேயினர் மற்றும் பெந்தெகொஸ்தேயினரல்லாதவர் இக்குறிப்பை மனதிற்கொள்ள அன்புடன் அழைக்கிறேன்!

□ மேற்கண்ட பத்தியில் நாம் கண்டபடி, சதுசேயரை இயேசு வாயடைத்துவிட்டார் என்றறிந்த பரிசேயர் அவரைச் சோதிக்க வேறொரு கேள்வியைக் கேட்டனர்: ''போதகரே, நியாயப்பிரமாணத்தில் பிரதானமான கட்டளை எது?'' (மத் 22:34-36). இங்கும் இக்கேள்விக்குப் பதில் தர, ''நியாயப்பிரமாணம் முழுவதிலும் தீர்க்கதரிசனங்களிலும்'' எழுதியிருப்பதற்கு நேராய் இயேசு அவர்களைத் திருப்பினார் (வச 40).

ஆம், பிரியமானவர்களே, ஒருபுறச் சாய்வின்றித் திருவசனத்திற்குத் திரும்பும்போதுதான் உபதேசத்துக்கடுத்த விவாதங்களை முடிவுக்குக் கொண்டுவர முடியும். ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு

முன்னர் திருப்பாடகன் கண்டறிந்தது இதுவே: சங் 119:165, ''உமது வேதத்தை நேசிக்கிறவர்களுக்கு மிகுந்த **சமாதானம்** உண்டு; அவர்களுக்கு இடறல் (தடுமாற்றம்) இல்லை.'' ஆதி அப்போஸ்தலர் இத் தத்துவத்தையே நடைமுறைப்படுத்தினர். விருத்தசேதனம் குறித்து எழுந்த சர்ச்சையை எடுத்துக்கொள்வோம். விருத்தசேதனம் வேண்டுமென்ற யூதேயா மனிதருக்கும் பவுல், பர்னபா ஆகியோருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதமும் தர்க்கமும் கொஞ்சநஞ்சமல்ல (அப் 15:1,2). ''எழுதப்பட்டிருப்பதற்கு'' அங்கு அடிபணிதல் இருந்ததால் அந்தப் பிரச்னைக்கு எளிதாய்த் தீர்வு காணப்பட்டது (வச 15,21). பரிசுத்த ஆவியானவரது ஒன்பது வரங்கள் பட்டியலில் முதலில் வரும் ''ஞானத்தைப் போதிக்கும் வசனம்'' மற்றும் ''அறிவை உணர்த்தும் வசனம்'' ஆகிய இரண்டு வரங்களும் இங்கு நேர்த்தியாய் வெளிப்பட்டன (1 கொரி 12:8). நாமும் இதே தத்துவத்தின்படி, இதே பாணியில், செயல்பட்டால், ஆஹா, திருச்சபையில் எத்தனை உராய்வுகளையும் உடைவுகளையும் தடுத்திருக்கலாம்!

■ சமாதானம்பண்ணுவதில் இயேசு நிகரற்றவர். பிலாத்துவும் ஏரோதும் இயேசுவை ஒருவர் மாறி ஒருவர் விசாரித்தனர். தனது சுவிசேஷத்தில் லூக்கா சுவாரஸ்யமாய் ஒன்றைப் பதிவுசெய்கிறார்: லூக்கா 23:12, ''அதுவரை ஒருவருக்கொருவர் பகைவராய் இருந்த ஏரோதும் பிலாத்துவும் அன்று நண்பர்களாயினர்!'' ஆம், திருச்சபைக்கு உள்ளேயும் வெளியேயும் இருப்போர் நடுவில் நாம் சமாதானம் கொண்டுவரவேண்டும். ''பூமிக்கு'' உப்பாகவும் ''உலகிற்கு'' வெளிச்சமாகவுந்தானே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்? என்றும், எங்கும், நான் ஒரு பிரச்னையாய் அல்ல, தீர்வாய் இருக்கவேண்டும்.

சமாதானம்பண்ணுதல் எளிதல்ல. சமாதானம் வேண்டுமென்று உலகம் பேசும், ஆனால் சமாதானத்தை அது விரும்பாது. சங்கீதக்காரனின் மனச்சங்கடம் இதுவே: சங் 120:5-7, ''ஐயோ! நான் மேசேக்கில் (மத்தியப் பிரதேசத்தில்) அன்னியனாய் வாழ்ந்தபோதும், கேதாரில் (கேரளாவில்) கூடாரங்களில் தங்க நேர்ந்தபோதும், சமாதா



னத்தைக் குலைப்பவர்களோடு நான் நெடுநாள் வாழவேண்டியதாயிற்று. நான் சமாதானத்தை நாடுவேன்; அதைப்பற்றியே பேசுவேன்; ஆனால், அவர்களுக்கோ போர் ஒன்றில்தான் நாட்டம்!'' படித்தவர்களோ இல்லையோ, நாகரீகமுள்ளவர்களோ இல்லையோ, சண்டையிடுவதும் வாக்குவாதம் பண்ணுவதுமே மக்களுக்கு விருப்பம். விழுந்துபோன மனிதனை ரோமர் 3:10-18இல் திருமறை 'ஸ்கேன்' (scan) எடுத்துக் காட்டுகிறது: ''அவர்களது **தொண்டை** திறந்த பிணக்குழி; அவர்களது **நாக்கு** வஞ்சகமே பேசும். அவர்கள் **உதட்டில்** உள்ளது விரியன் பாம்பு நஞ்சு. அவர்கள் **வாயில்** சாபமும் கொடுமையும் நிறைந்துள்ளன'' (வச 13,14). இப்பகுதியின் முடிவான வரி: ''**சமாதான** வழியை அவர்கள் அறியார்'' (வச 17). ஆம், எங்கும் இன்று நிறைந்து காணப்படுவது சமாதானத்திற்கு முரணானவைதான்: வாக்குவாதம், பொறாமை, சகிப்பின்மை, எதிர்ப்பு, பிரிவினை, கொடூரம், பகை, கசப்பு, புறங்கூறுதல், துர்ச்செய்தி பரப்புதல், பயங்கரவாதம், முதலியன. நமது செய்தித்தாள்களை நிறைப்பவை இவைதானே?

சமாதானப் பிரபுவானவரைப் பின்பற்றும் நாம் ''**சமாதானம்** எனும் காலணிகளை'' அணிந்துகொண்டு முடிந்த இடங்களுக்கெல்லாம் நுழைவோம்! மகிபனோடு சமாதானமாகாதவன் மனிதரோடு சமாதானமாயிருக்க முடியாது. தொன்றுதொட்ட நீதிமொழி இதுதானே: ''ஒருவனது வழிகள் கர்த்தருக்குப் பிரியமாயிருந்தால், அவனது எதிரிகளும் அவனுடன் சமாதானமாகும்படிச் செய்வார்'' (நீதி 16:7).

*சமாதானம் ஓதும் இயேசு கிறிஸ்து*
*இவர் தாம், இவர் தாம், இவர் தாம்!*
*நம தாதிப் பிதாவின் திருப் பாலர் இவர்,*
*அனுகூலர் இவர், மனுவேலர் இவர்!*

— வேதநாயகம் சாஸ்திரியார், 1774-1864






# 7
# வேதனையின் அடிச்சுவடுகள்
## Footsteps of Pain

கிறிஸ்துவின் வாழ்க்கையைக் கவனித்துப் படிப்பது நமது வாழ்நாள் முழுவதும் மேற்கொள்ளப்படவேண்டிய பயிற்சியாகும். இதுவே அப்போஸ்தலன் பவுலுக்கு ஒரே நோக்கமாயிருந்தது. ''கிறிஸ்துவை அறியும் அறிவின் மேன்மைக்காகத்'' தனக்கிருந்த மார்க்க அந்தஸ்துக்களைத் தூக்கியெறிந்தார் (பிலி 3:7,8). தனக்கு இலாபமாயிருந்த அத்தனையையும் இழப்பாக ''எண்ணினார்'' (வச 7). இது அவரது கிறிஸ்தவ வாழ்வின் துவக்கம். அடுத்து அவர் அறிக்கையிட்டது: எனக்கு இலாபமாயிருந்த அத்தனையையும் இழப்பாக ''எண்ணிக்கொண்டிருக்கிறேன்'' (வச 8). அவர் தொடர்ந்து இப் பயிற்சியை மேற்கொண்டார் என்பது இங்கு தெளிவாகிறது. இதற்காய் எதையும் தியாகம் செய்யலாமே. இதுவே நமது வாழ்வின் பிரதான நோக்கமாய் இருக்கவேண்டும்.

ஆதி அப்போஸ்தலர்கள் இயேசுவின் வாழ்க்கையைப் படிப்பதில் அவ்வளவு ஈடுபாடு கொண்டிருந்ததால், சிறிய வழிவிலகல்களைக் கூட அவர்களால் அடையாளம் காண முடிந்தது. இக்குறிப்பை விசுவாசிகளுக்கு அவர்கள் எவ்விதம் நினைவூட்டினார்கள், பாருங்கள்: எபே 4:20, ''நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை!'' இயேசுவிடமிருந்து ''கேட்டறிந்ததையும்,'' அவரால் ''போதிக்கப்பட்டதையும்'' எப்பொழுதும் நினைவிலிருத்தவேண்டுமென்று விசுவாசிகளுக்கு அறிவுறுத்தினார்கள் (வச 21). ''இயேசுவில் மட்டுமே சத்தியம் உண்டு'' என்பதே அவர்கள் சொல்ல விரும்பிய தத்துவம். ''வேறொரு இயேசுவைக்'' குறித்துக் கவனமாயிருக்க வேண்டுமென்றும் திருச்சபையினரை எச்சரித்தனர் (2 கொரி 11:4).

ஆம், இது போலிகள் நிறைந்த உலகு. இவ்வசனப்பகுதியில் அப்போஸ்தலர்கள் கிறிஸ்துவைப்பற்றிய ''உண்மை'' (= எளிமை, simplicity) என்று குறிப்பிடுகிறார்கள் (வச 3). ஆம், பைபிளிலுள்ள இயேசு உண்மையும் எளிமையுமானவர். ''இயேசு இருக்கிறவிதமாகவே நாமும் இவ்வுலகில் இருக்கிறோம்'' என்று விசுவாசிகளுக்கு முன் ஒரு சவாலை அப்போஸ்தலர் வைத்தனர் (1 யோ 4:17இ). என்னே பாக்கியம்! என்னே பொறுப்பு!

மலைப் பிரசங்கத்திலுள்ள எட்டு பாக்கிய வசனங்களின் அடிப்படையில் இயேசுவின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து கவனிப்போம் (மத் 5:3-10). முதலாம் மற்றும் மூன்றாம் பாக்கிய வசனங்கள் அவரது *எளிமையின்* (poorness) அடிச்சுவடுகளைச் சுட்டிக்காட்டின; இரண்டாம் மற்றும் நான்காம் பாக்கிய வசனங்கள் காட்டுவது அவரது *வேட்கையின்* (passion) அடிச்சுவடுகள்; ஐந்தாம் பாக்கிய வசனம் அவரது *இரக்கத்தின்* (pity) அடிச்சுவடுகள்; ஆறாம் பாக்கிய வசனம் அவரது *தூய்மையின்* (purity) அடிச்சுவடுகள்; ஏழாம் பாக்கிய வசனம் அவரது *சமாதானத்தின்* (peace) அடிச்சுவடுகள்; எட்டாம் பாக்கிய வசனம்: ''நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பாக்கியவான்கள்; விண்ணரசு அவர்களுடையது'' (மத் 5:10). இந்த பாக்கிய வசனத்தின் அடிப்படையில் நாம் அவரது *வேதனையின்* (pain) அடிச்சுவடுகளைக் கவனிப்போம். முதல் ஏழு பாக்கிய வசனங்களும் நாம் என்ன செய்யவேண்டும் எனக் கூறுகின்றன. இறுதியான பாக்கிய வசனமோ நமக்கு என்ன செய்யப்படும் என்று சொல்லுகிறது.

''நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பாக்கியவான்கள்!'' சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதால் வரும் துன்புறுத்தலையே இது குறிக்கிறது என்று நாம் பொதுவாக நினைத்துக்கொள்ளுகிறோம். அது அப்படியல்ல. நீதிநெறியைப் ''பிரசங்கிப்பதற்காக'' அல்ல, அதனைப் ''பின்பற்றுவதற்காகவே'' இப்பாக்கியம் வாக்குப்பண்ணப்பட்டுள்ளது. உபத்திரவத்தின் நெருப்பு வீசப்படுவது முதலாவது நீதிநெறியின் ''ஊழியத்தின்'' மீதல்ல, நீதிநெறி ''வாழ்க்கையின்''



மீதே. அடுத்துள்ள இரு வசனங்கள் கூறுவதுபடி, நீதிநெறியின் ஊழியத்தினாலும் அடுத்து நமக்கு உபத்திரவம் வரும் (மத் 5:11,12).

நீதிநெறியான வாழ்க்கைக்கு உபத்திரவம் என்பதை அப்போஸ்தலர்கள் தங்கள் நிருபங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்போஸ்தலன் பேதுரு எழுதியுள்ளது: ''தீமை செய்து துன்புறுவதைவிட, கடவுளுக்குத் திருவுளமானால், நன்மை செய்து துன்புறுவதே மேல்'' (1 பேது 3:17). இயேசுவின் வார்த்தைகளை அப்போஸ்தலன் யோவான் தனது சுவிசேஷத்தில் இவ்விதம் எழுதியுள்ளார்: ''தீங்கு செய்யும் அனைவரும் ஒளியை வெறுக்கின்றனர்; தங்கள் தீச்செயல்கள் வெளியாகிவிடும் என அஞ்சி அவர்கள் ஒளியிடம் வருவதில்லை'' (யோ 3:20). இச்சுவிசேஷத்திலுள்ள இயேசுவின் இன்னொரு கூற்று: ''நீங்கள் உலகைச் சார்ந்தவர்களாக இருந்திருந்தால் தனக்குச் சொந்தமானவர்கள் என்ற முறையில் உலகு உங்களிடம் அன்பு செலுத்தியிருக்கும். நான் உங்களை உலகத்திலிருந்து தேர்ந்தெடுத்துவிட்டேன். நீங்கள் உலகைச் சார்ந்தவர்கள் அல்ல. எனவே உலகு உங்களை வெறுக்கிறது'' (15:19). தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலன் பவுல் வெளிப்படையாய் எழுதியது: ''கிறிஸ்து இயேசுவுடன் இணைந்து இறைப்பற்றுடன் வாழ விரும்புவோர் அனைவரும் இன்னலுறுவர்'' (2 தீமோ 3:12). ஆம், தேவ பக்தியுடன் வாழ ''விரும்பினாலே'' போதும், சத்துருவின் தாக்குதல் நம் பக்கம் திரும்பும்! முதல் நூற்றாண்டிலேயே நிலைமை இப்படியென்றால், மோசமடைந்துகொண்டேயிருக்கும் உலகில் இன்று எப்படியிருக்கும்? அடுத்த வசனத்திலேயே பவுல் முன்னறிவித்தது: ''தீயோர்களும் எத்தர்களும் மேலும் மேலும் கேடுறுவார்கள்; ஏமாற்றும் இவர்கள் ஏமாந்தும்போவார்கள்'' (வச 13).

இந்தப் பின்னணியுடன் நாம் இயேசுவின் அடிச்சுவடுகளைக் கவனிக்கப் பின்தொடர்வோம். நமக்கு முன்னிருக்கும் தலைப்பு: *''வேதனையின் அடிச்சுவடுகள்.''*

திருவிவிலியத்தில் பல்வேறு இடங்களில் இயேசுவைப் பின்பற்ற நமக்கு அழைப்பு வருகிறது; ஆனால் ஒரே இடத்தில்தான் அவரது **''அடிச்சுவடுகளைப்''** பின்பற்ற அறிவுறுத்தப்படுகிறோம். அது 1 பேதுரு 2:21-23இல் உள்ளது. இவ்வசனப் பகுதி பாடுகளைக் குறித்துப் பேசுகிறது. ''கிறிஸ்துவும் உங்களுக்காகத் துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்கள் அவரது *அடிச்சுவடுகளைப்* பின்பற்றுங்கள்; இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள். வன்செயல் எதுவும் அவர் செய்ததில்லை; வஞ்சனை எதுவும் அவர் வாயில் இருந்ததில்லை. பழிக்கப்பட்டபோது பதிலுக்குப் பழிக்கவில்லை; நியாயமாய்த் தீர்ப்பு வழங்குபவரிடம் தம்மை ஒப்படைத்தார்! இப்புத்தகத்தின் 131-135ஆம் பக்கங்களிலுள்ள *''நான் இயேசுவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறேனா?''* என்ற கேள்விப் பட்டியலைத் தற்பரிசோதனைக்காய்ப் பயன்படுத்துங்கள்.

கிறிஸ்துவின் வாழ்க்கை தொட்டில் முதல் தொழுமரம் வரை பாடுகளாலும் வேதனைகளாலும் நிறைந்திருந்தது—

■ ஒரு வீட்டிலோ மருத்துவமனையிலோ இயேசு வசதியாய்ப் பிறக்கவில்லை; அவருக்குக் கிடைத்தது மாட்டுத்தொழுவமே! சத்திரத்தில்கூட ஓர் அறை கிடைக்கவில்லை! அகுஸ்து ராயனுடைய ஆணைப்படி பெயர்ப் பதிவு செய்வதற்காக நாசரேத்திலிருந்து தாவீதின் ஊராகிய பெத்லகேமிற்கு நிறை கர்ப்பிணியாயிருந்த மரியாளுடன் யோசேப்பு புறப்பட்டுச் சென்றார். ''அவர்கள் அங்கிருந்தபோது மரியாளுக்குப் பேறுகாலம் வந்தது. அவர் தமது தலைமகனைப் பெற்றெடுத்தார். விடுதியில் அவர்களுக்கு இடம் கிடைக்கவில்லை. எனவே பிள்ளையைத் துணிகளில் பொதிந்து தீவனத் தொட்டியில் கிடத்தினார்'' (லூக் 2:1-7). உருக்கமான காட்சி!

■ வீடு வசதி என்று இல்லாமலேயே இயேசு பெரும்பாலும் தமது நாட்களைக் கழித்தார். ஒரு வேதபாரகன் அவரிடம் வந்து, ''போதகரே, நீர் எங்கே சென்றாலும் நான் உம்மைப் பின்பற்றுவேன்''



என்றார் (மத் 8:19). அதற்கு இயேசு கொடுத்த பதிலைக் கவனியுங்கள்: ''நரிகளுக்குக் குழிகளும், பறவைகளுக்குக் கூடுகளும் உண்டு; மனுமகனுக்கோ தலை சாய்க்கக்கூட இடமில்லை'' (வச 20). இயேசுவின் இந்த உடனடிப் பதில் அந்த வேதபாரகனைத் தனது தீர்மானத்தை மறுபரிசீலனை செய்ய வைத்தது. ஆம், இயேசுவின் வாழ்க்கை முறை கடினமாகவே இருந்தது. ஓரிடத்தில் வசதியாக இருந்தோமென்ற சொகுசு அவருக்குக் கிட்டவில்லை. இன்றும் முன்னோடி மிஷனரிகள் பலரது நிலை இதுவே. வாடகைக்கு வீடு தேடி மிஷனரிகள் தொலைவிடங்களிலுள்ள கிராமங்களுக்குச் செல்லும்போது அவர்கள் சந்தேகிக்கப்படுகின்றனர். ஆனால் சுவிசேஷத்தினால் நாம் சந்திக்க விரும்பும் மக்களோடேயே தங்கிப் பணியாற்றுவதற்கு மேலானது எதுவுமில்லை. கிறிஸ்தவர்களாகிய நாமோ வசதியான வீடுகளிலிருந்தாலும் சிறு சிறு சிரமங்களைக் குறித்து எவ்வளவு முறுமுறுக்கிறோம்! மின்வெட்டு, தண்ணீர்த் தட்டுப்பாடு, சாக்கடை அடைப்பு, கொசுத் தொல்லை, குரங்குகள் அட்டகாசம், இவை போன்றவை. எரிச்சலடைந்து புலம்பிக்கொண்டேயிருந்தால் அது ஒரு கிறிஸ்தவனின் நறுமணத்தைக் கெடுக்கும்.

■ சில இல்லங்களில் இயேசுக்கு அடிப்படையான உபசரிப்பு கூடக் கிடைக்கவில்லை. சீமோன் என்ற பரிசேயனுடைய வீட்டில் சாப்பிடுவதற்கு ஒரு முறை அவர் அழைக்கப்பட்டிருந்தார். அழைப்பை ஏற்று இயேசு அங்குச் சென்று சாப்பிட அமர்ந்தார். அப்பொழுது பெயர் கெட்ட ஒரு பெண் வீட்டிற்குள் நுழைந்து, தனது கண்ணீரால் இயேசுவின் பாதங்களைக் கழுவி, தனது கூந்தலால் துடைத்து, தொடர்ந்து முத்தமிட்டு, அவைகளின்மீது நறுமணத் தைலம் பூசினாள். இவள் செய்தது சீமோனுக்குப் பிடிக்கவில்லை. இயேசுவோ சீமோன் செய்யத் தவறியவற்றை அவருக்குச் சுட்டிக் காட்டினார். ''சீமோனே, நான் உமக்கு ஒன்று சொல்லவேண்டும் ... நான் உம் வீட்டிற்குள் வந்தபோது நீர் என் காலடிகளைக் கழுவத் தண்ணீர் தரவில்லை; இவளோ தனது கண்ணீரால் என் காலடிகளை நனைத்து அவற்றைத் தனது கூந்தலால் துடைத்தாள். நீர் எனக்கு

முத்தம் கொடுக்கவில்லை; இவளோ நான் உள்ளே வந்தது முதல் என் காலடிகளை ஓயாமல் முத்தமிட்டுக்கொண்டே இருக்கிறாள். நீர் என் தலையில் எண்ணெய் பூசவில்லை; இவளோ என் காலடிகளில் நறுமணத் தைலம் பூசினாள்'' (லூக் 7:36-47). பிரியமானவர்களே, திருமண வைபவங்களிலும் சிறப்பு விருந்துகளிலும் நன்கு வர வேற்கப்படாவிடில் நாம் எவ்வளவு புண்படுகிறோம்! ஆனால் இயேசு இவ்வித எண்ணத்தை எவ்விதம் மேற்கொண்டார் தெரியுமா? பாவத் திலிருந்து மக்களை மீட்டெடுக்கும் தமது பிரதானப் பணியிலேயே கவனம் செலுத்தினார். அப்பெண்ணைப் பார்த்து, ''உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டன ... உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது ... சமா தானத்துடன் போ'' என்றார் (வச 48-50).

■ ஊர் ஊராகச் சென்றுகொண்டு, வேளாவேளைக்கு உணவு கிடைக்காதிருந்த இயேசுவுக்கு அடிக்கடி அதிகப் பசியெடுத்தது. பழம் ஏதும் கிடைக்காதா என்று சாலையோர மரங்களை மேலே பார்ப் பார்! விருந்துகளிலும் கொண்டாட்டங்களிலும் நன்றாகவே சாப் பிட்டிருப்பார். இதைக் கவனித்த அவரது எதிரிகள் அவரைச் சாப் பாட்டு ராமன் என்றும் குடிகாரன் என்றும் குற்றம் சாட்டினர் (மத் 11:19). வாழ்க்கையின் அடிப்படை வசதிகளில் குறையில்லாதவர் களுக்குப் பசி தாகம் என்பது சரியாகப் புரியாது. வெறும் வயிற்றோடு படுக்கைக்குச் செல்வது எப்படியிருக்கும் என்பது பொருளில்லா தோருக்குத்தான் விளங்கும். செல்வந்தர் நிறைந்த இவ்வுலகில் போதுமான ஆகாரம் இல்லாததால் மடியும் சிசுக்கள்தான் எத்தனை, எத்தனை! ''உணவும் உடையும்'' மனிதனுக்கு எவ்விதம் அடிப் படைத் தேவையென இயேசு நன்குணர்ந்திருந்தார். விண்ணகத் திலும் அவர் அதை நினைத்து, தானதர்மச் சிந்தையற்றோர் செய்யத் தவறியவற்றை அவர்களுக்கு நினைப்பூட்டுவார்: ''நான் பசி யாயிருந்தேன்; நீங்கள் எனக்கு ஆகாரம் கொடுக்கவில்லை. நான் தாகமாயிருந்தேன்; நீங்கள் எனக்குப் பானம் கொடுக்கவில்லை. நான் உடையில்லாதிருந்தேன்; நீங்கள் என்னை உடுத்துவிக்கவில்லை''



(மத் 25:42). அந்தக் கஞ்சன்களுக்கு எவ்வளவு அதிர்ச்சியாயிருந் திருக்கும்! ஆபிரகாமின் நாட்களில் நடந்ததுபோல, தேவையிலி ருக்கும் அன்னியர் இன்றும் விண்தூதர்போல் நம்மிடம் வரத்தான் செய்கிறார்கள் (எபி 13:2).

■ இயேசுவின் உடல் அடக்கம்பண்ணப்பட்டதும் கடன் வாங்கப் பட்ட ஒரு கல்லறையில்தான். இதன் விபரம் மத்தேயு 27:57-60இல் உண்டு. இயேசுவுக்குச் சீடனாயிருந்த அரிமத்தியா யோசேப்பு என்பவர் தைரியமாய்ப் பிலாத்துவிடம் சென்று இயேசுவின் உடலைக் கேட்டார். பிலாத்து இசைந்தார். யோசேப்பு அதனை எடுத்துத் தூய் மையான மெல்லிய துணியால் சுற்றி, தனக்கெனப் பாறையில் வெட்டியிருந்த புதிய கல்லறையில் கொண்டுபோய் வைத்தார். இன்றையக் கிறிஸ்தவர்கள் முன்கூட்டியே தங்கள் கல்லறைகளுக்கு இடம் பதிவு செய்கிறார்களே!

■ இயேசுவின்மீது சொல்லப்பட்ட அவதூறான, அவமரியாதை யான வார்த்தைகள் கொஞ்சநஞ்சமல்ல. இதோ, சில எடுத்துக் காட்டுகள் —

□ அவரது கன்னிப் பிறப்பு மறைமுகமாய்த் தாக்கப்பட்டது. ''ஆபிரகாமே எங்கள் தந்தை'' என மார்தட்டிய யூதரைப் பார்த்து இயேசு சொன்னது: ''நீங்கள் ஆபிரகாமின் மக்கள் என்றால் அவரைப் போலச் செயல்படுவீர்கள். நீங்களோ என்னைக் கொல்ல முயலு கிறீர்கள். ஆபிரகாம் இப்படிச் செய்யவில்லையே'' (யோ 8:39,40). பிசாசைக் குறிப்பிட்டு அவர், ''நீங்கள் உங்கள் தந்தையைப்போல் செயல்படுகிறீர்கள்'' என்றார். உடனே அவர்கள் அவரைத் திருப்பி யடித்த வார்த்தைகளைப் பாருங்கள்: ''நாங்கள் வேசித்தனத்தில் பிறந்தவர்கள் அல்ல; எங்களுக்கு ஒரே தந்தை உண்டு; கடவுளே அவர்'' (வச 41). இயேசு எவ்விதம் கன்னி வயிற்றில் பிறந்தார் என்ற கேலிப்பேச்சு பல ஆண்டுகள் அப்பிராந்தியத்தில் பரவலாக இருந் திருக்கும்.

□ மேற்கூறிய தாக்குதலைத் தொடர்ந்து ஆண்டவர் அவர்களைப் பார்த்து, ''தேவனல்ல, பிசாசுதான் உங்கள் தந்தை'' என்று நேரடியாய்ச் சொல்லிவிட்டார் (யோ 8:44). அவர்களது வாய்களிலிருந்து உடனே சீறி வந்த வார்த்தைகள்: ''நீ சமாரியன், பேய் பிடித்தவன் என நாங்கள் சொல்வது சரிதானே?'' (வச 48). அவர்களது பரம்பரை குறித்து இயேசு பேசியதால் அவரை ஒரு சமாரியன் என்றனர் (வச 39). ஆபிரகாமின் குணம் அவர்களிடமில்லையென்று அவர் சொன்னதால் அவர் ஓர் யூதரே அல்ல, ஒரு சமாரியன் என்றனர்! இப்படிச் சொல்லி, அவர் யூத முறைமையின்படி நடக்கவில்லை என்று குற்றஞ்சாட்டினார்கள். பிசாசின் குணங்கள் அவர்களிடமிருக்கின்றன என்று இயேசு சொன்னதால், அவருக்குத்தான் பிசாசு பிடித்திருக்கிறது என்று பதில் கொடுத்தார்கள்! சத்தியத்தைத் தவிர வேறெதையும் பேசாத இயேசுவை இவ்வார்த்தைகள் எவ்வளவு புண்படுத்தியிருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

□ யோவான் சுவிசேஷம் 8ஆம் அத்தியாயம் இயேசுவுக்கு எதிராய்ப் பேசப்பட்ட சிறுமைப்படுத்தும் வார்த்தைகளால் நிறைந்திருக்கிறது. முடிவாக அவர் அவர்களிடம் சொன்னது: ''உங்கள் தந்தை ஆபிரகாம் நான் வரும் காலத்தைக் காண முடியும் என்பதை முன்னிட்டுப் பேருவகை கொண்டார்; அதனைக் கண்டபோது மகிழ்ச்சியும் கொண்டார்'' (யோ 8:56). அதற்கு அவர்கள் கொடுத்த பதில்: ''உனக்கு இன்னும் ஐம்பது வயதுகூட ஆகவில்லை; நீ ஆபிரகாமைக் கண்டிருக்கிறாயோ?'' (வச 57). வேறு வார்த்தைகளில் சொன்னால், ''நீ சற்றும் அனுபவம் இல்லாத நூதனன்!'' பொதுப்பணி செய்ய விரும்பும் எவரும் ஐம்பது வயதையாவது எட்டியிருக்கவேண்டும் என்பது அன்றையப் பாரம்பரியம். காலத்திற்குமுன் இயேசு பிரசங்கிக்கத் தொடங்கிவிட்டார் என்பது அவர்களது கருத்து.

யோவான் 8ஆம் அத்தியாயத்தின் இறுதி வசனம் வாசிக்கவே சங்கடமாயிருக்கிறது: ''அப்பொழுது அவர்மேல் எறியும்படிக் கற்களை எடுத்துக்கொண்டார்கள்; இயேசு மறைந்து, அவர்கள் நடுவே கடந்து, தேவாலயத்தை விட்டுப் போனார்'' (வச 59). பிதாவானவர் நியமித்த வேளைக்குமுன் மரணத்தைச் சந்திக்க அவர் தம்மை முன் நிறுத்தவில்லை.



□ ''அவர் மதிமயங்கியிருக்கிறார்'' என்று இயேசுவைக் குறித்து அவரது உறவினரே சொன்னார்கள் (மாற் 3:21). அதைத் தொடர்ந்து எருசலேமின் வேதபாரகர் சொன்னது: ''இவனைப் பெயல்செபூல் பிடித்திருக்கிறது; பேய்களின் தலைவனைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்'' (வச 22). சாதாரணப் பேய் அல்ல, தலைமைப் பேய்தான் அவரைப் பிடித்திருக்கிறது என்றனர்! இயேசுவைக் குறித்து இதிலும் கேவலமாய்ப் பேச முடியுமோ? இன்னொரு இடத்தில் இயேசு சொன்னதை நாம் இங்கு கொண்டுவரவேண்டும்: மத் 10:24,25, ''குருவைவிடச் சீடர் பெரியவரல்ல; பணியாளரும் தம் தலைவரைவிடப் பெரியவர் அல்ல ... வீட்டுத் தலைவரையே பெயல்செபூல் என அழைப்பவர்கள் வீட்டாரைப்பற்றி இன்னும் தரக்குறைவாய்ப் பேச மாட்டார்களா?'' மக்களால் இயேசு நடத்தப்பட்டதைவிட நாம் கண்ணியமாக நடத்தப்பட எதிர்பார்க்கக்கூடாது. இயேசுவே நமது குரு; நாம் அவரது சீடர். இயேசுவே நமது தலைவர்; நாம் அவரது பணியாட்கள்.

■ குற்றச்சாட்டுகளைத் தொடர்ந்து கேலி வந்தது. சிலுவையில் இயேசு தொங்கும்போது மக்களது கேலியும் கிண்டலும் உச்சத்தை எட்டின. அவரது *வரம்* கேள்வி கேட்கப்பட்டது: ''சிலர் அவர்மீது துப்பவும், அவர் முகத்தை மூடி அவரைக் கையால் குத்தி, 'தீர்க்கதரிசியே, யார் எனச் சொல்' என்றனர்'' (மாற் 14:65). அவரது *தலைமை* சவாலிடப்பட்டது: ''அவருக்குச் செந்நிற ஆடையை உடுத்தினர்; ஒரு முள் முடி பின்னி அவருக்குச் சூட்டி, 'யூதரின் அரசே, வாழ்க!' என்று அவரை வாழ்த்தத் தொடங்கினர்'' (15:17,18). அவரது *ஊழியம்* பழிக்கப்பட்டது: ''மறைநூல் அறிஞர்களுடன் தலைமைக் குருக்கள் சேர்ந்து அவரை ஏளனம் செய்து, 'பிறரை விடுவித்தான், தன்னையோ விடுவிக்க முடியவில்லை' என்று பேசிக்கொண்டனர்'' (வச 31).

கேலி செய்யப்பட்டவர்களுக்குத்தான் கேலியின் வேதனை புரியும். தங்கள் ஊழியங்களிலும் குடும்பங்களிலும் தலைவர்களும் பிரசங்கிமாரும் பிரச்னைகளை அனுபவிக்கும்போது மக்கள் எளிதில் அவர்களை ஏளனம் செய்துவிடுவர்.

■ ஒதுக்கி வைக்கப்படுவதால் வரும் வேதனையை அனுபவித்தவர்களில் இயேசுவுக்கு நிகரானவர் எவருமில்லை. முதலாவது அவரது சொந்த ஊரார்ால் அவர் புறக்கணிக்கப்பட்டார். அவரது அற்புதச் செயல்களைக் கண்ட அவர்கள் கேட்ட கேள்விகளைக் கவனியுங்கள்: ''இவர் தச்சன் அல்லவா? மரியாளின் மகன்தானே? யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவரது சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?'' (மாற் 6:3). இவ்விதம் அவர்கள் இடறலடைந்து அவரை ஏற்றுக்கொள்ளத் தயங்கினார்கள். அவர்களது அசட்டையான இக் கேள்விகளுக்கு இயேசு கொடுத்த விளக்கம்: ''சொந்தவூரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்பு பெறுவர்'' (வச 4). கட்டுவோர் ''புறக்கணித்த கல்லே'' தேவனது அநாதி தீர்மானத்தின்படிக் கட்டிடத்திற்கு ''மூலைக்கல்'' ஆயிற்று (லூக் 20:17). ஆனால், பிரியமானவர்களே, இது உடனே நடந்துவிடாது. இயேசு மூன்று நாட்கள் கல்லறையில் இருக்கவேண்டியதிருந்தது (அப் 2:36)! ஏசா 53:3இல் அவர் எவ்விதம் புறக்கணிக்கப்படுவார் என முன்னுரைக்கப்பட்டுள்ளது: ''அவர் இகழப்பட்டார்; மனிதரால் புறக்கணிக்கப்பட்டார்; வேதனையுற்ற மனிதராய் இருந்தார்; பாடனுபவித்து நலிந்தார்; காண்போர் தம் முகத்தை மூடிக்கொள்ளும் நிலையில் அவர் இருந்தார்; அவர் இழிவுபடுத்தப்பட்டார்; அவரை நாம் மதிக்கவில்லை.'' சங்கீதம் 69:7,8இலும் குறிப்பிடத்தகு தீர்க்கதரிசனம் உண்டு: ''ஆண்டவரே, உம் பொருட்டே நான் இழிவை ஏற்றேன்; வெட்கக்கேடு என் முகத்தை மூடிவிட்டது. என் சகோதரர்க்கு வேற்று மனிதன் ஆனேன்; என் தாயின் பிள்ளைகளுக்கு அயலான் ஆனேன்.'' இது கிறிஸ்துவின் புலம்பல் என்பதை அடுத்த வசனம் நமக்கு உறுதிப்படுத்துகிறது (வச 9).



இயேசுவுக்குப் பதிலாக அவரது எதிரிகள் யாரை வேண்டுமென்றார்கள், பாருங்கள்: பரபாஸ் (லூக் 23:18,19). அவன் பேர்போன கொலைகாரன். “Barabbas” என்பது “Bar-Abba” என்ற இரு சொற்களை அடக்கியது; அதின் பொருள் ''பிதா மகன்'' என்பது! பரபாஸ் எப்படிப்பட்டவன் என்று அப்போஸ்தலன் பேதுரு தனது உரையில் கூறினார். சாலொமோனின் மண்டபத்தில் குழுமியிருந்தோரிடம் அவர் சொன்னது: ''நீங்கள் தூய்மையும் நேர்மையுமானவரை மறுதலித்துக் கொலையாளியை விடுதலை செய்யுமாறு வேண்டிக் கொண்டீர்கள். வாழ்வுக்கு ஊற்றானவரை (ஜீவாதிபதியை) நீங்கள் கொன்றுவிட்டீர்கள்'' (அப் 3:14,15). நம்மைவிடச் சிறந்தவர் வேண்டும் என்பதற்காக அல்ல, நாம் வேண்டாம் என்பதற்காகவே உலகம் நம்மைப் புறக்கணிக்கிறது! இவ்விதச் சோதனையைக் கையாள்வது எங்ஙனம்? நம்மைப் பகைப்பதற்கு ''முன்னதாகவே'' இயேசுவை உலகம் பகைத்துவிட்டது என்பதை நினைவிற்கொள்வோம் (யோ 15:18). முழுவதும் தள்ளப்படும்வரை ஒருவனும் முழுமையாய் ஏற்றுக்கொள்ளப்படமாட்டான். (No man is fully accepted until he is totally rejected!). இருந்தாலும், ஏன்தான் உலகம் நம்மைப் பகைக்கிறது? அதற்குக் ''காரணம்'' கிடையாது (வச 25). அடுத்த வசனத்திலேயே பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை இயேசு நமக்கு அறிமுகம் செய்கிறார். அவர் சொன்னது: ''சத்திய ஆவியாகிய தேற்றரவாளன் வரும்போது ...'' (வச 26). தள்ளப்படுதலின் வேதனையைத் தூயாவியானவரின் தேற்றரவு (உதவி) கொண்டே மேற்கோள்ள முடியும்.

■ பூவுலகில் தமது வாழ்நாட்களில் இயேசு அனுபவிக்க வேண்டியதிருந்த இன்னொரு வேதனை ''தனிமை!'' இறைமக்கள் எவரும், குறிப்பாக தலைவர் எவரும், இந்த வேதனையைத் தவிர்க்க முடியாது. பன்னிரு சீடரை இயேசு தேர்ந்தெடுத்ததின் பிரதான நோக்கம் அவர்கள் ''அவரோடு'' இருக்கவேண்டும் என்பதே (மாற் 3:14). பிரசங்கித்தலும் குணமாக்குதலும் இதற்கு அடுத்தவையே. தமது தந்தையோடு தனித்திருக்க இயேசு விரும்பிய வேளைகள் தவிர, அவர்

எங்கும் எப்பொழுதும் தமது சீடரோடேயே நேரம் செலவழித்தார். அவர்களோடு நடந்து சென்றார். அவர்களோடு ஊழியம் செய்தார். அவர்களோடு உணவருந்தினார். அவர்களோடு படுத்துறங்கினார். ஆனாலும் அவர்களது துணை அதிகமாய்த் தேவைப்பட்டபோது அவர்கள் தவறிவிட்டனர். இது கெத்செமனே தோட்டத்தில் நடந்தது. அவர்களிடம் அவர் வேண்டியது: ''எனது உள்ளம் சாவு வருமளவுக்கு ஆழ்த்துயரம் கொண்டுள்ளது; நீங்கள் **என்னோடு** இங்கேயே தங்கி விழித்திருங்கள்'' (மத் 26:38). பிறகு அவர் சற்று அப்பால் சென்று முகங்குப்புற விழுந்து, ''என் தந்தையே, முடிந்தால் இத்துன்பக் கிண்ணம் என்னைவிட்டு அகலட்டும்; ஆனாலும் என் விருப்பப்படி அல்ல, உம் விருப்பப்படியே ஆகட்டும்'' என்று கூறி ஜெபித்தார் (வச 39). என்னே வேதனை! பின்னர் அவர் தமது சீடரிடம் வந்தபோது, அவர்கள் உறங்கிக்கொண்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார். பரிதாபமாய்ப் பேதுருவைப் பார்த்து அவர் கேட்டது: ''ஒரு மணி நேரம்கூட **என்னோடு** விழித்திருக்கக்கூடாதா?'' (வச 40). இது ஏற்கனவே ஏசாயா புத்தகத்தில் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டது தான்: ''நீதி துரத்தப்பட்டது; நேர்மை தொலைவில் நின்றது ... இதில் தலையிட ஓர் ஆள்கூட இல்லையென்று கண்டு ஆண்டவர் திகைப்புற்றார்; அவரது கையே அவருக்கு வெற்றி கொணர்ந்தது; அவரது நேர்மையே அவரைத் தாங்கி நின்றது'' (ஏசா 59:14,16). இதே கருத்து 63:5இலும் வருகிறது: ''சுற்றும் முற்றும் பார்த்தேன்; துணை புரிவார் எவருமில்லை; திகைப்புற்று நின்றேன்; தாங்குவார் யாருமில்லை; என் புயமே எனக்கு வெற்றி கொணர்ந்தது; என் சினமே எனக்கு ஊக்கமளித்தது.''

நம்மோடு ஜெபிக்கக்கூட ஒரு நபர் கிடைக்காத சூழ்நிலைகளும் வருவதுண்டு. மக்கள் நமக்குத் தேவைப்படும்போது ஏன் அவர்கள் விலகிச் செல்கிறார்களென நாம் வியக்கலாம். இதற்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஒன்று, நமது பிரச்னையுடன் தங்களை அடையாளப்படுத்த அவர்களுக்கிருக்கும் தயக்கம். அவர்களுக்குத்தான் அவர்களது பிரச்னைகளே உண்டே! இயேசு மிகுந்த ''வேதனையோடு'' ஜெபித்து முடித்துவிட்டு எழுந்து சீடரிடம் வந்தபோது அவர்கள்



''துயரத்தால்'' சோர்வுற்றுத் தூங்கிக்கொண்டிருந்தார்களாம் (லூக் 22:44,45). மறுரூப மலையிலும் நடந்தது இதுதானே? மோசேயும் எலியாவும் மகிமையில் தோன்றி இயேசுவோடு உரையாடிக்கொண்டிருக்கையில், பேதுருவும் அவரோடிருந்தவர்களும் ''தூக்கக் கலக்கமாய்'' இருந்தார்கள் (லூக் 9:30-32). இவ்வித வேளைகளில்தான் நமக்கு உதவிடப் பணிவிடை செய்யும் வான் தூதரைத் தேவன் அனுப்பி வைப்பார். கெத்செமனேயில் ''விண்ணகத்திலிருந்து ஒரு தூதன் இயேசுவுக்குத் தோன்றி அவரை வலுப்படுத்தினார்'' (லூக் 22:43). தேவதூதன் வந்தது அவரை ''விடுவிக்க'' அல்ல, தள்ளாடும் முழங்கால்களில் வேதனைப்பட்டுக்கொண்டிருந்த அவரை ''வலுப்படுத்த!'' (வச 44).

இக்கட்டான வேளைகளில் மக்கள் நம்மைக் கைவிடுவதற்கு இன்னொரு காரணம், அவர்களுக்கு வேறே நோக்கங்கள் இருக்கும். தாம் காட்டிக்கொடுக்கப்படுவதைக் குறித்து இயேசு பேசிக்கொண்டிருக்கையில் சீடர்களுள் ஒரு போட்டி நடந்துகொண்டிருந்தது (லூக் 22:21-24). அவரைக் காட்டிக்கொடுக்கப்போவது யார் என அறியத் துடிப்பது ஒரு பக்கம்; அவர்களில் யார் பெரியவன் எனும் போட்டி அடுத்த பக்கம். உங்கள் தலைவர் சொல்லொண்ணா துயரத்தின் வழியே கடந்து செல்கையில் இதெல்லாம் சாத்தியந்தானா என வியக்கிறேன். ''கலங்கிய குட்டையில் மீன் பிடிப்பது'' என்றால் இது தான்! ''அண்ணன் எப்போ சாவான்? திண்ணை எப்போ காலியாகும்?'' என்ற பழமொழிதான் இங்கு விளக்கம்!

தனிமையாய் விடப்படுவது என்பது விளையாட்டல்ல. இதனால் தூக்கமின்மை (insomnia) உண்டாகலாம். துக்கம் நெஞ்சையடைத்த வேளையில் சங்கீதக்காரனின் ஜெபத்தைக் கவனியுங்கள்: ''ஆண்டவரே, என் மன்றாட்டைக் கேட்டருளும்! என் அபயக் குரல் உம்மிடம் வருவதாக ... நான் பாலை நிலப் பறவை போலானேன்; பாழ் நிலத்தின் ஆந்தை போலானேன். நான் தூக்கமின்றித் தவிக்கிறேன்; கூரைமேல் தனிமையாய் இருக்கும் குருவிபோல் இருக்கிறேன்'' (சங் 102:1,6,7). தேவனும் நம்மைவிட்டுத் தூரமாகிவிட்டார் என்று

நினைக்கத் தோன்றும்போது தனிமையின் வேதனை உயிரை வாங்கும். கல்வாரிக் காட்சியைக் கவனிப்போம்: ''நண்பகல் வந்த போது நாடெங்கும் இருள் உண்டாயிற்று. பிற்பகல் மூன்று மணி வரை அது நீடித்தது. பிற்பகல் மூன்று மணிக்கு இயேசு, 'என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?' என்று உரக்கக் கத்தினார்'' (மாற் 15:33,34). நிசமாகவே இயேசுவைத் தேவன் கைவிட்டுவிட்டாரோ? நமக்கு அது தெரியாது. ஆனால் மனுவுடலில் இருந்த இயேசுவின் உணர்வு அதுதான். தமது தந்யையானவரை இயேசு எவ்விதம் விளித்தார் என்பதிலிருந்து எனக்கு இப்படித் தோன்றுகிறது. சிலுவையிலிருந்து இயேசு மொழிந்த முதலும் முடிவு மான வாசகங்களில், அவர் தேவனைப் ''பிதாவே'' என்றழைத்தார். இங்கேயோ அவரை ''இறைவா'' என்று கூப்பிடுகிறார்! மனிதனாய் தேவனை நோக்கிய கதறல்!

பிரியமானவரே, தனிமை எனும் பாதையில் நீங்கள் நடந்துசெல் லும்போது, அதின் வேதனை உங்களால் தாங்க முடியாதிருக்கும் போது, சங்கீதம் 77ஐ எடுத்து வாசியுங்கள். இது தாவீதின் சங்கீதம் அல்ல; இசைக்கவும் தீர்க்கதரிசனம் சொல்லவும் தாவீது நியமித் திருந்த மூன்று குடும்பங்களில் ஒருவராகிய ஆசாப் பாடியது (1 நாளா 25:1,2). மொத்தம் பன்னிரண்டு சங்கீதங்கள் இக்குடும்பத்தினரால் இயற்றப்பட்டதாகக் கருதப்படுகின்றன. இந்த 77ஆம் சங்கீதத்தில் அடுத்தடுத்து ஆறு கேள்விகள் வருகின்றன (வச 7-9). ''ஆண்டவர் நித்திய காலமாய்த் தள்ளிவிடுவாரோ? இனி ஒருபோதும் தயை செய்யாதிருப்பாரோ? அவரது கிருபை முற்றிலும் அற்றுப் போயிற்றோ? வாக்குத்தத்தமானது தலைமுறை தலைமுறைக்கும் ஒழிந்துபோயிற்றோ? தேவன் இரக்கம் செய்ய மறந்தாரோ? கோபத் தினால் தமது உருக்கமான இரக்கங்களை அடைத்துக்கொண் டாரோ?'' 9ஆம் வசன முடிவில் *''சேலா''* என்றிருக்கிறது; அதாவது, ''கேள்விகளை அடுக்கியது போதும், நிறுத்து'' என்பது பொருளோ? உடனே ஆசாப் அறிக்கையிடுவது: ''இது என் பலவீனம்!'' (வச 10). நமது வாழ்வில் பல முறை இவ்விதக் கேள்விகளை நாம் கேட்ட தில்லையா?



77ஆம் சங்கீதத்தைத் தொடர்ந்து நாம் வாசிக்கையில் 13ஆம் வசனத்தில் ஆசாப் கூறுவது: ''தேவனே, உமது வழி பரிசுத்த தலத்திலுள்ளது.'' ஆம், அங்கு காரிருள்தான் (1 இரா 8:12; 2 நாளா 6:1). ஆசரிப்புக் கூடாரத்தின் வெளிப்பிரகாரத்தில் சூரியவொளி உண்டு; உட்பிரகாரத்தில் விளக்கொளி உண்டு; மகா பரிசுத்த தலத்திலோ ஒரு ஒளியும் கிடையாது. இங்கு நாம் தரிசித்து அல்ல, விசுவாசித்துத்தான் நடக்கவேண்டும். இந்தச் சங்கீதத்தின் இறுதிப் பகுதிக்கு வரும்போது ஆசாப் அறிக்கையிடுவது: ''தேவனே, உமது வழி கடலிலும், உமது பாதைகள் திரண்ட தண்ணீர்களிலும் இருந் தன; உமது **காலடிகள்** தெரியப்படாதுபோயின'' (வச 19). ஆம், இயேசுவின் அடிச்சுவடுகளைத் தொடர்ந்து பின்பற்றும்போது, தெரியாத உலகிற்குள் செல்லும் பயணமாகத்தானிருக்கும்! ஆனாலும் அவர் நம்மை ''வழிநடத்துவார்'' (வச 20). இயேசுவின் அடிச்சுவடு கள் தெரியும்வரை அவரைப் பின்செல்லுங்கள்; அவரது அடிச்சுவடு கள் கண்ணுக்குத் தெரியவில்லையென்றால் அவரது கரத்தை இறுகப் பிடித்துக்கொள்ளுங்கள்; அவர் உங்களை முற்றுமுடிய நடத்துவார்!

**பாடுவோம் —**

*பாதை காட்டும் மா யேகோவா*
*பரதேசியான நான்*
*பலவீனன் அறிவீனன்*
*இவ்வுலோகம் காடுதான்*
*வானாகாரம் தந்து என்னைப் போஷியும்*

*துன்பம் என்னைச் சூழும் நேரம்*
*அன்பால் என்னைத் தாங்கிடுமே*
*கிருபை ரட்சகனும்மைப்*
*பற்றி நிற்கச் செய்திடும்*
*மாறில்லாத அன்பை நாடச் செய்வீரே*

— William Williams, 1717-1791

# அவரது அடிச்சுவடுகளைப் பின்பற்றுகிறேனா?

இயேசு போல வாழவேண்டும் என்ற அறிவுரை புதிய ஏற்பாட்டில் எங்கும் காணப்பட்டாலும், அவரது ''அடிச்சுவடுகளைப்'' பின் பற்றவேண்டுமென்ற குறிப்பான அழைப்பு ஒரே இடத்தில்தான் வருகிறது. அதை எழுதியது இயேசுவின் பாடுமரணத்தின்போது அவரை நெருங்கிக் கவனித்துக்கொண்டிருந்த பேதுருதான். 1 பேதுரு 2:21, ''கிறிஸ்து உங்களுக்காகத் துன்புற்று ஒரு முன்மாதிரியை வைத்துச் சென்றுள்ளார். எனவே நீங்கள் அவரது **அடிச்சுவடுகளைப்** பின்பற்றுங்கள்; இதற்காகவே அழைக்கப்பட்டுள்ளீர்கள்.'' நம்மை நாமே ஆராய்ந்து பார்க்க கீழே சில கேள்விகள் தரப்பட்டுள்ளன. அமைதியாகக் கடவுளுக்குமுன் இக்கேள்விகளை வாசித்து நம்மைச் சீர்தூக்கிப் பார்க்க சில மணிநேரம் எடுத்துக்கொள்ளுவோம்.

***1. எனது வேதனைகள் மற்றும் கவலைகளைக் குறித்து எனது நண்பர் அலட்சியமாயிருக்கும்போது நான் எரிச்சலடைகிறேனா?***

கெத்செமனே தோட்டத்தில் இயேசு இரத்த வியர்வை சிந்திக் கொண்டிருக்கும்போது அவருக்கு மிக நெருங்கிய சீடரோ தூங்கச் சென்றுவிட்டனர். திரும்பத் திரும்ப அவர் அவர்களிடம் உதவி கேட்டும் அவரது ஆன்மாவின் ஆழ்துயரத்தில் பங்கேற்க அவர்கள் தவறிவிட்டனர். அவரோ அவர்களிடம் கோபப்படவில்லை. ஜெபத்தில் விழிப்புடனிருக்கவேண்டும் என்று மட்டும் அவர்களுக்கு அறிவுறுத்திவிட்டு, ''எழுந்திருங்கள், போகலாம்'' என்று சொன்னார்! (மத் 26:36-46).

***2. ஜெபத்தில் ஏனோதானோ என்றிருக்கிறேனா? எனது தோல்விகளுக்குக் காரணம் எனது ஜெபமின்மை என்று உணராமல் பிறரையும் சூழல்களையும் குற்றஞ்சாட்டுகிறேனா?***

பழிக்கப்பட்டபோதும் துன்புறுத்தப்பட்டபோதும் தெய்வீகக் குணநலன்களைக் கைவிட்டுவிட இயேசுவிற்கு எல்லாவிதத்திலும் சோதனை வந்தது. அவரோ கெத்செமனே தோட்ட ஜெபத்திலேயே பின்னர் வரவிருந்த போராட்டத்திற்கு வெற்றி கண்டுவிட்டார்.



மாறாக, அவரது சீடரோ ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பரிதாபமாய்த் தோற்றனர். விழிப்புள்ள ஜெபமில்லாது ''ஆர்வ மனது'' மட்டுமிருந்தால் ''வலுவற்ற உடலை'' மேற்கொள்ளுவது சாத்தியமல்ல (மாற் 14:35-39).

***3. நான் விரும்பும் வகையிலேயே இறைவன் எனது வேண்டுதலுக்குப் பதில் தரவேண்டுமெனச் சாதிக்கிறேனா? ''என் விருப்பப்படியல்ல, உம் விருப்பப்படியே நடக்கட்டும், ஆண்டவரே!'' எனப் பிரார்த்திக்கப் பயப்படுகிறேனா?***

அந்தத் துன்பக் கிண்ணத்தில் பருகுவது எவ்வளவு கசப்பு என்று அறிந்திருந்த இயேசுவிற்கு அதை முழு மனதோடு ஏற்பது எளிதாயில்லை. அக்கிண்ணம் தம்மை விட்டு அகலட்டும் என்று அவர் விண்ணப்பித்தது உண்மைதான்; ஆனாலும் ஒவ்வொரு முறையும் அவரது வேண்டல், ''என் விருப்பமல்ல, உம் விருப்பமே'' என்றே முடிந்தது (மத் 26:39, 42,44). இத்தகைய அடிபணிதலில் அத்தனையாய் அகங்குளிர்ந்த தந்தையாகிய கடவுள் தமது மகனைப் பலப்படுத்த உடனே விண்ணிலிருந்து ஒரு சிறப்புத் தூதனை அனுப்பிவைத்தார் (லூக் 22:42,43).

***4. எவரது குறையாவது எனக்குத் தெரிந்தால் அதற்காய் ஜெபிப்பதற்குப் பதிலாக அதைப் பகடிபண்ணிப் பிரகடனப்படுத்துகிறேனா?***

பேதுருவின் விருப்பத்தைவிட அவரது வலுவின்மைதான் பெரிதாயிருந்தது. இயேசு அவரை முன்னெச்சரித்தது மட்டுமல்ல, அவருக்காக மனதுருகி வேண்டுதலும் செய்தார். அவரது உடனாளிகளுக்கு அவர் பின்னர் எவ்விதம் பணி செய்வார் என்பதையும் முன்னறிவித்து அவரை உற்சாகப்படுத்தினார் (லூக் 22:31-34).

***5. என்னை யாரோ காட்டிக்கொடுத்துவிட்டால் அந்நபரை வெறுக்கிறேனா? மனிதன் மனிதன்தான் என்பதையும் இறைவன் மட்டுமே 100 சதவீதம் நம்பத் தகுந்தவர் என்பதையும் மறந்துவிடுகிறேனா?***

யூதாஸ் ஒரு திருடனாயிருந்தும் நம்பிக்கையோடு இயேசு அவரிடம் பணப்பையைக் கொடுத்து வைத்திருந்தார். தனது மனமாற்றத்

திற்காய் இயேசு இவ்விதம் கொடுத்த வாய்ப்பை அவர் பயன் படுத்திக்கொள்ளவில்லை. ஆனாலும், கள்ள முத்தம் கொடுத்து இயேசுவை யூதாஸ் காட்டிக் கொடுத்தபோது அவர் அவரைத் ''தோழா'' என்றழைத்தார்! (யோ 12:4-6; மத் 26:50).

### *6. எனது விரோதிகளுக்கு எதிராக உலகுசார்ந்த போராயுதங்களைப் பயன்படுத்துகிறேனா? கடவுள் அனுமதித்ததற்கு மிஞ்சி ஒரு மனிதனும் எனக்கு விரோதமாக ஒன்றும் செய்யமுடியாது என்ற உணர்வு எனக்கு இல்லையா?*

மல்குஸ் என்ற வேலைக்காரனின் காதைத் தொட்டு இயேசு சுகப்படுத்தியது பேதுருவின் முரட்டுச் செயலைக் கண்டனம் செய்த தாகும். வாள் வைத்திருந்தாலும் அதைப் பயன்படுத்த மறுப்பதே உண்மையான ஆன்மீகம் (யோ 18:10,11; மத் 26: 51,52). பிலாத்துவைப் பார்த்து இயேசு, ''மேலிருந்து அருளப்படாவிடில் உமக்கு என்மேல் எந்த அதிகாரமும் இராது'' என்றார் (யோ 19:10,11).

### *7. என்னைப் பாதிக்கும் ஒருவருக்கு நான் புரியும் எதிர்ச்செயல் அவரை உணர்த்துவிக்கிறதா அல்லது தீர்ப்பளித்து ஒதுக்குகிறதா?*

பேதுருவைக் குறித்து இயேசு முன்னறிவித்த யாவும் நிகழ்ந்தது. இயேசுவைப் பேதுரு மறுதலித்தது மட்டுமல்ல, சபிக்கவும் செய்தார். இயேசுவை அது எவ்வளவாய்ப் புண்படுத்தியிருக்குமெனச் சிந் தித்துப்பாருங்கள்! ஆனால் அவர் பேதுருவைத் திரும்பிப் பார்த்த பார்வையிலுள்ள கனிவும் பரிவுணர்வும் அவரை நொறுக்கி மனம் நொந்து அழச் செய்தன (லூக் 22:61,62).

### *8. நான் அநியாயமாய்க் குற்றஞ்சாட்டப்படும்போது வாதாடித் தற்காப்பு செய்கிறேனா, அல்லது எனக்காகப் போராடும்படிக் கடவுளிடம் திரும்புகிறேனா?*

இயேசுவிடம் தலைமைக் குரு, ''இவர்கள் உனக்கு எதிராகக் கூறும் சான்றுக்கு மறுமொழி கூறமாட்டாயா?'' என்று கேட்டதற்கு இயேசு ஒன்றும் பேசாமல் அமைதியாயிருந்தார் (மத் 26:62,63). அதே கேள்வியைப் பிலாத்து கேட்டபோதும் இயேசு ஒரு வார்த்தைகூட



பதில் சொல்லவில்லை! (மத் 27:13,14). மாறாக, அவர் இறை யரசைக் குறித்தும் சத்தியத்தைக் குறித்தும் பிலாத்துவின்முன் அறிக்கையிட்டார் (யோ 18:36,37; 1 தீமோ 6:13).

### *9. எனது எதிரிகளைத் தண்டிக்கும்படிக் கடவுளிடம் வேண்டுகிறேனா, அல்லது அவர்கள் ஆசீர்பெற ஜெபிக்கிறேனா?*

இயேசு கலிலேயாவிலுள்ள மலையில் அருளுரையாற்றியதின்படி கல்வாரி மலைமீது நடந்துகாட்டினார் (மத் 5:44; லூக் 23:34).

### *10. சுய பரிதாபத்தில் அமிழ்ந்து பிறரது தேவைகளையும் வேதனைகளையும் மறந்துவிடுகிறேனா?*

தமக்காக ஒப்பாரி வைத்து அழுத பெண்மணிகளை இயேசு பார்த்து, ''எனக்காக அழவேண்டாம்; உங்களுக்காகவும் உங்கள் பிள் ளைகளுக்காகவும் அழுங்கள்,'' ஏனெனில் அவர்கள் சந்திக்கவேண் டிய காலங்கள் கொடியவை என்றார் (லூக் 23:27-29). உடலில் கொடிய வேதனையால் துடிதுடித்தபோதும் தம்முடன் சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் ஒருவனின் ஆன்மீகத் தேவையைச் சந்தித் தார் (லூக் 23:39-43). தமது இடத்தை நிரப்ப தமது தாயைப் பரா மரிக்க அன்னை மரியாளுக்கு ஒரு சீடனை மகனாய் அருளினார் (யோ 19:25-27).

### *11. ஜெபத்தையும் அருள் வரங்களையும் எனது ஆன்மீகத்தை வெளிக்காட்டி மக்களைக் கவருவதற்காய்ப் பயன்படுத்துகிறேனா, அல்லது இவை மூலம் கடவுளுக்குப் புகழ் நாடுகிறேனா?*

விண்தூதர் தம்மைப் பாதுகாக்கவேண்டுமென இயேசு தமது தந்தையிடம் வேண்டியிருந்தால் அவருக்காகத் தூதர்களின் பேரணித் திரள் உடனே விண்ணிலிருந்து வந்திருக்கும். அப்படியானால் அவரது பாடுகளை முன்னறிவித்த இறைவாக்கியங்கள் எப்படி நிறை வேறமுடியும்? (மத் 26:53,54). அவ்விதமே, ''சிலுவையிலிருந்து இறங்கிவா'' என்று அவரை ஏளனம் செய்தவர்களின் சவாலை ஏற்றுச் சிலுவையிலிருந்து இறங்கி வருவது இயேசுவுக்கு இயலாத காரிய மல்ல. அப்படியானால், பாவங்களுக்காய்ப் பரம தந்தையின்முன் குறை வற்ற பலி எப்படிச் செலுத்தப்பட்டிருக்க முடியும்? (மாற் 15:29-32).

### *12. ஓர் இக்கட்டு அல்லது சிக்கலைக் கடந்து நான் வெற்றியாய் வெளிவரும்போது, எனக்கு மனப்பூர்வமாய் உதவாதவர்களைக் குற்றவுணர்வடையச் செய்கிறேனா?*

கிறிஸ்துவின் சீடர் அவரைக் காட்டிக்கொடுத்தனர், மறுதலித்தனர், சபித்தனர், விட்டு ஓடினர்; ஆனால் அவரோ உயிர்த்தெழுந்த பின்னர் ஒருமுறையேனும் அவர்களது தோல்விகளை அவர்களுக்குச் சுட்டிக்காட்டவில்லை. மாறாக, முன்னதாகவே அவர் அவர்களுக்குக் கொடுத்துவிட்ட வாக்கு இதோ: ''எனக்கு ஏற்பட்ட சோதனைகளில் என்னோடுகூட இருந்தவர்கள் நீங்களே. எனவே என் ஆட்சி வரும் போது நீங்கள் என்னோடு பந்தியில் அமர்ந்து உண்டு குடிப்பீர்கள்... அரியணையில் அமர்வீர்கள்!'' (லூக் 22:28-30). அவர் அவர்களை உலகெங்கும் பணி செய்ய அனுப்பி அவரும் அவர்களோடு சென்றார் (மாற் 16:15,20).

■

*என்ன தியாகம், என் கல்வாரி நாயகா*
*என்னையும் உம்மைப்போல் மாற்றிடவோ?*

*தலையைச் சாய்த்திடவோ*
*உமக்கு ஓர் ஸ்தலமோ எங்குமில்லை*
*உம் அடிச்சுவட்டில் நான் செல்லவே*
*முன் பாதை காட்டினீரே*

*பாடுகளல்லோ உம்மை*
*மகிமையில் பூரணமாய்ச் சேர்த்ததே*
*உம்மோடு நானும் பாடு சகிப்பேன்*
*என் ஜீவனையும் வைத்தே*

*இன்பம் எனக்கினியேன் என் அருமை*
*இயேசுதான் என் பங்கல்லோ*
*நேசரின் பின்னே போகத் துணிந்தேன்*
*பாசம் என்னில் வைத்ததால்*

— சகோதரி சாராள் நவரோஜி, 1938-2014



# Jesus' Footsteps இயேசுவின் அடிச்சுவடுகள்

2011 ஆகஸ்டு 13-15இல் காரைக்குடியில் நடந்த
இயேசுவின் அடிச்சுவடுகள் முகாமில்
கொடுக்கப்பட்ட ஆறு செய்திகள்.
ஆங்கிலத்திலிருந்து தமிழ்.

(இப்புத்தகத்திலுள்ள அத்தியாயங்கள் இச்செய்திகளே)

**R. ஸ்டான்லி**

*நான்கு சுவிசேஷங்களிலுமிருந்து*
*கிறிஸ்துவின் வாழ்க்கைமீது பாடங்கள்*

தனித் தியானத்திற்கும் குழு ஆராய்ச்சிக்கும் ஏற்றது.

6 ஒளித்தட்டுகள் (DVD), 15 மணி நேரம்.
அழகிய தொகுப்பு.
விலை ரூ. 250/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com> <evangeline@stanleyonbible.com>*

**கிறிஸ்தவ வாழ்வில்**
**நிறைவாய் வளர உணவளிக்கும்**
**ஒரு தினசரித் தியான நூல் ...**



**Better Everyday**
# நாளொரு மேனி

*சகோதரன் ஸ்டான்லி நாற்பது ஆண்டுகளில்*
*எழுதியவற்றிலிருந்து தொகுக்கப்பட்டது.*

***அனைத்துச் சபையினரும் ...***
***அனைத்து வயதினரும் ...***
***அனைத்துத் துறையினரும் ...***
***விரும்பி வாசிக்கும் ஒரு புதிய படைப்பு!***

432 பக்கங்கள்; விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-
10 பிரதிகள் அல்லது கூடுதல் வாங்கினால் 30% தள்ளுபடி

*ஆங்கிலம், இந்தி, ஒரியா, கன்னடம், குஜராத்தி, பெங்காலி,*
*மராத்தி, மலையாளம், தெலுங்கு ஆகிய மொழிகளிலும் உண்டு.*

ஆசிரியராலேயே தமிழில் வாசிக்கப்பட்ட
365 தினசரித் தியானங்களும் அன்றன்றுள்ள
வேத வாசிப்புப் பகுதிகளும் ஓர் ஒலித்தட்டில் உண்டு.
விலை ரூ. 100/-; அனுப்பச் செலவு ரூ. 50/-

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>* *<evangeline@stanleyonbible.com>*





# வாலிபர் எழுப்புதல் கடிதங்கள்

**Youth Revival Letters**

**அன்றையக் கடிதங்கள் தரும்**
**ஓர் எழுப்புதல் சரித்திரம்**
**1970-1990**

***by R.** ஸ்டான்லி*

*☐ 160 இதயம் பேசும் கடிதங்கள் ☐*
*☐ 800 புகைப்படங்களும் வரைபடங்களும் ☐*
*☐ 30 எழுப்புதல் அறிக்கைகள் ☐*
*☐ 50 சவால் நிறை கட்டுரைகள் ☐*
*☐ 33 கிளர்ச்சியூட்டும் பாடல்கள் ☐*
*☐ 8 தற்பரிசோதனைக் கேள்விப் பட்டியல்கள் ☐*

1024 பக்கங்கள் ☐ உறையுடன் தடித்த அட்டை
விலை ரூ. 500/- மட்டும்; அனுப்பச் செலவு ரூ. 100/-
இந்நூல் ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

## ''பாலும் தேனும்''




**Milk**
**&**
**Honey**

ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் ஒவ்வொரு வருடாந்திர முகாமிலும்
குறிப்பிட்டதொரு வேதாகமக் கருப்பொருள் தியானிக்கப்பட்டது.
1971 முதல் இச்செய்திகளில் பெரும்பாலானவை
சகோதரன் ஸ்டான்லியால் கொடுக்கப்பட்டன.
அவ்வித ஆறு கருப்பொருட்கள் மீதான செய்திகள்
இந்நூலில் தொகுக்கப்பட்டுள்ளன —

1. ***பாலும் தேனும்*** (1982)
2. ***ஆமென், அல்லேலூயா*** (1979)
3. ***அல்பா, ஒமெகா*** (1980)
4. ***உமது இராஜ்யம் வருவதாக!*** (1980)
5. ***புதிய வானம் புதிய பூமி*** (1981)
6. ***தேவ பக்தி*** (1982)

☐ 288 பக்கங்கள் ☐ உறையுடன் தடித்த அட்டை ☐
விலை ரூ. 150/-; அனுப்பச் செலவு ரூ. 50/-
ஆங்கிலத்திலும் உண்டு.

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*



## ''ஊழியரும் மக்களும்''




**Preachers**
**&**
**People**

ஊழியரே மக்களை உருவாக்குகின்றனர்;
மக்களே ஊழியரை உருவாக்குகின்றனர்!
*''மக்களுக்கு எப்படியோ, ஆசாரியனுக்கும் அப்படியே!''* (ஓசி 4:9)
நடத்தப்படுவோர் நடத்துவோரைப் பாதிப்பர்;
நடத்துவோர் நடத்தப்படுவோரைப் பாதிப்பர் (ஏசா 24:2).
கடவுளுடைய நித்தியமான திட்டங்களை நிறைவேற்றுவதில்
கிறிஸ்தவத் தலைவர்களுக்கும் மக்களுக்கும் உள்ள
சரிசமப் பொறுப்பைச் சகோதரன் ஸ்டான்லி
இந்நூலில் எடுத்துரைக்கிறார்.

*22 நேரடிச் செய்திகள்*
*216 பக்கங்கள்*
*விலை ரூ. 80/-; அனுப்பச் செலவு ரூ. 50/-*
*ஆங்கிலத்திலும் உண்டு.*

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

# Bible Study Helps

- ***Bible Foundation***

  Brother Stanley's handwritten notes of 4 weeklong Study Programmes of 1977, 1978, 1979 & 1984, in 4 Volumes, totally 400 pages of A4 size paper, spiral bound, cased in a rexin pouch. Available in English only.

- ***Bible Answers***

  Frank Answers by R. Stanley to 100 Questions, frequently asked but rarely answered, under seven sections: Christian Life, Christian Doctrine, Holy Spirit & Gifts, Church, Christian Ministry, Sex & Marriage, Social Life. 240 Pages. Available in English and Tamil.

- ***Bible Treasures***

  200 Corrective Bible Lessons, by R. Stanley, from the beginning of Christian Life to the end of Physical Life. 832 pages, Jacketed Hardcover. Available in English, Hindi, Kannada, Tamil and Telugu.

- ***Bible Pearls***

  200 Select Sermon Outlines from Brother Stanley's 50+ years of pulpit Ministry, 1963-2016, under 14 heads, from Repentance to the Return of Christ. 1200 pages, Jacketed Hardcover. Available in English and Tamil.

*Contact us for details.*

R. STANLEY
13 Church Colony, Vellore 632 006, India
*Tel: 00 91 98437 07600, 98430 11943*
*<stanleyonbible@hotmail.com>   <evangeline@stanleyonbible.com>*



**ஆசிரியரது பிற நூல்கள்**

- ❒ அறிவூட்டும் அகவுணர்வுகள்
- ❒ ஆவியின் அபிஷேகம் பெறுவது எப்படி?
- ❒ ஆனந்த அறுவடை
- ❒ இரட்சிக்கப்படுவது எப்படி?
- ❒ இன்னும் நேர்த்தியாய்ப் பிரசங்கிப்பது எப்படி?
- ❒ இயேசுவின் பின்னே போகத் துணிந்தேன்!
- ❒ உயர்ந்த வழிகள் உயர்ந்த எண்ணங்கள்
- ❒ எதிர்நீச்சல் வாலிபர்
- ❒ எழுப்புதல் வரும்போது ...
- ❒ ஐந்தப்பம் இருமீன்
- ❒ கண் திறக்கும் கட்டுரைகள்
- ❒ காட்டுத் தேன்
- ❒ கீழ்ப்படிதலே மேல்படி!
- ❒ சமநிலைக் கிறிஸ்தவன்
- ❒ சிறு நரிகள்
- ❒ திறந்த வானம் (எபிரெயர் நிருப விளக்கம்)
- ❒ திரும்பிய மனிதன் (ரோமர் நிருப விளக்கம்)
- ❒ நான் நிற்கும் கன்மலை
- ❒ நெஞ்சில் நெருப்பு
- ❒ பூர்வ பாதைகள்
- ❒ பொறுமை இருந்தால் மனிதன் ஆகலாம்!
- ❒ பொற்பழங்கள்
- ❒ பைபிள் பரிசுத்தம்
- ❒ மாணவ மணிகளுக்கு...
- ❒ வல்லமை தேவனுடையது!
- ❒ விசுவாச வாழ்வு

விலைப் பட்டியலுக்கு எழுதுங்கள்.
இப்புத்தகங்களும், ஆசிரியரது திருமறைச்செய்திகள்
அடங்கிய ஒலி-ஒளித்தட்டுகளும் கிடைக்குமிடம்—

Blessing Literature Centre
21/11 West Coovam Road
Chintadripet, Chennai 600 002, India
*Tel: 00 91 44 28450411 <blc@bymonline.org>*

**StanleyOnBible.com**

***A WEBSITE FOR BIBLE LOVERS***

**CONTENTS**

***My Letters***

Stanley talks heart to heart with the Visitors of this Website.

❒

***General Messages***

Enlightening Articles for Christian Growth

❒

***Sermon Outlines***

Outlines on miscellaneous subjects for Personal Meditation and Pulpit Preaching

❒

***Bible Studies***

Studies on specific themes and select books of the Bible

❒

***Doctrinal Essays***

Corrective Teaching to uphold Sound Doctrines of the Bible

❒

***Youth Matters***

Practical Guidelines to Young Men and Young Women for Successful Living

❒

***Leaders Column***

Biblical Insights and Practical Lessons on Christian Leadership

❒

***Missionary Challenge***

Calling Christians to obey the Great Commission of Christ

❒

***My Answers***

Answers to Questions frequently asked but rarely answered

❒

***Quotable Quotes***

Stanley's analytical Statements about Christian Life and Ministry

❒

***Video Talks***

Freely downloadable video and audio sermons of Stanley

*(Register your e-mail id on this website to receive daily devotions & updates instantly.)*



***முடிவு வரிகள் ...***

☐ இப்புத்தகத்திலுள்ள சத்தியங்களை நன்கு புரிந்துகொள்ளவும், அவற்றை உங்கள் வாழ்வில் பயிற்சிக்கவும் இதனை இரு முறையாவது வாசியுங்கள்.

☐ மொத்தமாய்ப் பிரதிகள் வாங்கி உங்கள் நண்பர்களுக்கு அன்பளியுங்கள். புரட்சியாளரான இயேசுவின் வாழ்க்கையைப் படிப்பதன் மூலம் வாலிபர், நங்கையர் பெரும் சவாலடைவர். உங்கள் இல்லத்திற்கு வரும் கிறிஸ்தவ நண்பர்களை ஆசீர்வதிக்க இப்பிரதிகள் எப்பொழுதும் உங்கள் கைவசம் இருக்கட்டும்.

☐ ஆங்கிலத்திலும் தமிழிலும் முழுமையாக இப்புத்தகம் ஆசிரியரின் StanleyOnBible.com என்ற இணையதளத்தில் உண்டு. இலவசமாய்ப் பதிவிறக்கம் செய்து உங்கள் நண்பர்களுக்கு அனுப்பி வைக்கலாம்.

☐ மாதிரிப் பிரதிகளை உங்களூரிலுள்ள கிறிஸ்தவப் புத்தகக் கடைகளில் கொடுத்து தங்கள் வாடிக்கையாளர்களுக்கு இது கிடைக்கும்படிச் செய்ய அவர்களை ஊக்குவியுங்கள்.

☐ இப்புத்தகத்தின் மூலம் நீங்கள் பெற்ற ஆசீர்வாதங்களைப் பகிர்ந்து கொண்டால் ஆசிரியரும் அவரது குழுவினரும் ஊக்கமடைவர்.

☐ ஆசிரியர் எழுதி வெளியிடவிருக்கும் நூல்களுக்காய் ஜெபியுங்கள். 10 மொழிகளில் அவர் செய்யும் இலக்கியப் பணிக்காய் அவரது கரங்களை உங்கள் காணிக்கைகளினால் தாங்குங்கள். வங்கி விபரங்கள் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.